தமிழரசு

Tamilarasu

(Monthly)

பிப்ரவரி 2023 (February 2023)
விலை ரூ.20/– (Price Rs.20/-)

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

மலர் (Vol.) : 53
இதழ் (Issue) : 8

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 02.02.2023 அன்று, “கள ஆய்வில் முதலமைச்சர்” திட்டத்தின்கீழ் வேலூர் மாவட்டத்தில் உள்ள, வேலூர் புறநகர், அலமேலுமங்காபுரம் அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளியில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரத்தினை ஆய்வு செய்து, மாணவர்களுக்கு உணவுப் பரிமாறினார்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித்துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2054
சுபகிருது வருடம் : தை - மாசி

பிப்ரவரி 2023

மலர் : 53 விலை ரூ.20 இதழ் : 8

ஆசிரியர் - வெளியிடுபவர்
த. மோகன், இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
இரா. அண்ணா
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
க.அ. முகம்மது ரசூல்
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
கு. சுபாஷ்
இரா. பாலாஜி
மு. பரத்குமார்

நிருபர்கள்
எஸ்.ஆர்.எஸ்.ஸ்ரீந்தர்
ஜெ.ஜெயசிம்ஹன்

ஓவியர்
இரா. உமாமகேஸ்வரி

இதழ் உதவியாளர்
நி. ஷீலா

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை-600 113.
தொலைபேசி : 22542221/22542224
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தா தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. குறள்: 244

எல்லா உயிர்களிடத்தும் கருணை கொண்டு அவற்றைக் காத்திடுவதைக் கடமையாகக் கொண்ட சான்றோர்கள் தமது உயிரைப் பற்றிக் கவலை அடையமாட்டார்கள்.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ தமிழ்நாடு அரசின் சார்பில் குடியரசு நாள் விழா 4

★ தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட நிருவாகங்களும் வெகு சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதுதான் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின் நோக்கம் 7

★ ரூ.784 கோடி மதிப்பீட்டில் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தில் 5,351 புதிய பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள் 13

★ ரூ.50 கோடி நிதியில் 2,500 திருக்கோயில்களின் திருப்பணிகள் 17

★ "சென்னை இலக்கியத் திருவிழா 2023" கூடிக்கலையும் கூட்டம் அல்ல, கூடிப்படைக்கும் கூட்டம் 21

★ புத்தகச் சந்தைகளும், இலக்கிய விழாக்களும் எழுத்தையும், இலக்கியத்தையும் இன்றைய தலைமுறைக்கு தமிழ் உணர்வை ஊட்டுவதற்காகப் பயன்பட வேண்டும் 26

★ மாணவர்களது அறிவுகலை, கல்வி, பகுத்தறிவு கலையாக வளர வேண்டும் 34

★ நம்மைக் கடலும், கண்டங்களும் பிரித்தாலும் தமிழ் இணைக்கும் 38

★ சென்னை மாநகரில் 60க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகள், 600க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்பு "சென்னை சங்கமம்-நம்ம ஊரு திருவிழா" 48

★ தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளுக்கு கொண்டு சேர்ப்போம் 60

★ மக்கள் மகிழ்ச்சியே நமது இலக்கு 69

முதலாம் பக்க அட்டை

சென்னை, காமராசர் சாலையில் 26.01.2023 அன்று நடைபெற்ற குடியரசு நாள் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆகியோர் பல்வேறு துறைகளின் சார்பில் அரசின் திட்டங்களை விளக்கி அணிவகுத்து வந்த அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பினைப் பார்வையிட்டார்கள்.

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள : tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in



தமிழ்நாடு அரசின் சார்பில் குடியரசு நாள் விழா

தமிழ்நாடு அரசின் சார்பில், குடியரசு நாள் விழாக் கொண்டாட்டம் சென்னை, காமராஜர் சாலையில் உள்ள உழைப்பாளர் சிலை அருகே 26.01.2023 அன்று காலை மிகுந்த உற்சாகத்துடன் தொடங்கியது. விழா நடைபெறும் இடத்திற்கு போக்குவரத்து காவல்படையினரின் மோட்டார் சைக்கிள் அணிவகுப்புடன் வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், விழா மேடையை சுற்றி வந்து பார்வையாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டதற்குப் பிறகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றார்.

இதனைத் தொடர்ந்து, விமானப்படை வீரர்களின் மோட்டார் சைக்கிள் அணிவகுப்புடன் விழா மேடைக்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மலர்கொத்து வழங்கி வரவேற்று முப்படைகளின் உயரதிகாரிகள், காவல்துறை உயர் அதிகாரிகள் ஆகியோர்களை அறிமுகம் செய்து வைத்தார்.

தேசியக் கொடியேற்றம்

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். அப்போது இந்திய விமானப் படையின் ஹெலிகாப்டர் வானத்தில் தாழ்வாகப் பறந்து தேசியக் கொடியின் மீது மலர்தூவி மரியாதை செலுத்திச் சென்றது.

தொடர்ந்து, இராணுவப் படைப்பிரிவு, கடற்படைப் பிரிவு, இராணுவ கூட்டுக்குழல் முரசிசை, வான்படைப் பிரிவு, கடலோரக் காவல் படைப்பிரிவு, கடற்படை ஊர்தி, சி.ஆர்.பி.எப்., சி.ஐ.எஸ்.எப்., ஆர்.பி.எப்., படைப்பிரிவுகள், தமிழ்நாடு சிறப்புக் காவல் (ஆண்கள், பெண்கள்) படைப்பிரிவு, தமிழ்நாடு கமாண்டோ படைப்பிரிவு உட்பட பல்வேறு படைப்பிரிவினர்களின் அணிவகுப்பு மரியாதையை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

வீரதீரச் செயல் புரிந்தமைக்கான விருதுகள்

இதனையடுத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வீரதீரச் செயல் புரிந்தமைக்கான அண்ணா பதக்கங்கள் உள்ளிட்ட பதக்கங்களை வழங்கினார்.

அண்ணா பதக்கம் 2023

அண்ணா பதக்கம் – 2023 (அரசு ஊழியர் பிரிவு) சென்னை, அமைந்தகரை காவல் நிலையத்தைச் சேர்ந்த தலைமைக்காவலர் திரு. பெ.சரவணன்; சென்னை, திருவல்லிக்கேனி, அரசு கஸ்தூரிபா காந்தி சேய்நல மருத்துவமனை செவிலியர் திரு. ஜெயகுமார் பொன்னரசு; அண்ணா பதக்கம் (பொதுமக்கள் பிரிவு) தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், புன்னக்காயல் கிராமத்தைச் சேர்ந்த திரு. ஜே.அந்தோனிசாமி; கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் கோட்டம், தோவாளை வட்டம், காட்டுப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வன் நா. ஸ்ரீகிருஷ்ணன்; தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், அலமேலுபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு.அ.செல்வம் ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம் 2023

மதநல்லிணக்கத்திற்காக சிறந்த சேவையாற்றி வரும் கோயம்புத்தூர் மாவட்டம், தெற்கு உக்கடம், கோட்டை மேடு எஸ்.எஸ்.கோவில் தெருவைச் சேர்ந்த திரு. எம்.ஏ.இனயத்துல்லா அவர்களுக்கு இந்த ஆண்டிற்கான கோட்டை அமீர் மத நல்லிணக்க பதக்கம் வழங்கப்பட்டது.

காந்தியடிகள் காவலர் பதக்கம்

சென்னை மாவட்டம், மத்திய நுண்ணறிவுப் பிரிவு, தலைமையகம் காவல் ஆய்வாளர் திருமதி த.எ.பிரியதர்ஷினி; தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை, மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு. கா. ஜெயமோகன்; சேலம் மண்டலம், மத்திய நுண்ணறிவுப் பிரிவு, காவல் உதவி ஆய்வாளர், திரு.ச.சகாதேவன்; விழுப்புரம்

மண்டலம், மத்திய நுண்ணறிவுப் பிரிவு காவல் உதவி ஆய்வாளர் திரு. பா.இனாயத்பாஷா; செங்கல்பட்டு மாவட்டம், பாலூர் காவல் நிலையம், அயற்பணி மத்திய நுண்ணறிவுப் பிரிவு (அமலாக்கம்) தலைமைக் காவலர் திரு. சு.சிவநேசன் ஆகியோர்களுக்கு காந்தியடிகள் காவலர் பதக்கங்கள் வழங்கப்பட்டது.

சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சரின் விருது

காவல் நிலையங்களுள் மிகவும் சிறப்பாக பணிகளை செய்தல், குற்றங்களைக் குறைத்தல், உடனடியாக நடவடிக்கை எடுத்தல், ஆகிய செயல்பாட்டில் சிறந்த காவல்நிலையத்திற்கான முதலமைச்சர் விருது திருப்பூர் வடக்கு காவல் நிலையத்திற்கான முதல் பரிசினை, திருப்பூர் வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் திரு. நா.உதயகுமார்; திருச்சி மாநகர கோட்டைக் காவல் நிலையத்திற்கான இரண்டாம் பரிசினை, திருச்சி மாநகர கோட்டைக் காவல் நிலைய ஆய்வாளர் திரு. சி.தயாளன்; திண்டுக்கல் வட்ட காவல் நிலையத்திற்கான மூன்றாம் பரிசினை, திண்டுக்கல் வட்ட காவல் நிலைய ஆய்வாளர் திரு.சேதுபாலாண்டி ஆகியோரிடம் வழங்கப்பட்டது.

வேளாண்மைத் துறை சிறப்பு விருது

மாநில அளவில், திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பத்தினை கடைப்பிடித்து அதிக உற்பத்தித் திறன் பெறும் விவசாயிக்கான வேளாண்மைத்துறை சிறப்பு விருது புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி வட்டம், ஆலவயல் கிராமத்தைச் சேர்ந்த திருமதி க.வசந்தா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து, பள்ளிக் கல்லூரி மாணவியர்களின் கிராமியக் கலை நிகழ்ச்சிகள், தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளின் அலங்கார ஊர்திகளின் அணிவகுப்பு நிகழ்ச்சிகளும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் கண்டுகளித்தனர். நிறைவாக நாட்டுப்பண் இசைக்க விழா இனிதே நிறைவுபெற்றது.

“கள ஆய்வில் முதலமைச்சர்” புதிய திட்டம் தொடக்கம்

“தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட நிருவாகங்களும் வெகு சிறப்பாக செயல்படவேண்டும் என்பதுதான் இத்திட்டத்தின் நோக்கம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், நேரடியாக ஆய்வு மேற்கொண்டு தொடங்கி வைத்தார் - 01.02.2023

“கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற புதிய திட்டத்தின் கீழ் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசுத் திட்டங்கள் குறித்து நேரடியாக ஆய்வு மேற்கொள்வதற்காக 01.02.2023 அன்று வேலூர் மாவட்டத்திற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், விவசாய பிரதிநிதிகள், முப்பெரும் உழவர் பெருந்தலைவர் விவசாயிகள் சங்கம், முன்னோடி விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம், தோல்பொருள் உற்பத்தியாளர்கள், வணிகர் பிரதிநிதிகள், மொத்த வாணிப பிரதிநிதிகள், பேருந்து மற்றும் லாரி உரிமையாளர்கள், மகளிர் சுயஉதவிக் குழுவினர், சிறு தொழில் நிறுவன அதிபர்கள் ஆகியோரின் கோரிக்கைகளைக் கேட்டு கலந்துரையாடினார்.

இந்த கலந்துரையாடலின் போது, பல்வேறு விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் இந்தியாவிலேயே முதல்முறையாக வேளாண்மை துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தமைக்காவும், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தை செயல்படுத்தியமைக்காகவும், ஒன்றரை இலட்சம் விவசாயிகளுக்கு இலவச மின்சார இணைப்பு வழங்கியமைக்காகவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்தனர்.

மேலும், தென்பெண்ணை – பாலாறு இணைப்புத் திட்டத்தை செயல்படுத்திடவும், குடியாத்தம் தினசரி மார்க்கெட்டை காய்கறி, மளிகை, பூ, பழம் மற்றும் இறைச்சி ஆகியவற்றை விற்பனை செய்திடும் அனைத்து

வசதியுடன் கூடிய வணிக வளாகமாக அமைத்துத் தர வேண்டும் எனவும் பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் விவசாய சங்க பிரதிநிதிகள் வைத்தனர்.

தோல் பொருள் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் சார்பில் பேர்ணாம்பட்டு கிராமம் மற்றும் நகராட்சியில் அனைத்து தோல் தொழிற்சாலைகளை இணைத்து செயல்பட்டு வரும் பொது தோல் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு வரும் மானியத்தை உயர்த்தி வழங்கிட வேண்டும் போன்ற பல்வேறு கோரிக்கைகள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வைக்கப்பட்டது.

பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் சார்பில் காட்பாடி இரயில்வே மேம்பாலத்தை ஒட்டி கூடுதலாக ஒரு மேம்பாலம் அமைத்து தர வேண்டும் என்றும், போக்குவரத்து நெரிசல் மிக்க காட்பாடி – பாகாயம் சாலைக்கு மாற்றுச் சாலை அமைத்துத் தர வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கைகள் வைக்கப்பட்டது. அதேபோன்று மொத்த வாணிப பிரதிநிதிகள் சார்பாகவும் பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டது.

பல்வேறு சங்கங்களின் கோரிக்கைகளை கேட்டறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அவற்றை பரிசீலித்து உரியவற்றை நிறைவேற்றித் தருவதாக அவர்களிடம் தெரிவித்தார்.

மகளிர் சுயஉதவிக் குழுவினருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருவதற்காக மகளிர் சுயஉதவிக் குழுவினர் தங்களது நன்றியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர். மேலும் இத்தகைய நல்ல திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 02.02.2023 அன்று கள ஆய்வில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ், வேலூர், சத்துவாச்சாரி, பாரதி நகரில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சுகாதார நல மையத்தின் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இம்மையத்தில் மருத்துவம் சார்ந்த தனிநபர் கண்காணிப்பு, மனநலம் சார்ந்த ஆலோசனை போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும்.

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஆய்வு

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் ஏழை எளிய மக்களுடைய குழந்தைகளின் கற்றல் இடைநிற்றலைத் தவிர்க்கவும், ஊட்டச்சத்து குறைபாட்டினைப் போக்கவும், வருகையை அதிகரிக்கவும், வேலைக்கு செல்லும் தாய்மார்களின் பணிச்சுமையைக் குறைக்கவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை 15.09.2022 அன்று தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின்கீழ் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கிட வேலூர் மாநகராட்சியில் முதற்கட்டமாக 48 தொடக்கப் பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, அப்பள்ளியில் பயிலும் 3,249 மாணவ, மாணவியர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு வேலூர் மாநகராட்சிக்குட்பட்ட 34 அரசுப் பள்ளிகளில் பயிலும் 3,701 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

வேலூர், சத்துவாச்சாரி உணவகத்தில் ஆய்வு

மைய சமையற்கூடத்தில் ஆய்வு

உணவு தயாரிப்பு ஊழியர்களிடம் ஆய்வு

ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளியில் உணவு ஆய்வு

முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ், ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு வழங்கப்படும் காலை உணவுக்கான மூலப் பொருட்களின் அளவு 50 கிராம் அரிசி, ரவை, கோதுமை ரவை, சேமியா, உள்ளூரில் விளையும் சிறுதானியங்கள் மற்றும் சாம்பாருக்கான பருப்பு 15 கிராம் மற்றும் உள்ளூரில் கிடைக்கக்கூடிய காய்கறிகள். ஒரு வாரத்தில் குறைந்தது 2 நாட்களாவது உள்ளூரில் கிடைக்கக்கூடிய சிறுதானியங்களால் தயாரிக்கப்பட்ட காலை உணவு வழங்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வேலூர், சத்துவாச்சாரி, சி.எம்.சி. காலனியில் செயல்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் மைய சமையற் கூடத்திற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டு, அங்கு மாணவர்களுக்கு உணவு தயாரிக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், அங்குள்ள ஒவ்வொரு சமையல் அறைகளுக்கும், உணவு ஏற்றும் பகுதிக்கும் சென்று பார்வையிட்டதோடு, உணவு தயாரிப்புப் பணியில் ஈடுபட்டு வரும் ஊழியர்களிடம் உணவினை சுகாதாரமான முறையில் தரமாகவும், சுவையாகவும் தயாரிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

பின்னர், சத்துவாச்சாரி, காந்தி நகரில் உள்ள ஆதிதிராவிடர் நல ஆரம்பப் பள்ளிக்கு நேரில் சென்று, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட காலை சிற்றுண்டி உணவினை உண்டு தரத்தினை ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, அலமேலுமங்காபுரத்தில் 132 மாணவ, மாணவியர்கள் பயிலும் ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின்கீழ் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவினை உண்டு தரத்தினை ஆய்வு செய்து, மாணவர்களுக்கு உணவு பரிமாறினார்.

காலை உணவு தயாரிக்கும் ஊழியர்களுக்கு முதலமைச்சர் அறிவுரை:

இந்த ஆய்வின்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி திங்கட்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் காய்கறி

சாம்பாருடன் கூடிய உப்புமா வகைகளும், செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கிச்சடி வகைகளும், இனிப்பு கேசரியும், புதன்கிழமை காய்கறி சாம்பாருடன் கூடிய பொங்கல் வகைகளும் வழங்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

மேலும், உணவினை காலை 6.30 மணிக்குள் தயாரிக்க வேண்டும் என்றும், அவை காலை 7.30 மணிக்கு பள்ளிகளில் உணவு பரிமாறப்பட வேண்டும் என்றும், மாணவர்களை காத்திருக்க வைக்காமல் உடனுக்குடன் உணவு பரிமாற வேண்டும் என்றும், உணவு உண்ணும் மாணவர்களின் பதிவேடு சரியான முறையில் பராமரிக்கப்பட வேண்டும் என்றும், சத்தான மற்றும் தரமான உணவினை மாணவர்களுக்கு வழங்கிட அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் உணவு தயாரிக்கும் ஊழியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

அதன் தொடர்ச்சியாக, 02.02.2023 அன்று காலை சத்துவாச்சாரியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் சுகாதார நல மையக் கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகள் மற்றும் வேலூர் அரசு ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் ஆகியவற்றை "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அதன் பின்னர், வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் "கள ஆய்வில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றியதாவது:

"உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

'கள ஆய்வில் முதலமைச்சர்' என்ற திட்டத்தின்கீழ் நடைபெறும் முதலாவது கூட்டம் இந்தக் கூட்டம். கள ஆய்வை வேலூரில் இருந்து தொடங்கியதை நான் மகிழ்ச்சியாகக் கருதுகிறேன். முதலமைச்சர் பொறுப்பேற்றுள்ள நான் உட்பட மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர், துறையின் முதன்மைச் செயலாளர்கள், அரசுச் செயலாளர்கள், துறைத் தலைவர்கள் என பல்வேறு துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளும் நேற்றைய தினம் இந்த நான்கு மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று தங்கள் துறை தொடர்பான ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், இந்த ஆய்வுக் கூட்டத்தில் பல பணிகள் ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தக் கூட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஏதோ குறைகளைக் கண்டுபிடிப்பதற்காக நடத்துகின்ற கூட்டம் அல்ல, இதனுடைய நோக்கம் அது அல்ல. மக்களுக்கான பணி சிறக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கருதித்தான் இந்தக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம்.

மக்களுக்காகத்தான் அரசு! மக்களை மையப்படுத்தி இயங்குவதுதான் ஒரு நல்லரசாக அமைந்திட முடியும். இதை நாங்கள் மட்டுமல்ல, நீங்களும் நன்றாக அறிந்து வைத்திருக்கிறீர்கள். அந்த எண்ணத்தை நெஞ்சில் ஏந்தித்தான் நாம் அனைவரும் செயல்பட்டாக வேண்டும். சுணக்கம் காணப்படக்கூடிய சில பணிகள் இந்தக் கூட்டத்தில் அடையாளம் காணப்பட்டது. அதை நீங்களும் சொல்லியிருக்கிறீர்கள். விரைவிலே நிறைவேற்றுவோம் என்கிற நம்பிக்கையையும் சொல்லியிருக்கிறீர்கள். அதை செய்ய வேண்டிய பொறுப்பு உங்களிடத்தில் இருக்கிறது. நிர்வாகம் நல்ல வகையில் மேம்பட வேண்டும்; தொய்வுகளை நீக்க வேண்டும். நம்முடைய பணிகளில் காணக்கூடிய இடர்களையெல்லாம் குறைக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும். உங்களை உற்சாகப்படுத்துவதற்கும், உங்கள் பிரச்சினையை நேரடியாக அறிவதற்கும்தான் இந்த ஆய்வுக் கூட்டம். உங்களுடைய கருத்துக்களெல்லாம் அரசினுடைய கவனத்தில் நிச்சயமாக ஏற்றுக்கொள்ளப்படும். சிறப்பாக அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்டு வரக்கூடிய அரசுத் துறை அலுவலர்கள் அனைவருக்கும் இந்தத் தருணத்தில் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 20 மாத காலத்தில் நாம் ஆட்சிக்கு வந்து, எத்தனையோ திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். அப்படி தீட்டிய திட்டங்களில் 80 சதவிகிதத்திற்கு மேற்பட்ட பணிகளை நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம். இதெல்லாம் உங்களுடைய ஒத்துழைப்பால்தான், உங்களுடைய செயல்திறத்தால் தான் அதையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம். அதற்காக முதலில் என்னுடைய நன்றியை உங்கள் அனைவருக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த ஒத்துழைப்பை நீங்கள் தொடர்ந்து வழங்க வேண்டும், இன்னும் வேகமாக வழங்க வேண்டும்.

இந்த ஆய்வின் போது,

- ✪ குடிநீர் மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள்,
- ✪ வருவாய்த் துறை வழங்கக்கூடிய பட்டா மாறுதல் உள்ளிட்ட சேவைகள்,
- ✪ ஊரக மேம்பாடு, விளிம்பு நிலை மக்களுடைய நலன்,
- ✪ நகர்ப்புற வளர்ச்சி,
- ✪ சாலை மேம்பாடு,
- ✪ வாழ்வாதாரத்தை உயர்த்துதல்,
- ✪ இளைஞர் திறன் மேம்பாடு,
- ✪ பொதுக் கட்டமைப்பு வசதிகள்,
- ✪ கல்வி,
- ✪ மருத்துவம்,
- ✪ குழந்தைகள் ஊட்டச்சத்து

போன்ற முக்கிய துறைகளைச் சார்ந்த திட்டங்களின் செயல்பாடுகள் குறித்தும் அதனுடைய பயன் பொதுமக்களுக்கு முழுமையாகச் சென்றடைவது குறித்தும் இந்த ஆய்வில் நாம் மேற்கொண்டிருக்கிறோம். இந்தத் துறைகள் சார்பாக அறிவிக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் எந்தளவிற்கு செயலாக்கம் பெற்றுள்ளன, செயல்படுத்துவதற்கு தயார் நிலையில் இருக்கிறோம் என்பதை நாம் ஆய்வு செய்திருக்கிறோம்.

இந்த களப்பணி மற்றும் ஆய்வுக் கூட்டத்தை பயன்படுத்திக்கொண்டு துறைத் தலைவர்களும் அரசு செயலர்களும் உரிய தொடர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். திட்ட செயலாக்கத்தில் ஏதேனும் மாற்றம் செய்ய வேண்டுமென்றால், அதற்கான திருத்த ஆணை வெளியிடலாம். நிதி தேவை அல்லது பணியாளர் பற்றாக்குறை இருந்தால் அதைச் சரிசெய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். செயலாளர்களையும், துறைத் தலைவர்களையும் இதைத்தான் நான் வலியுறுத்தி,வற்புறுத்தி கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

வழக்கமாக தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட முதன்மைச் செயலாளர்கள், துறைத் தலைவர்களைத்தான் நான் சந்திப்பேன். அதோடு மாவட்ட ஆட்சியர்கள், காவல்துறை கண்காணிப்பாளர்கள் ஆய்வுக் கூட்டங்களை நடத்தியிருக்கிறேன். ஆனால் அதைவிட இப்படி அடுத்தகட்ட அலுவலர்களோடு அந்த மண்டலத்திற்கே வந்து கலந்துரையாட வேண்டும் என்று முடிவு செய்து, அந்தப் பணியை இப்போது நிறைவேற்றத் தொடங்கி இருக்கிறோம்.

நீங்கள் எல்லோரும் ஒவ்வொரு திட்டத்தின் செயல்பாடு மற்றும் அதன் காரணமாக மக்கள் பெறக்கூடிய பயன்கள் குறித்து பார்க்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள். திட்டங்களின் சாதக, பாதகங்கள் என்ன என்று கண்ணுக்கு முன்னால் கவனிப்பவர்கள் நீங்கள். அந்த அடிப்படையில் இந்தக் கூட்டம் மிகமிக முக்கியமான கூட்டமாக அமைந்திருக்கிறது.

அதேபோல் எல்லோரையும் ஒருசேரச் சந்திப்பதும் மிகமிக முக்கியமானது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையைக் கவனித்து வந்தாலும் -

யாரும் தனியாகச் செயல்பட முடியாது. அப்படி செயல்பட முற்பட்டால் அது தாமதத்திற்குதான் வழிவகுக்கும். அரசுத் துறைகள் எல்லாம் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. அதனால், பலரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்பதுதான் அடிப்படையான வழிமுறை.

உங்கள் பணிகளையெல்லாம் இணைக்கும் ஒரே விபரம் மக்கள் நலன். அதனை நீங்கள் மறக்கவே கூடாது. பட்டா மாறுதல், சான்றிதழ் பெறுதல், அரசு நலத்திட்டங்களின் பயனடைதல் ஆகியவை எளிமையாக நடைபெற வேண்டும். மக்கள் இதற்காக சில இடங்களில் அலைய வைக்கப்படுகிறார்கள் என்ற தகவலும் வருகிறது. இதனை மாவட்ட ஆட்சியாளர்கள் கண்காணித்து தடுக்க வேண்டும். சிறப்பாகப் பணியாற்றக்கூடிய அலுவலர்களைப் பாராட்டுங்கள், அது மற்றவர்களை ஊக்கப்படுத்தும். பின்தங்கும் அலுவலர்களுக்கு வழிகாட்டி, அவர்களது பணியும் மேம்படுவதை மாவட்ட ஆட்சியாளர்களே நீங்களும் துறைத்தலைவர்களிடம் உறுதி செய்ய வேண்டும். அனைத்து துறை வளர்ச்சி என்ற இலக்கோடுதான் நாம் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறோம். அத்தகைய சிந்தனையோடுதான் திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.

தமிழ்நாடு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள், ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டிருக்கக்கூடிய வாக்குறுதிகள் இதையெல்லாம் முதல்கட்ட அடிப்படையாக வைத்து திட்டங்களை தீட்டினோம்.

அடுத்த கட்டமாக அமைச்சர்கள் – செயலாளர்கள், அவர்களோடு கலந்துரையாடல்கள் மூலமாகப் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

அதன்பிறகு சட்டமன்றக் கூட்டத்தொடரில் வைக்கப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில் பல திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

அரசின் சார்பில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு மூலமாக பெறப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையிலும் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

மாவட்ட நிருவாகமாகிய உங்கள் கோரிக்கைகளின் அடிப்படையிலும் பல திட்டங்கள் தீட்டப்பட்டன.

இப்படி பல்வேறு வழிமுறைகளில் திட்டங்கள் பிறந்தாலும் அதனை முழுமையாக மக்களிடம் கொண்டுசெல்ல வேண்டிய கடமையும் பொறுப்பும் அலுவலர்களாகிய உங்களுக்குத்தான் அதிகம் இருக்கிறது.

அடுத்ததாக, ஒவ்வொரு திட்டமும் என்ன நோக்கத்துக்காக உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் சிதையாமலும், அந்த நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றிக் காட்டும் வகையிலும் உங்களது செயல்பாடுகள் அமைய வேண்டும்.

பலகோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒவ்வொரு திட்டமும் அறிவிக்கப்படுகிறது. பல்வேறு நிதி அமைப்புகளிடம் அரசு கருவூலத்தில் இருக்கும் பணத்தின் மூலமாக மட்டுமல்ல, கடன் வாங்கியும் பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகிறது. மக்களின் வரிப்பணமும் அரசின் நிதியில் உள்ளது. அதனால் திட்டங்களுக்கான நிதி வீணாகிவிடாமல் விரைவாகவும் - சிக்கனமாகவும் திட்டங்களை நீங்கள் செயல்படுத்த வேண்டும்.

திட்டப்பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதிக்குள் குறைவாகச் செலவு செய்து பணியை முடிப்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

அதேபோல் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாகத் திட்டப்பணிகளை முடிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்க வேண்டும்.

ஏதாவது ஒரு திட்டம் முடக்கப்பட்டாலோ, சுணக்கமாக நடந்தாலோ அது அரசின்மீது விமர்சனமாக வைக்கப்படுகிறது. எனவே, இதில் நீங்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அந்தந்த நிதி ஆண்டுக்கான பணிகள் அந்த ஆண்டுக்குள் முடிக்கப்பட வேண்டும்.

டெண்டர் விட்டோம் - திட்டத்தை முடித்துத் தர வேண்டியது ஒப்பந்ததாரரின் வேலை என்று இருந்து விடாமல் அதனை தொடர்ந்து கண்காணிக்க வேண்டியக் கடமை உங்களுடைய கடமை.

சார்நிலை அலுவலர்களின் பணியைக் கண்காணித்து, ஒருங்கிணைத்து செயல்படாததால் திட்டங்களை முழுமையாக நிறைவேற்றுவதில் காலதாமதமும் தொய்வும் ஏற்படுகிறது என்று நான் கருதுகிறேன். எனவே, இதுபோன்ற ஆலோசனைக் கூட்டங்களை, கண்காணிப்பு கூட்டங்களை, திட்டமிடும் கூட்டங்களை, கலந்துரையாடும் கூட்டங்களை உங்களுக்குக் கீழே இருக்கக்கூடிய அதிகாரிகளுடன் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். தொடர்ந்து தீவிர கள ஆய்வுகளை மேற்கொள்ளுங்கள். மக்களோடு கலந்து பழகுங்கள், அவர்களின் தேவையை உணர்ந்து செயல்படுங்கள். அரசு ஆணைகளை மட்டும் செயல்படுத்துபவராக இல்லாமல், உங்களது கனவுத் திட்டங்களையும் அரசுக்குச் சொல்லி, அதனையும் செயல்படுத்த முனையும் திறன் கொண்டவர்களாக நீங்கள் அனைவரும் இருக்க வேண்டும்.

அரசினுடைய முன்னுரிமை பணிகள் (Priority items) எவை என்பதை உணர்ந்து மாவட்ட நிருவாகம் செயல்பட வேண்டும். மாவட்ட அளவில் இருக்கும் நீங்கள் உங்களது மாவட்ட எல்லைக்குட்பட்ட பணிகளை உன்னிப்பாக, கவனமாகக் கண்காணித்து செயல்படுத்தினால் அனைத்து திட்டங்களும் முழுமையாக மக்களைப் போய் சென்றடையும்.

அடுத்தடுத்த மாதத்தில் தமிழ்நாடு அரசினுடைய நிதிநிலை அறிக்கை தாக்கல் ஆக இருக்கிறது. அதன்பிறகு, அமைச்சருடைய துறை மானியக் கோரிக்கைகள் தாக்கல் ஆக இருக்கிறது. புதியப்புதிய திட்டங்கள் ஏராளமாக சேர்ந்துவிடும். அதற்கு முன்னதாகவே, இதுவரை அறிவிக்கப்பட்டிருக்கக்கூடிய திட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்திக் காட்டுங்கள் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்கிறேன்.

பல ஆண்டு அனுபவமும் பல்துறை ஆற்றலும் கொண்டவர்கள் நீங்கள்.

உங்களுக்கு இதற்கு மேல் சொல்லத் தேவையில்லை.

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களும் வெகுசிறப்பாக செயல்பட வேண்டும் என்பதுதான் “கள ஆய்வில் முதலமைச்சர்” என்ற திட்டத்தினுடைய நோக்கம். அதற்கு இந்த ஆய்வுக்கூட்டம் ஒரு சிறப்பான முதல் படியாக அமைந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

அந்த வகையில் உங்கள் அனைவருடைய பணியும் சிறந்து மேம்பட, தமிழ்நாடு எல்லா வகையிலும் உன்னத நிலையை அடைந்திட மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வருவாய் அலுவலர்கள் மற்றும் துறை அலுவலர்கள் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்து, உங்களுடைய அரிய பல கருத்துக்களை இங்கே வழங்கிய உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கிறேன்.”

ரூ.784 கோடி மதிப்பீட்டில் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தில் 5,351 புதிய பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள்

வேலூர் மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை - 01.02.2023

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 01.02.2023 அன்று வேலூர் மாவட்டம், காட்பாடி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.2,400 கோடி நிதியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை மூலம் தமிழ்நாடு முழுவதும் ரூ.784 கோடி மதிப்பீட்டில் 5,351 புதிய பள்ளி வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிக்கான குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை தொடங்கி வைத்து, வேலூர் மாவட்டத்தில் வேலூர், காட்பாடி, குடியாத்தம், அணைக்கட்டு, கணியம்பாடி, பேர்ணாம்பட்டு, கீ.வ. குப்பம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 55 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ.15.96 கோடி மதிப்பீட்டில் 114 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாட்டு மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, அவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்திட "இல்லம் தேடி கல்வி", "எண்ணும் எழுத்தும்", "நம் பள்ளி நம் பெருமை" போன்ற திட்டங்களை செயல்படுத்துதல், அரசுப் பள்ளிகளின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்தோடு "நம்ம ஸ்கூல் பவுண்டேசன்", காலையில் பள்ளிக்கு வரும் மாணவ, மாணவியர்கள் பசியின்றி கல்வி கற்க 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருவதுடன், ஊரகப் பகுதிகளில் ஏற்கனவே கட்டப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை வாயிலாக அமைத்து பராமரித்து வருகின்றது.

குழந்தைகள் சிறந்த முறையில் கற்பதற்கு ஏற்ற இணக்கமான சூழல் அவசியமாகும். இதனைக் கருத்தில் கொண்டு இவ்வரசு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம், நமக்கு நாமே திட்டம், ஊராட்சி ஒன்றிய பொது நிதி, கனிம நிதி, சமூக பொறுப்பு நிதி ஆகிய திட்டங்களின்கீழ், கடந்த இரண்டு நிதியாண்டுகளில், இதுவரை 466 பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.90 கோடி,

2,834 கழிவறைகள், 1,729 சமையலறைக் கூடங்கள், 639 குடிநீர் பணிகள், 139 சுற்றுச்சுவர் பணிகள் ஆகியவற்றிற்கு மொத்தம் ரூ.263 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுதவிர, பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள ரூ.127 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

கற்றல் கற்பித்தலுக்கு உகந்த சூழலை வழங்குவதற்கும், மாணவர் வருகையை அதிகரிப்பதற்கும் மாணவர்களின் கல்வித்திறனை மேம்படுத்துவதற்கும் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமான ஒன்றாகும். இதனைக் கருத்தில்கொண்டு, ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு ரூ.800 கோடி மதிப்பீட்டில் 6,000 புதிய வகுப்பறைகள் நடப்பாண்டில் கட்டப்படும் என்றும், பள்ளிகளின் பராமரிப்புப் பணிகளுக்கென, ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள ரூ.150 கோடி நிதியுடன் சேர்த்து தற்போது ரூ.115 கோடி கூடுதலாக ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 19.10.2022 அன்று சட்டப்பேரவை விதி 110இன் கீழ் அறிவித்தார்.

இந்த அறிவிப்பின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் 2,72,857 மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் 36 மாவட்டங்களில் 2,381 ஊராட்சி ஒன்றிய தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2,462 பள்ளிக் கட்டடங்கள் 5,351 குழந்தை நேய அம்சங்களுடன் கூடிய புதிய வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிக்கான குழந்தை நேய பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

வேலூர் மாவட்டம்

இத்திட்டத்தின்கீழ், வேலூர் மாவட்டத்தில், வேலூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.1.92 கோடி மதிப்பீட்டில் 7 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், காட்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.2.07 கோடி மதிப்பீட்டில் 6 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், குடியாத்தம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.1.99 கோடி மதிப்பீட்டில் 7 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், அணைக்கட்டு ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.4.56 கோடி மதிப்பீட்டில் 16 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.2.85 கோடி மதிப்பீட்டில் 10 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், பேர்ணாம்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.1.71 கோடி மதிப்பீட்டில் 6 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், கீ.வ. குப்பம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ.85.90 இலட்சம் மதிப்பீட்டில் 3 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள், என மொத்தம் 55 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ.15.96 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்டும் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை:

“உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

இந்தப் பள்ளியினுடைய நிகழ்ச்சிக்கு வருகை தந்து பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடிய இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

இந்தப் பள்ளி வளாகத்திற்குள் நுழைகிறபோது, நம்முடைய நீர்வளத்துறை அமைச்சர் அண்ணன் துரைமுருகன் அவர்கள் ஒன்றை குறிப்பிட்டுச் சொன்னார்கள், அதைப் பெருமையோடு சொன்னார்கள், நான் படித்த பள்ளி இந்தப் பள்ளி. அந்தப் பள்ளிக்குள்ளே நுழைகிறோம் என்று பெருமையோடு எடுத்துச் சொன்னார்கள். எனவே, அவரை ஆளாக்கியிருக்கக்கூடிய, அவரைப் போன்ற பல்வேறு மாணவச் செல்வங்களை எல்லாம் உருவாக்கி இருக்கக்கூடிய, இன்னும் உருவாக்க இருக்கக்கூடிய இந்தப் பள்ளியில் நடைபெறக்கூடிய நிகழ்ச்சியில் பங்கேற்பதில் மீண்டும் நான் பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரைக்கும் நம்முடைய மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. ஐ.பெரியசாமி அவர்கள் விளக்கமாக உங்களிடத்தில் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.2,400 கோடி அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, பாழடைந்து இருக்கக் கூடிய பள்ளிக் கட்டடங்களை பழுதாகிப் போயிருக்கக் கூடிய வகுப்பறைகளை சீர்செய்திட வேண்டும், புதுப்பிக்க வேண்டும் என்கிற ஒரு நல்ல எண்ணத்தோடு இந்தத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்படி உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய இந்தத் திட்டத்திற்கு நம்முடைய அரசு

ஒதுக்கியிருக்கக்கூடிய தொகை ரூ.2,400 கோடி. அதில் குறிப்பாக, இன்றைக்கு மட்டும் இந்தத் திட்டத்தின் மூலமாக, நீங்கள் காணொளிக் காட்சியில் பார்த்திருப்பீர்கள், பல்வேறு மாவட்டங்களில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிகழ்ச்சிகளில் ஆங்காங்கு இருக்கக்கூடிய அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், ஆட்சித் தலைவர்கள் எல்லாம் அதில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இன்றைக்கு மட்டும் ரூ.784 கோடி மதிப்பீட்டில் 5,351 புதிய பள்ளி வகுப்பறைகள் கட்டக்கூடிய அந்தப் பணிக்கான அடிக்கல் நாட்டு விழாவை இங்கு உங்கள் முன்னாலே நாம் நிறைவேற்றிக் காட்டியிருக்கிறோம்.

அதிலே குறிப்பாக, இந்த வேலூர் மாவட்டத்தைக் பொறுத்தவரைக்கும் 7 ஊராட்சி ஒன்றியங்களில் 55 தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ரூ.15.96 கோடி மதிப்பீட்டில் 114 வகுப்பறைக் கட்டடங்கள் கட்டுவதற்காக இந்த விழாவிலே அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட இந்த நிலையில், இவ்விழாவை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

கல்வி – மருத்துவம் இரு கண்கள்

நான் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பங்கேற்கின்ற நேரத்தில் தவறாமல் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. நம்முடைய அரசைப் பொறுத்தவரைக்கும் கல்வியை, மருத்துவத்தை இரண்டு கண்களாக நாங்கள் பாவித்து அதற்காக நாங்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறோம் என்று பலமுறை நான் எடுத்துச் சொன்னதுண்டு. அந்த வகையில் தான், இன்றைக்கு இந்தத் திட்டம் அடிக்கல் நாட்டிவைக்கப்பட்டு தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது.

காலை உணவுத் திட்டம்

நான் முதலமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டு நம்முடைய ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால், பல்வேறு நிகழ்ச்சிகளுக்குச் சென்ற நேரத்தில், அந்தந்த மாவட்டங்களில் அந்தந்த பகுதிகளில் திடீர் திடீரென்று ஆய்வுக்கு நான் செல்வதுண்டு. அப்படிப்பட்ட ஆய்வுக்கு செல்கிறபோது பல பள்ளிகளுக்குச் சென்றபோது, அந்தப் பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கக்கூடிய மாணவர்கள், மாணவியர்கள் எல்லாம் என்னிடத்திலே சொல்வதுண்டு, நாங்கள் காலையில் கூட உணவு அருந்தாமல் பள்ளிக்கு வந்து விடுகிறோம் என்று உருக்கத்தோடு சொன்னார்கள். அதைக் கேட்டுவிட்டு நான் அதிர்ச்சி அடைந்தேன். அதற்குப் பின்னால் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளையெல்லாம் அழைத்து, அதற்குப் பிறகு ஆய்வு நடத்தி அதைத் தொடர்ந்துதான், எப்படி மதிய உணவுத் திட்டத்தை நாம் அரசின் சார்பில் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோமோ, அதேபோல் காலை உணவுத் திட்டம் ஒன்றை கொண்டு வர வேண்டும் என்று முடிவு செய்து, அந்த திட்டத்தையும் அறிமுகப்படுத்தி, கடந்த செப்டம்பர் மாதம் 15ஆம் தேதி அண்ணா பிறந்தநாள் அன்று அந்தத் திட்டம் தொடங்கப்பட்டு ஒரு பகுதியிலே, ஒரு சில மாவட்டங்களில் அது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. விரைவில் முழுமையாக அதுவும் நிறைவேற்றப்பட இருக்கிறது.

கூடுதல் பள்ளிக் கட்டடங்கள்

அதேபோலத்தான் பல பள்ளிக் கட்டடங்கள் இடிந்த நிலையில், வகுப்பறைகள் இல்லாத வகையில் மரத்தடி நிழல்களில் உட்கார வைத்து அதில் வகுப்புகள் நடத்தக்கூடிய அந்தக் காட்சிகளையும் நாங்கள் கண்கூடாகப் பார்த்தோம். இதையெல்லாம் உடனடியாக சீர்செய்ய வேண்டும், அந்த மாணவர்கள் வசதியாக நல்லவித அடிப்படை வசதிகளை ஏற்றுக்கொண்டு அவர்கள் படிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய சிந்தனைகள் அந்தக் கல்வியைப் போய் சேர முடியும் என்பதை ஆழ்ந்து சிந்தித்து, அதற்குப் பிறகு பேராசிரியர் அன்பழகன் பெயரிலே இந்தப் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தினை அறிவித்திருக்கிறோம். அதற்காக ரூ.2,400 கோடி ஒதுக்கீடு செய்து அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று முடிவு செய்து, அந்தப் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

எனவே, இதன்மூலமாக பல பள்ளிகள் பாழடைந்திருக்கக்கூடிய, சீரழிந்திருக்கக்கூடிய அந்தப் பள்ளிகளெல்லாம் இன்றைக்கு மேம்படக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். இதை நல்ல வகையில், அந்தந்த பகுதியிலே இருக்கக்கூடிய அந்தந்தப் பள்ளி மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே உங்களை எல்லாம் அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த சிறப்பான நிகழ்ச்சியை மிகுந்த எழுச்சியோடு ஏற்பாடு செய்திருக்கக்கூடிய இந்த மாவட்டத்தினுடைய ஆட்சித்தலைவருக்கும், கல்வித்துறையைச் சார்ந்திருக்கக்கூடிய அதிகாரிகளுக்கும், இங்கு இருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர் பெருமக்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் மாணவச் செல்வங்களுக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்."

நன்றி, வணக்கம்.

உடற்கல்வியியல், விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.15.60 கோடி செலவில் பல்நோக்கு உட்கட்டமைப்பு வசதிகள்

செங்கல்பட்டு மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 03.01.2023 அன்று தலைமைச் செயலகத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின்கீழ் செயல்படும் தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.15.60 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு ஜிம்னாஷியம், செயற்கையிழை ஓடுதளம் மற்றும் ஆசிரியர்களுக்கான குடியிருப்புகள் ஆகியவற்றைத் திறந்துவைத்தார்.

விளையாட்டு மற்றும் இளைஞர் மேம்பாட்டில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிடவும், அகில இந்திய அளவிலும் பன்னாட்டு அளவிலும் நடைபெறும் பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் பங்குகொண்டு வெற்றி பெறும் வகையில் அவர்களுக்கு உரிய பயிற்சி அளித்தல், விளையாட்டிற்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் என பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது.

அந்த வகையில், செங்கல்பட்டு மாவட்டம், வண்டலூரை அடுத்த மேலக்கோட்டையூரில் அமைந்துள்ள தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழக வளாகத்தில் ரூ.7 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 400 மீட்டர் செயற்கையிழை ஓடுதளம், ரூ.5.10 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள பல்நோக்கு ஜிம்னாஷியம் மற்றும் ரூ.3.50 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள ஆசிரியர்களுக்கான குடியிருப்புகள் என மொத்தம் ரூ.15.60 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள விளையாட்டு உட்கட்டமைப்பு வசதிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்துவைத்தார்.

ரூ.50 கோடி நிதியில் 2,500 கிராமப்புற திருக்கோயில்களின் திருப்பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
இந்து சமய அறநிலையங்கள் துறை சார்பில்
2,500 திருக்கோயில்களுக்கு
ரூ.50 கோடி நிதி வழங்கும் விழாவில்
ஆற்றிய உரை - 05.01.2023

"உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை, நன்றியை மிகுந்த மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2022ஆம் ஆண்டு மட்டும், அதாவது கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் 640க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளில் நான் பங்கெடுத்திருக்கிறேன். மீண்டும் சொல்கிறேன், கடந்த ஆண்டு மட்டும் நான் 640க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறேன். இந்த 640இல் 551 நிகழ்ச்சிகள் அரசு நிகழ்ச்சிகள். 95க்கும் மேற்பட்டவை கழக நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகள். மொத்தமாகச் சொல்வதாக இருந்தால், கடந்த ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டில் 8,550 கிலோ மீட்டருக்கு மேல் நான் சுற்றி வந்திருக்கிறேன்.

மக்களுக்கு நேரடியாக வழங்கப்பட்டிருக்கக் கூடிய உதவிகள் மூலம் ஒரு கோடியே 3 இலட்சத்து, 74 ஆயிரத்து 355 பேர் பயனடைந்திருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் மூலமாகப் பயனடைந்தவர்கள் இவர்கள்.

இந்தப் புள்ளிவிவரத்தை கடந்த வாரம் நான் திருச்சியில் நடைபெற்ற அரசு நிகழ்ச்சியில் விளக்கமாகச் சொல்லி இருக்கிறேன். எந்தத் துறை சார்பில் நிகழ்ச்சிகளில் நான் அதிகம் கலந்து கொண்டிருக்கக்கூடிய விபரம், அதில் முக்கியமாகச் சொல்ல வேண்டுமென்றால், உள்துறை சார்ந்த அதாவது என் பொறுப்பில் இருக்கக்கூடிய உள்துறை, காவல்துறை. அந்த உள்துறை சார்ந்த நிகழ்ச்சிகள்தான் அதிகம், 32 நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். மற்ற துறைகளில் அதிகமாக நான் கலந்து கொண்டது தொழில் துறை. அந்தத் தொழில் துறையில் 30 நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருக்கிறேன். அதற்கடுத்து இருக்கிறது எது என்று கேட்டீர்கள் என்றால், இந்து சமய அறநிலையத்துறைதான்.

இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில், 25 நிகழ்ச்சிகளில் நான் கலந்து கொண்டிருக்கிறேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த வெற்றிக்குக் காரணமான நம்முடைய செயல்பாபு என்று போற்றப்படக்கூடிய சேகர் பாபுவை நான் பாராட்டுகிறேன். அவர் நினைக்கலாம், என்ன, மூன்றாவது இடத்தில் தானே இருக்கிறோம், முதலிடத்திற்கு வரவேண்டுமே என்பதற்காக நாளையில் இருந்து வாராவாரம் தேதி கேட்டுவிடக் கூடாது, அதற்கு இப்போதே அவர் திட்டம் போட்டிருப்பார், அதுவும் எனக்கு நன்றாகத் தெரியும். அனைத்துத் துறையும் வளர்வதுதான், வளர வேண்டும் என்று எண்ணுவது தான் திராவிட மாடல் ஆட்சி என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், இன்றைக்கு திராவிடம் என்ற சொல்லைப் பிடிக்காதவர்கள், என்ன சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால், எங்களை மதத்தின் விரோதிகளாகச் சித்தரிக்கிற முயற்சிகளில் நிறைய ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.நான் அவர்களுக்கெல்லாம் மிகுந்த பணிவோடு இந்த விழாவின் மூலமாக தெரிவிக்க விரும்புவது, நாங்கள் மதவாதத்துக்குத்தான் எதிரிகளே தவிர,

ஆன்மிகப் பெரியவர்கள், அருள் நெறியாளர்கள் முன்னிலையில் ரூ.50 கோடி நிதி வழங்குதல்

மதத்திற்கு எதிரிகள் அல்ல. இதை அறிய வேண்டியவர்கள் அறிந்து கொண்டால் போதும், இந்த நிகழ்ச்சியின் மூலமாக அறிந்து கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை இந்த நிகழ்ச்சியை நேரடியாக வந்து பார்க்க முடியாது அவர்களால், ஏனென்றால் அவர்கள் மிகப்பெரிய இடத்தில் இருக்கிறார்கள். ஆனால், நிச்சயம் தொலைக்காட்சி மூலமாகப் பார்த்துக் கொண்டிருப்பார்கள், நாளைக்கு காலையில் பத்திரிகையிலும் பார்ப்பார்கள். ஆக, இதை அவர்கள் உணர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

2,500 கிராமப்புறக் கோயில்கள் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பகுதி கோயில்களின் திருப்பணிக்குத் தலா ரூ.2 இலட்சத்திற்கான காசோலை வழங்கக்கூடிய விழா இது. ரூ.50 கோடி நிதி வழங்கக்கூடிய நிகழ்ச்சியாக இந்த நிகழ்ச்சி மிகச் சிறப்பாக, எழுச்சியோடு நம்முடைய ஆதீனங்களெல்லாம் பாராட்டக்கூடிய வகையில் இந்த நிகழச்சி நடந்து கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் இருக்கக்கூடிய மிக முக்கியமான ஆன்மிகப் பெரியவர்கள், அருள் நெறியாளர்கள் முன்னிலையில் இந்த கோயில்களுக்கான நிதியை அரசின் சார்பில் நாங்கள் வழங்கி இருக்கிறோம்.

நம்முடைய கழக ஆட்சி மலர்ந்ததற்குப் பிறகு, திருக்கோயில்களுக்கு ஏராளமான பணிகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் இந்த விழா. இந்தத் திருக்கோயில் பணிகளைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டுமென்றால், நாங்களாக எதையும் செய்யவில்லை. இதற்கான வல்லுநர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வல்லுநர் குழுவின் ஆலோசனைப்படிதான் இதையெல்லாம் நாம் செய்து கொண்டிருக்கிறோம்.

இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் 43 ஆயிரம் கோயில்கள்

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் 43 ஆயிரம் கோயில்கள் இருக்கின்றன. பழைய நிலையில் இருக்கக்கூடிய அந்தக் கோயில்களைப் புதுப்பிக்க, அப்படிப் புதுப்பிக்கும் நேரத்தில், பழமை மாறாமல் அதை சீர்செய்ய குடமுழுக்கு விழாவை நடத்த இந்த அரசு உத்தரவிட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அதேபோல் கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு நவீன வசதிகள் கொண்ட அடிப்படைப் பணிகள் செய்து தரப்பட்டுள்ளன.

மண்டல, மாநில அளவிலான வல்லுநர் குழு

திருக்கோயில் பணிகளை மேற்கொள்ள மண்டல, மாநில அளவிலான வல்லுநர் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினுடைய ஒப்புதல் பெற்ற பிறகுதான் இந்த செயல்பாடுகள் எல்லாம் செய்யப்படுகின்றன. தற்போது வரை 3,986 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்வதற்கு வல்லுநர் குழுவால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

1,000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களைப் பழமை மாறாமல் சீர்செய்வதற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களைச் சீரமைக்கும் வகையில் கருத்துருக்களை வழங்குவதற்கு சென்னை, கோவை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்டு 4 ஆலோசகர்களும், திருக்கோயில்களிலுள்ள பழமையான மூலிகை ஓவியங்களைப் பாதுகாக்கும் வகையிலான வழிமுறைகளை வழங்குவதற்கு தனி ஆலோசகரும் நியமிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

நம்முடைய இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கை சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டபோது, அமைச்சர் சேகர் பாபு அவர்கள் ஏராளமான அறிவிப்புகளைச் செய்தார். சட்டமன்றத்தில் அறிவிக்க நேரம் இல்லாமல் -

முக்கியமானதை மட்டும்தான் அறிவித்தார். மற்றவைகளை, பேசியதாகப் பதிவு செய்ததாக அவர் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்.

இந்த நிகழ்ச்சிக்குத் தயாராகும்போது, அப்படி அறிவிக்கப்பட்டதில் எத்தனை நிறைவேற்றப்பட்டுள்ளது என்று அமைச்சர் சேகர்பாபுவிடம் நான் கேட்டேன். அவர் சொன்னார்,

2021-2022ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட 112 அறிவிப்புகளில் 91 அறிவிப்புகளின் மூலமாக 3,769 திருக்கோயில்களில் திருப்பணிகளும் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

2022-2023ஆம் ஆண்டிற்கான 165 அறிவிப்புகளில் 135 அறிவிப்புகளின் மூலம் 2,578 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது - என்றும் பெருமையோடு எடுத்துச் சொன்னார். இதற்காக நான் அவரை உங்கள் அனைவரின் சார்பில், அரசின் சார்பில் மனதாரப் பாராட்டுகிறேன். அவரை மட்டுமல்ல, அவருக்குத் துணைநின்ற துறையின் செயலாளர், ஆணையர், அதிகாரிகள் அனைவரையும் நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்.

2022 - 2023ஆம் ஆண்டிற்கான சட்டமன்ற அறிவிப்பில் இடம் பெறாத அறிவிப்புதான் இப்போது செயல்படுத்தப்பட்டிருக்கிறது. இது அறிவிக்கப்படவில்லை. ஆக, சொன்னதை மட்டுமல்ல,' சொல்லாததையும் செய்யக்கூடிய ஆட்சிதான் இன்றைக்கு திராவிட மாடல் ஆட்சி என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களின் திருப்பணிகளையும் சேர்த்து, இந்த நிதியாண்டில் மட்டும் 5,078 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது. அதைத்தான் நம்முடைய அரசு விரும்புகிறது, இதுதான் நம்முடைய அரசினுடைய நோக்கம்.

திருவாரூரில் பல்லாண்டு காலமாக ஓடாமல் இருந்த தேரை ஓட வைத்த பெருமை யாருக்கு என்று கேட்டீர்களானால், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குத்தான். தேர் வரும் பாதையைச் சுற்றிலும் சாலைகள் அமைக்கப்பட்டன. தேர் ஓடுவது சில நாட்கள்தான், ஆனால் மக்கள் 365 நாளும் தொடர்ந்து அந்த சாலையைப் பயன்படுத்துகிறார்கள் என்று தலைவர் கலைஞர் அவர்கள் தந்தை பெரியார் அவர்களை மேடையில் வைத்துக் கொண்டே குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

"2022ஆம் ஆண்டு மட்டும், அதாவது கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் 640க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளில் நான் பங்கெடுத்திருக்கிறேன். மீண்டும் சொல்கிறேன், கடந்த ஆண்டு மட்டும் நான் 640க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளில் பங்கேற்றிருக்கிறேன். இந்த 640இல் 551 நிகழ்ச்சிகள் அரசு நிகழ்ச்சிகள். 95க்கும் மேற்பட்டவை கழக நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகள். மொத்தமாகச் சொல்வதாக இருந்தால், கடந்த ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டில் 8,550 கிலோ மீட்டருக்கு மேல் நான் சுற்றி வந்திருக்கிறேன்.

மக்களுக்கு நேரடியாக வழங்கப்பட்டிருக்கக் கூடிய உதவிகள் மூலம் ஒரு கோடியே 3 இலட்சத்து, 74 ஆயிரத்து 355 பேர் பயனடைந்திருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் மூலமாகப் பயனடைந்தவர்கள் இவர்கள்."

கோயில்கள் நமது பண்பாட்டுச் சின்னங்கள்

கோயில்கள் நமது கலைச் சின்னங்களாக, பண்பாட்டுச் சின்னங்களாக இருக்கின்றன. நமது சிற்பத்திறமைக்கான சாட்சியங்களாக இருக்கின்றன. நமது கலைத் திறமைகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. எனவே, கண்ணும் கருத்துமாக அதைக் காப்பது நம்முடைய அரசினுடைய கடமை என்று எண்ணி இன்றைக்கு நாம் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். அத்தகைய கோயில்கள் சமத்துவம் உலவும் இடங்களாக அமைய வேண்டும் என்பதிலே நமது முழுக் கவனம் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.

எந்த மனிதரையும் சாதியின் பேரால் தள்ளி வைக்கக் கூடாது. நன்றாக கவனியுங்கள், எந்த மனிதரையும் சாதியின் பேரால் தள்ளி வைக்கக் கூடாது. அதற்குத்தான் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தை நாம் கொண்டு வந்தோம்.

அனைத்துக் கோயில்களில் அன்னைத் தமிழில் அர்ச்சனை

அன்னைத் தமிழ்மொழி ஆலயங்களில், நம்முடைய தமிழ்மொழி ஒலிக்க வேண்டும் என்ற உத்தரவையும் போட்டு இருக்கிறோம்.

சமூக சமத்துவம் கொண்டவைகளாக நமது ஆலயங்கள் திகழ வேண்டும்.

மனிதர்களில் மட்டுமல்ல, கோயில்களிலும் நகரக் கோயில், கிராமக் கோயில் என்றும், பணக்காரக் கோயில், ஏழைக் கோயில் என்றும் வேறுபடுத்திச் சொல்லப்படுகிறது.

கிராமப்புறக் கோயிலாக இருந்தாலும், ஏழ்மையான கோயிலாக இருந்தாலும், ஆதிதிராவிடர் பகுதியில் இருக்கும் கோயிலாக இருந்தாலும், அனைத்தையும் ஒன்று போலக் கருதி, உதவி செய்யக்கூடிய அரசுதான் நம்முடைய திராவிட மாடல் அரசு.

மதம் - சாதி வேற்றுமை மட்டுமல்ல, கோயில், சாமி வேற்றுமையும் இந்த அரசுக்கு இல்லை. அனைத்து இறைத்தலங்களையும் கண்ணும் கருத்துமாக நாம் இன்றைக்கு கவனித்து வருகிறோம். அதனால்தான் இந்த மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய சமயச் சான்றோர்கள் மட்டுமல்ல, இன்னும் பலரும் இந்த அரசை ஆதரித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

எனவே, உங்களுடைய பாராட்டுகளும் எங்களுக்குத் தேவை. நீங்கள் தொடர்ந்து ஊக்கப்படுத்துங்கள். இன்றைக்கு நம்மை ஏளனம் செய்து கொண்டிருக்கக்கூடிய, விமர்சனம் செய்து கொண்டிருக்கக்கூடியவர்களுக்கு எல்லாம் இந்த நிகழ்ச்சியே, இந்த மேடையே சாட்சி, சான்று. எனவே, நாங்கள் எந்நாளும் உழைப்போம், எப்போதும் தொடர்ந்து உழைப்போம், எல்லோருக்கும் எல்லாம் என்ற நிலை வருகிற வரையில் இந்த திராவிட மாடல் ஆட்சி உழைக்கும்! உழைக்கும்! என்ற அந்த உறுதியை மாத்திரம் இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லி உங்கள் அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தை, வாழ்த்துகளைத் தெரிவித்து நன்றிகூறி விடை பெறுகிறேன்.” ❖

தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

படமும் / செய்தியும்

உத்தமர் காந்தியடிகளின் நினைவுநாளான தியாகிகள் நாளையொட்டி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில், 30.01.2023 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. மு.அப்பாவு அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயலாளர், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

பள்ளிக்கல்வித் துறை

பொது நூலக இயக்ககம்

தமிழ்நாடு பாடநூல் கழகம்

"சென்னை இலக்கியத் திருவிழா 2023"

கூடிக் கலையும் கூட்டம் அல்ல, கூடிப் படைக்கும் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
06.01.2023 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில்,
"சென்னை இலக்கியத் திருவிழா 2023"-யை தொடங்கி வைத்து ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில், கேரளத்தினுடைய மிக முக்கிய படைப்பாளியாக இருக்கக்கூடிய திரு. பால் சக்காரியா அவர்களுக்கு என்னுடைய முதற்கண் நன்றியை, வணக்கத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கலையை, கலைக்காக மட்டுமல்ல, கலையை மக்களுக்காக இணைத்து பயன்படுத்தும் அவர், நமது அரசினுடைய முன்னெடுப்பிற்கு வாழ்த்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்த வாழ்த்துகளை நாங்கள் ஊக்கமாக எடுத்துக்கொண்டு நிச்சயமாக, உறுதியாக பணியாற்றுவோம். அதேபோல் எழுத்தாளர், படைப்பாளிகள் இங்கே கூடியிருக்கிறீர்கள். அவர்கள் அனைவருக்கும் முதலில் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்!

- என்று புரட்சிக்கவிஞரால் போற்றப்பட்ட நம் தாய்மொழியான தமிழுக்காக நாம் இங்கே கூடி இருக்கிறோம்!

அதுவும் தமிழ்நாட்டினுடைய தலைமகனாக விளங்கிய நம்முடைய ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணாவின் பெயரில் அமைந்துள்ள இந்த நூற்றாண்டுக் கட்டடத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெறுவது என்பது மிகமிக பொருத்தமான ஒன்றாக அமைந்திருக்கிறது. இதைவிட வேறு ஒரு பொருத்தமான இடம் நிச்சயமாக அமைய முடியாது.

தமிழின் தலைசிறந்த படைப்பாளிகள், எழுத்தாளர்கள், இயக்குநர்கள், நாடகத்துறையைச் சார்ந்திருக்கக்கூடியவர்கள் பங்குபெறக்கூடிய வகையில் இலக்கியத் திருவிழாவை தொடங்கி வைப்பதில் நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன், பெருமைப்படுகிறேன்.

"இரு நூற்றாண்டுத் தமிழ் அச்சுப் பண்பாடு" - இதழ்கள் கண்காட்சியினைப் பார்வையிடல்

மாநிலத்தின் முதலமைச்சர் என்ற பெருமையால் மட்டுமல்ல, தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கக்கூடிய தமிழன் என்ற அந்த உரிமையால் இந்த விழாவில் பங்கெடுப்பதிலே நான் பெருமைப்படுகிறேன்.

தி.மு.க.வின் ஆட்சிக்காலம் என்பது எப்போதும் தமிழாட்சி காலம் தான். தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கத்தின் ஆட்சி என்பது தமிழ் இலக்கிய இயக்கத்தின் ஆட்சியாக நடந்து வருகிறது.

- ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாறு கொண்ட தமிழருடைய நிலத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் சூட்டியது !
- நூற்றாண்டுக் கனவான செம்மொழித் தகுதியை தமிழுக்கு பெற்றுத் தந்தது நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் என்பதை நாடு மறந்துவிட முடியாது.
- 'மெட்ராஸ்' என்ற பெயரை 'சென்னை' என்று மாற்றியது !
- ஸ்ரீ, ஸ்ரீமதி என்ற சொல்லுக்கு பதிலாக திரு, திருமதி என்ற சொல்லை சட்டப்பூர்வமாக்கியது !
- தலைநகரில் வள்ளுவர் கோட்டமும், கடல் நகரில் 133 அடியில் வள்ளுவர் சிலையும் அமைத்தது !
- திரும்பிய பக்கம் எல்லாம் திருக்குறளைத் தீட்டியது !
- தமிழ் வாழ்க என எழுத வைத்தது !
- சிலம்பின் பெருமையை எடுத்துக் காட்டக்கூடிய வகையிலே பூம்புகார் கோட்டம் அமைத்தது !
- தமிழில் வழிபடக்கூடிய உரிமையை பெற்றுத் தந்தது !
- ஆட்சிமொழியாய் தமிழை முழுமையாக்கியது !
- தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் மூலம் அனைத்துப் பாடங்களையும் தமிழில் மொழிபெயர்த்து 1000க்கும் மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டது !

* தமிழை கணினி மொழி ஆக்கியது!
* தமிழ் பயிற்று மொழிக்கான அடித்தளம் அமைத்துக் கொடுத்தது. இன்று பள்ளிக் கல்வி முதல் கல்லூரிக்கல்வி வரை தமிழில் படிக்கலாம்!
* உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியது!
* உலகத்தமிழ் செம்மொழி மாநாட்டை நடத்தியது!
* திராவிடப் பல்கலைக்கழகத்திற்கு நிதி வழங்கியது!
* தமிழ்நெட் இணைய மாநாட்டை 1999இல் நடத்தியது!
* அனைத்து விழாக்களிலும் 'நீராரும் கடலுடுத்த..' என்ற தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலை பாட வேண்டும் என்று உத்தரவிட்டது!
* சென்னை கடற்கரையில் அவ்வையார், கண்ணகி, கம்பர், வீரமாமுனிவர், ஜி.யு.போப், வ.உ.சி., பாரதியார், பாரதிதாசன் சிலைகளை அமைத்தது!
* தொல்காப்பியப் பூங்கா அமைத்ததும் திமுக ஆட்சிக்காலத்திலே தான்!
* பொங்கல் திருநாளுக்கு மறுநாளை திருவள்ளுவர் நாளாக அரசு விடுமுறையுடன் அறிவித்தது திமுக!

இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். அதனால் தான் திமுக ஆட்சியை தமிழாட்சி என்று நாமெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். அந்த வரிசையில் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக பல்வேறு முன்னெடுப்புகளை முத்தமிழ் வளர்ச்சிக்காக நம்முடைய ஆட்சி செய்து கொண்டிருக்கிறது.

தமிழறிஞர் நூல்கள் நாட்டுடமை, எழுத்தாளர்கள் பிறந்தநாளில் கூட்டங்கள், குறைந்த விலையில் சங்க இலக்கிய நூல்கள் வெளியீடு, திராவிடக் களஞ்சியம் உருவாக்கம், இதழியலாளர்களுக்கு கலைஞர் எழுதுகோல் விருது, அமெரிக்காவில் உள்ள ஊஸ்டன் பல்கலைக்கழகத்தில் தமிழ் இருக்கை அமைப்பதற்காக ரூ.2.50 கோடி நிதியுதவி, ஜெர்மனியில் உள்ள கோலாம் பல்கலைக்கழக தமிழ்த்துறை தொடர்ந்து இயங்க ரூ.1.25 கோடி நிதியுதவி, டெல்லி ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் தமிழ் இலக்கியவியல் தனித்துறையாகத் தொடங்க ரூ.5 கோடி நிதியுதவி, நூலகங்களுக்கு சிற்றிதழ்கள், இலக்கியமாமணி விருதுகள், உயரிய விருது பெற்ற எழுத்தாளர்களுக்கு கனவு இல்லம், திசை தோறும் திராவிடம், குறள் பரிசு, முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம், தீராக்காதல் திருக்குறள் - என ஏராளமான தமிழ்க் காப்புத் திட்டங்களை இன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இவை அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல இலக்கியத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இதற்குக் காரணமான நம்முடைய தமிழகத்தின் அமைச்சர் பெருமக்களை நான் மனதார வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன், அவர்களுக்கு நன்றி சொல்ல விரும்புகிறேன்.

தனது துறையின் மூலமாக தமிழ்நாட்டின் பள்ளிக்கல்வித் துறைக்கு நம்முடைய அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்கள் ஆற்றி வரும் அரும்பணி என்பது நிகழ்காலத்தில் மட்டுமல்ல - எதிர்காலத்திலும் நினைத்து நினைத்து மெச்சத்தக்க பணியாக அமைந்திருக்கிறது என்பதை மனதார நான் பாராட்டுகிறேன்.

அதேபோல் பொது நூலகத் துறையும் மேம்பாடு அடைந்து வருகிறது. தமிழ்நாடு பாடநூல் கழகம் சிறப்பான பணிகளைச் செய்து வருகிறது.

பள்ளிக்கல்வித் துறை, பொது நூலக இயக்ககம், தமிழ்நாடு பாடநூல் கழகம் ஆகிய மூன்றும் இணைந்து இலக்கிய விழாவை நடத்தி வருகின்றன.

நெல்லையில் பொருநை விழா, தஞ்சையில் காவிரி விழா, கோவையில் சிறுவாணி விழா, மதுரையில் வைகை விழா – என நடத்தப்பட்டு தலைநகரில் தலைசிறந்த விழாவாக இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தலைசிறந்த படைப்பாளிகள் இங்கு உரையாற்ற இருக்கிறீர்கள். இந்த ஐந்து விழாக்களையும் சேர்த்தால் தமிழ்நாட்டுத் தமிழ் மாநாடு போல இதனைச் சொல்லலாம்.

இத்தகைய விழாவில் 100 நூல்களை நான் உங்களின் அன்போடு, ஆதரவோடு இங்கே வெளியிட்டு இருக்கிறேன். ஒரு புத்தகத்தை வெளியிடுவதற்காக ஒரு விழா என்று இல்லாமல் - 100 புத்தகங்களை வெளியிடும் ஒரு விழாவாக

இந்த விழா மிகமிக பிரம்மாண்டமான வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு அரசின், பள்ளிக்கல்வித் துறையாக இருந்தாலும், தமிழ்வளர்ச்சித்துறையாக இருந்தாலும், செய்தித்துறையாக இருந்தாலும், தமிழ் இணையக் கல்விக் கழகமாக இருந்தாலும், அனைத்துமே மிகப்பெரிய பதிப்பகங்களுடன் போட்டி போடக்கூடிய வகையில் அறிவுக் கருவூலங்களை வெளியிட்டு இருக்கின்றன. அதிலும் கடந்த ஓராண்டு காலத்தில் ஏராளமான புதிய புதிய புத்தகங்களை நான் பார்க்கிறேன்.

- இந்து தமிழ் திசை சார்பில் வெளியிடப்பட்ட மாபெரும் தமிழ்க் கனவு என்ற பேரறிஞர் அண்ணா குறித்த நூலை மரியாதைக்குரிய மூத்த பத்திரிகையாளர் விஜயசங்கர் அவர்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க - இங்கே வெளியிடப்பட்டுள்ளது.
- ராபர்ட் ஹார்ட்கிரேவ் என்ற அமெரிக்க ஆய்வாளர் திராவிட இயக்கம் குறித்து ஆங்கிலத்தில் 1965ஆம் ஆண்டு ஒரு புத்தகம் எழுதினார். திமுக முதன்முதலாக ஆட்சிக்கு வருவதற்கு முன்பு எழுதப்பட்ட புத்தகம் அது. அந்த நூலை அனுமதி பெற்று நாம் வெளியிட்டு இருக்கிறோம்.
- இனமானப் பேராசிரியரை சிறப்பிக்கும் வகையிலான தொகுப்பு ஒன்றும் வெளியிடப்பட்டு இருக்கிறது.
- பத்துப்பாட்டு நூல்கள் வெளியாகி இருக்கின்றன.
- கலைக்களஞ்சியமானது ஆவணப்பதிப்பாக வெளியாகி இருக்கிறது.
- மருத்துவ நூல்கள் தமிழில் வெளியிடப்பட்டுள்ளன.

இவை அனைத்தும் தமிழின் பெருமையை, தமிழின் செழுமையை, தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றை, சமூக வரலாற்றை, தமிழ்ப் பண்பாட்டை, தமிழ்நாட்டை இன்றைய இளைய தலைமுறைக்கு கற்பிக்கும் புத்தகங்களாக அமைந்துள்ளன. இதனைத் திட்டமிட்டு செயல்படுத்தி, உருவாக்கி, அச்சிட்டு, விற்பனை செய்யும் ஒவ்வொருவருக்கும் எனது பாராட்டுதல்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

49 ஆண்டுகளுக்கு முன்பு 1974ஆம் ஆண்டு சனவரி 16ஆம் நாள் அன்று தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் சார்பில் 176 கல்லூரி பாட நூல்களை வெளியிட்டு அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பேசினார்கள்.

"தமிழைப் படிப்பது என்பது வேறு, தமிழில் படிப்பது என்பது வேறு. இந்த இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டை நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழைப் படிப்பது என்பது சங்ககால இலக்கியங்களை, காவியங்களை, கவிதைகளை நம் பழங்காலப் பனுவல்களைப் படிப்பது, தமிழைப் படிப்பது தேவை.

தமிழில் படிப்பது என்பது வரலாறு படிப்பது, நிலநூல் படிப்பது, பொருளியல் படிப்பது, பல்துறைகளைப் படிப்பது, தமிழைப் படிப்பது தேவை. அதைவிட தமிழில் படிப்பது மிகமிகத் தேவை. தமிழ்நாட்டில் எல்லாவகையான எதிர்கால வளர்ச்சிக்கும் அது தேவை என்று தமிழ்மொழியில் அறிவுச் செல்வம் பெருக வேண்டியதைப் பற்றி உரையாற்றியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு தமிழ்நாட்டில் நடந்த மிகப் பெரிய புத்தக வெளியீட்டு நிகழ்ச்சி எது என்று கேட்டால் இந்த நிகழ்ச்சியாகத்தான் இருக்கும் என்று நான் நினைக்கிறேன்.

தலைவர் கலைஞர் அவர்கள் மேலும் ஒன்றை அந்த நிகழ்ச்சியில் குறிப்பிட்டார்கள்.

"மொழி மானத்தைப் பெற்றாக வேண்டும்" என்று குறிப்பிட்டார்கள்.

இன்றைய தேவை என்பது இதுதான்.

மொழி என்பது ஒரு இனத்தின் உயிர்.

இலக்கியம் என்பது ஒரு இனத்தின் இதயம் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

மொழியைக் காப்பாற்றுவதற்காக உயிரைக் கொடுத்த இனம்தான் நம்முடைய தமிழ் இனம். திராவிட இயக்கம் அரசியல் இயக்கமாக இருந்தாலும் மொழி காப்பு இயக்கமாகவே தொடக்கம் முதல் இயங்கி வருகிறது.

இந்தியாவின் எந்த மாநிலத்திலும், எந்த அரசியல் கட்சியும், இலக்கிய இயக்கமாக இருந்ததில்லை. திமுக தான் அப்படி வளர்ந்தது. தன்னை வார்ப்பித்துக் கொண்டது.

தீனா மூனா கானா

திருக்குறள் முன்னேற்றக் கழகம் என்று திரைப்பாடலில் பாடினார் கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள்.

அரசியல் தலைவர்தான் நம்முடைய கலைஞர் அவர்கள். ஆனால் குறளோவியமும், சங்கத்தமிழும் அவர் பெயரை தமிழ் உள்ளவரை சொல்லிக் கொண்டே இருக்கும்.

எத்தனையோ திட்டங்களைத் தீட்டினாலும், சென்னையில் வள்ளுவர் கோட்டமும், குமரியில் 133 அடியில் அமைந்திருக்கக்கூடிய திருவள்ளுவர் சிலையும், காலத்தால் அழியாத கம்பீரமான சின்னங்களாக இன்றைக்கு இருக்கின்றன.

இதை நான் சொல்வதற்குக் காரணம் - மொழியைப் பற்றால் மட்டும் வளர்த்துவிட முடியாது. அறிவால், உணர்வால் வளர்த்தாக வேண்டும். அதற்காகத்தான் இத்தகைய இலக்கிய விழாக்களை நாம் நடத்துகிறோம்.

இன்றைய இளைய தலைமுறைக்கு தமிழ் உணர்வை ஊட்டியாக வேண்டும். தமிழ் இலக்கிய உணர்வை ஊட்டியாக வேண்டும். இலக்கியம் தான் ஒரு மனிதனைப் பண்படுத்தும்.

- மதவாதத்தாலும், சாதியவாதத்தாலும், மனிதர்களுக்குள் பிளவு ஏற்படும்போது- 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற திருவள்ளுவரின் ஒரு வரி மனிதனை ஒன்றாக்கும்.
- 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற வரி, மனித சமுதாயத்துக்குள் இருக்கும் அத்தனை வேறுபாடுகளையும் துடைத்தெறியும்.
- வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வரி கல்நெஞ்சத்தையும் கரைக்கும்!
- தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தம் மெய்வருத்தக் கூலி தரும் - என்பதை விட தன்னம்பிக்கை வரி உலகத்தில் உண்டா?

இன்றைய நவீன தமிழ் இலக்கியத்தின் ஆளுமைகள் அனைவர் குறித்தும் நான் சொல்லத் தேவையில்லை. நீங்களே அறிவீர்கள்.

உலகின் புகழ்பெற்ற புத்தகங்கள் அனைத்தும் இங்கே மொழிபெயர்க்கப்பட்டு விடுகிறது. நம்முடைய தமிழ்ப்படைப்புகள், உலகின் பல மொழிகளுக்கு மொழிபெயர்த்து வெளியிடப்படுகிறது.

இந்த ஆண்டு முதல் உலகப்புத்தகச் சந்தையை இங்கேயே கண்காட்சியாக நாம் நடத்தப் போகிறோம். உன்னதமான தமிழ்ப்படைப்புகள் அனைத்தும் உலகத்தின் பல மொழிகளுக்குப் போக இருக்கின்றன.

இந்த நேரத்தில் இத்தகைய படைப்புகள் தமிழர்களால் அதிகம் படிக்கப்பட வேண்டும். அதற்கு இளமைக்காலத்தில் இருந்தே மாணவ சமுதாயத்துக்கு தமிழ் மீதும், தமிழ் இலக்கியங்கள் மீதும் தீராத ஆர்வத்தை உருவாக்க வேண்டும்.

படைப்பரங்கம், பண்பாட்டரங்கம், பயிலரங்கம், குழந்தைகள் இலக்கிய அரங்கம், நிகழ்த்துக் கலைகள் என மிக விரிவாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இது போன்ற திருவிழாக்கள் இலக்கிய ஆர்வத்தை உருவாக்க உறுதுணையாக அமையும்.

மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்குப் போவதற்கு முன்னால் மருத்துவரிடம் அனுமதி பெற்று புத்தகம் படித்துக்கொண்டு இருந்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

தூக்கு மேடைக்குச் செல்லும் போதும் படித்துக் கொண்டு இருந்தார் மாவீரன் பகத்சிங்.

வரலாற்றைப் படித்தவர்களால்தான் வரலாற்றைப் படைக்க முடியும். இலக்கியம் படித்தால்தான் நாம் வாழும் சமுதாயத்தை உணர முடியும்.

இலக்கியம் என்பது பொழுது போக்கு அல்ல, அதுதான் நமது நோக்கும் போக்குமாக மாற வேண்டும்.

இலக்கியம் என்பது பேரியக்கமாக மாற வேண்டும்.

புத்தகக் கண்காட்சிகள் மாவட்டந்தோறும் பரவி நடப்பதைப் போல இலக்கியத் திருவிழாக்களும் மாவட்டந்தோறும் பரவி நடைபெற வேண்டும். இது கூடி கலையும் கூட்டம் அல்ல,

கூடிப் படைக்கும் கூட்டம் என்பதை நிரூபிக்கும் வகையில் இலக்கிய விழா சிறப்பிக்க எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

சென்னை ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில்
46ஆவது புத்தகக் கண்காட்சி தொடக்கம்



புத்தகச் சந்தைகளும், இலக்கிய விழாக்களும் எழுத்தையும், இலக்கியத்தையும் இன்றைய இளைய தலைமுறைக்கு தமிழ் உணர்வை ஊட்டுவதற்காகப் பயன்படவேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
46ஆவது சென்னை புத்தகக் காட்சி 2023
தொடங்கி வைத்து, ஆற்றிய உரை - 06.01.2023

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான மாலை வணக்கத்தை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் பேருரையோ, சிறப்புரையோ ஆற்ற வரவில்லை, சுருக்க உரை ஆற்ற வந்திருக்கிறேன்.

தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தின் சார்பில் நடைபெறக்கூடிய 46ஆவது புத்தகக் காட்சியைத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

'தாய்க்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்டிய தலைமகன்' நம்முடைய ஒப்பற்றத் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் அமைந்துள்ள நூற்றாண்டு நினைவு நூலகத்தில், அந்த நூலகத்தில் அமைந்திருக்கக்கூடிய அரங்கத்தில் இலக்கியத் திருவிழாவை இன்று காலையில் நான் தொடங்கி வைத்தேன். அதைத் தொடர்ந்து மாலையில் இந்த புத்தகக் காட்சியைத் தொடங்கி வைக்கக்கூடிய வாய்ப்பை நான் பெற்றிருக்கிறேன். ஆக, இந்த இரண்டு நிகழ்ச்சிகளுமே நம்மைப் பொறுத்தவரையில் திருவிழாக்கள். அதுவும் அறிவுத் திருவிழாக்களாக அமைந்திருக்கிறது, இன்னும் சொல்ல வேண்டுமென்றுச்

பொற்கிழி விருதாளர்கள்

சொன்னால் தமிழ்த் திருவிழாக்களாக அமைந்திருக்கிறது என்று சொன்னால், அது மிகமிக பொருத்தமாக இருக்க முடியும்.

தமிழ்நாட்டில் இப்போது நடந்து கொண்டிருக்கக்கூடிய ஆட்சி தமிழாட்சி என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதற்குச் சான்றுகளாகத்தான் இந்த காலை நிகழ்ச்சியும், மாலை நிகழ்ச்சியும் அமைந்திருக்கிறது.

ஒருகாலத்தில் சென்னையில் மட்டுமே புத்தகக் கண்காட்சி நடந்து வந்தது. அதைத் தொடர்ந்து ஒரு சில மாவட்டங்களில் நடக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறது. புத்தக வாசிப்பில் ஆர்வம் இருக்கக்கூடிய ஆட்சித் தலைவர்கள், அந்த ஆட்சியர்கள் அவரவர் மாவட்டத்திலே அதற்கான முயற்சிகளை எடுத்தார்கள். அந்த புத்தகக் கண்காட்சியைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த ஆண்டு அனைத்து மாவட்டங்களிலும் இந்த புத்தகக் காட்சிகள் நடத்துவதற்கு நம்முடைய அரசு ஆணையிட்டது. அதற்காக ரூ.5.50 கோடி நிதியை ஒதுக்கீடும் செய்திருக்கிறோம். அதன் விளைவாக, தமிழ்நாட்டில் பெரும்பாலான மாவட்டங்களில் புத்தகக் கண்காட்சிகள் நடக்கத் தொடங்கி இருக்கின்றன. பத்து நாட்கள், இரண்டு வாரங்கள் என நடக்கும் இந்த புத்தகச் சந்தைகள் மூலமாகப் புத்தக விற்பனை மட்டுமல்ல, சிறப்பான சொற்பொழிவாளர்களைக் கொண்ட இலக்கிய நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன. இதன் மூலமாக மாவட்டந்தோறும் இலக்கிய எழுச்சி, அறிவு மலர்ச்சி ஏற்பட்டு வருகிறது.

வழக்கமாக, சென்னைப் புத்தகக் கண்காட்சிக்காக அரசின் சார்பில் ரூ.75 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு கொரோனா பெருந்தொற்று நோய் வந்த காரணத்தால், பதிப்பாளர்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட சூழலை மனதில் கொண்டு பபாசி அமைப்பினர் கூடுதல் நிதியை அரசிடம் கேட்டார்கள். அவர்கள் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு உடனடியாக அதை ஏற்று ரூ.50 இலட்சத்தை அன்றைக்கு அரசின் சார்பில் நாம் வழங்கினோம். இந்தத் தொகை சங்க உறுப்பினர்களாக இருக்கும் 277 பேருக்குத் தலா ரூ.14 ஆயிரமும் - உறுப்பினர் அல்லாத 113 பேருக்குத் தலா ரூ.10 ஆயிரமும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது என்பதை நான் அறிவேன். பதிப்பகங்களுக்கு உதவிகள் செய்வதும், எழுத்தாளர்களுக்கு விருதுகள் வழங்குவதும் நாட்டில் அறிவொளி பரவ வேண்டும் என்பதற்காகத்தான்.

'வீட்டுக்கு ஒரு நூல் நிலையம் அமைய வேண்டும்' என்று ஆசைப்பட்டவர் நம்முடைய பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள். அத்தகைய நோக்கத்தை உருவாக்கவே, மாவட்டந்தோறும் புத்தகக் கண்காட்சிகளையும், இலக்கிய விழாக்களையும் நடத்துவதற்கு அனைத்து விதமான உதவிகளையும் நம்முடைய அரசு செய்து கொண்டிருக்கிறது.

தமிழின் மீதும் புத்தகங்களின் மீதும், எழுத்தின் மீதும், எழுத்தாளர்கள் மீதும் மாறாக் காதல் கொண்டவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இதுபோன்ற கண்காட்சியின் தொடக்க விழாவுக்காக கடந்த 2008ஆம் ஆண்டு அன்றைக்கு நடைபெற்ற அந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நம்முடைய

சிறப்பு மலர்கள் விற்பனை துவக்கம்

கலைஞர் அவர்கள் உரையாற்றினார்கள், சிறப்பித்தார்கள். ரூ.1 கோடியை வழங்கி, எழுத்தாளர்களுக்கு ஆண்டுதோறும் பொற்கிழி விருது வழங்கி உற்சாகப்படுத்தச் சொன்னார்கள்.

'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் பெயரால் அமைந்திட்ட அந்த விருதினைப் பெற்றிருக்கக்கூடிய மொழியியல் அறிஞர் பா.ரா.சுப்பிரமணியன், கவிஞர் தேவதேவன், மொழிப்பெயர்ப்பாளர் சி.மோகன், நாடகக் கலைஞர் பிரளயன், நாவலாசிரியர் தேவிபாரதி, சிறுகதையாசிரியர் சந்திரா தங்கராஜ் ஆகியோரை நான் மனதாரப் பாராட்டுகிறேன், அவர்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் என்ற முறையில் மட்டுமல்ல, தமிழரையும், தமிழ்ப் படைப்பாளிகளையும் உயிரென நேசித்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய மகனாகவும் நான் அவர்களை வாழ்த்த கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்த ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞருடைய நூற்றாண்டாக அமைந்திருக்கக்கூடிய நிலையில், 2008ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வரக்கூடிய இந்த விருதைப் பெற்றவர்களின் எண்ணிக்கை இந்த ஆண்டு வரை 100 பேர் என்ற எண்ணிக்கையைத் தொட்டிருக்கிறது. எத்தனைப் பொருத்தமாக அமைந்திருக்கிறது என்பதை எண்ணி நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

எழுத்தாளர்களையும், அதேபோல எழுத்தையும் பாராட்டுவதை தன்னுடைய இயல்பாக, ஒரு வாழ்க்கையின் ஓர் அங்கமாக வைத்திருந்தவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள். அரசியலில் எவ்வளவோ முரண்பாடுகள் இருந்தாலும் அவர்கள் சிறந்த எழுத்தாளர்களாக இருந்தால் அவர்களைப் பாராட்டுவதற்கு தயக்கமோ, சுணக்கமோ காட்டமாட்டார் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

சிறந்த எழுத்தைப் போலவே சிறந்த எழுத்தைப் பாராட்டுவதும் முக்கியமானது என்று அந்த நோக்கத்தோடுதான் ரூ.1 கோடி நிதியை தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு வழங்கினார்கள். அந்த நிதி, அவருக்குப் பின்னாலும் எழுத்தாளர்களைப் பெருமைப்படுத்த பயன்பட்டு வருகிறது.

2007ஆம் ஆண்டு சென்னை புத்தகக் கண்காட்சியைத் தொடங்கிவைத்த அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், சென்னையில் மிகப் பிரம்மாண்டமான நூலகம் அமையப் போகிறது என்ற ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். அதுதான் சென்னையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகம்!

அதேபோல் மதுரையில் கலைஞர் அவர்கள் பெயரால் ரூ.114 கோடி மதிப்பீட்டில் மாபெரும் நூலகம் அமைக்க இன்றைய அரசு திட்டமிட்டு, அது பிரம்மாண்டமாக எழுந்து வருகிறது. விரைவில் அது திறக்கப்படவிருக்கிறது என்ற அந்த மகிழ்ச்சியான செய்தியை நான் உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை,

எழுத்தாளர்கள் பிறந்தநாளில் கூட்டங்கள், குறைந்த விலையில் சங்க இலக்கிய நூல்கள் வெளியீடு, திராவிடக் களஞ்சியம் உருவாக்கம், இதழியலாளர்களுக்கு கலைஞர் எழுதுகோல் விருது, உலகப் பல்கலைக்கழகங்களில் செம்மொழித் தமிழ் இருக்கைகள், நூலகங்களுக்குச் சிற்றிதழ்கள், இலக்கியமாமணி விருதுகள், உயரிய விருது பெற்ற எழுத்தாளர்களுக்கு கனவு இல்லம், திசைதோறும் திராவிடம், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம் என ஏராளமான தமிழ்க் காப்புத் திட்டங்களை இன்றைய திராவிட முன்னேற்றக் கழக அரசு செயல்படுத்தி வருகிறது. பதிப்பகங்களோடு போட்டி போடக்கூடிய அளவுக்கு தமிழ்நாடு அரசும் ஏராளமான நூல்களை வெளியிட்டு வருகிறது என்பதை நான் இந்த நிகழ்ச்சியில் கம்பீரமாக நின்று சொல்ல விரும்புகிறேன்.

திசைதோறும் திராவிடம் திட்டத்தின்கீழ் 25 நூல்களும், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்கீழ் 46 நூல்களும், இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின்கீழ் 59 நூல்களும், சங்க இலக்கிய வரிசையில் பத்துப்பாட்டு நூல்களும், முன்பு வெளியான கலைக்களஞ்சியத்தின் ஆவணப்பதிப்பும், நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் படைப்புகளாக 2 நூல்களும், வ.உ.சி.யின் நூல் திரட்டுகளாக இரண்டு நூல்களும், நாட்டுடைமை ஆக்கப்பட்டவர் வரிசையில் 17 நூல்களும் என 173 நூல்களை கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் அரசின் சார்பில் வெளியிட்டிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதனால்தான் போட்டி போடக்கூடிய அளவுக்கு அரசும் புத்தக வெளியீடுகளில் இறங்கி இருக்கிறது என்று நான் பெருமையோடு சொன்னேன்.

கால்டுவெல்லின் 'திராவிட அல்லது தென்னிந்தியக் குடும்ப மொழிகளின் ஒப்பிலக்கணம்' நூலை மொழி அறிஞர் பா.ரா.சுப்பிரமணியன் அவர்கள் மொழிபெயர்த்துக் கொடுத்துள்ளார். அவருக்கு இன்று தலைவர் கலைஞர் அவர்கள் பெயரில் அமைந்திருக்கக்கூடிய விருது வழங்கப்பட்டிருப்பதை அறிந்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று காலையில் மட்டும் 100 நூல்களை நான் வெளியிட்டு இருக்கிறேன். தமிழ்நாட்டில் நடந்த மிகப்பெரிய புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியாக அதுதான் இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

நிரந்தரமாக புத்தகப் பூங்கா அமைக்க சென்னையில் இடம் வழங்கப்படும் என்று முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் அறிவிப்பு செய்தார்கள். 'அதனை நினைவூட்டி நானும் கடந்த ஆண்டு அந்த வாக்குறுதியை நினைவுபடுத்தி இருக்கிறேன். இடம் தேர்வு செய்யப்பட்டதும், அது தொடர்பான முறையான அறிவிப்பை வெளியிடுவேன் என்பதை மகிழ்ச்சியோடு இந்த நிகழ்ச்சியில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எழுத்துக்கும், எழுத்தாளர்களுக்குமாக எத்தனையோ சிறப்பான செயல்களை தமிழ்நாடு அரசு செய்து வருவதை எழுத்தாளர்கள், அறிஞர்கள், இலக்கிய இதழ்கள், சிறுபத்திரிகைகள், பொதுவெளியில் பாராட்டுகிறார்களா என்று எனக்குத் தெரியாது. யாரும் பாராட்டுவார்கள் என்பதற்காகவும் இத்தகைய செயல்களை நாங்கள் செய்யவில்லை.

கடந்த ஓராண்டுகாலத்தில் தமிழுக்கும், எழுத்துக்கும், எழுத்தாளர்களுக்கும் அத்தகைய அளவில்லாத ஆக்கப்பணிகளைத் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது என்பதை யாராலும் மறந்துவிடவும், மறுக்கவும் முடியாது. எழுத்தும், இலக்கியமும் மொழியை வளர்க்கின்றன. வளர்ப்பது மட்டுமல்ல, காக்கின்றன.

இதுபோன்ற புத்தகச் சந்தைகளும் இலக்கிய விழாக்களும் எழுத்தையும், இலக்கியத்தையும் இன்றைய இளைய தலைமுறைக்குத் தமிழ் உணர்வை ஊட்டுவதற்காகப் பயன்பட வேண்டும்.

மொழி சிதைந்தால் இனம் சிதையும். இனம் சிதைந்தால் நம்முடைய பண்பாடு சிதைந்துவிடும். பண்பாடு சிதைந்தால் நம்முடைய அடையாளமே போய்விடும். அடையாளம் போய்விட்டால், தமிழர்கள் என்று சொல்லிக் கொள்ளும் தகுதியை நாம் இழந்து விடுவோம். தமிழர் என்ற தகுதியை இழந்தால் வாழ்ந்தும் பயனில்லை. எனவே மொழியைக் காப்பதற்கான கடமை என்பது எங்களைப் போன்ற அரசியல் இயக்கங்களைப் போலவே எழுத்தாளர்களுக்கும் இருந்தாக வேண்டும். தங்களது எழுத்தை மொழிகாப்பதற்கான மக்கள் எழுத்தாகப் பயன்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் அவர்களை எல்லாம் அன்போடு கேட்டு வாய்ப்பினைத் தந்த அனைவருக்கும் மீண்டும் ஒரு முறை என்னுடைய இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி! வணக்கம்!

இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட 2.21 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.318.30 கோடி பயிர் இழப்பீட்டுத் தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார். (10.01.2023)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.01.2023 அன்று தலைமைச் செயலகத்தில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறைச் சார்பில், பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கடந்த 2021-2022ஆம் ஆண்டு இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட குளிர் பருவ (ரபி) பயிர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக சுமார் 2.02 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.284 கோடியும், 2022-2023ஆம் ஆண்டில் மயிலாடுதுறை மாவட்டத்தில் விதைப்பு பொய்த்தல் இனத்தின்கீழ் சுமார் 19,282 விவசாயிகளுக்கு ரூ.34.30 கோடியும் என மொத்தம் 2.21 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.318.30 கோடி இழப்பீட்டுத் தொகை வழங்கும் பணியினை தொடங்கி வைப்பதன் அடையாளமாக 5 விவசாயிகளுக்கு ஆணைகளை வழங்கித் தொடங்கி வைத்தார்.

பயிர் காப்பீட்டுத் திட்டம் கடந்த 2016-2017ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2020-2021ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டத்திற்கான காப்பீட்டுக் கட்டண மானியத்தில் ஒன்றிய அரசு மானாவாரி மாவட்டங்களுக்கு 30 சதவீதம் வரையிலும், பாசன வசதி உள்ள மாவட்டங்களுக்கு 25 சதவீதம் வரை பங்களிப்பிலும், மாநில அரசின் 60 முதல் 65 சதவீத பங்களிப்பிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2021-2022ஆம் ஆண்டில் இத்திட்டம் 37 மாவட்டங்களை உள்ளடக்கிய 14 தொகுப்புகளில் இணை காப்பீட்டுத் திட்டமாக 80 : 20 விகிதத்தில் இடர் நிகழ்வுகளை (Risk) ஏற்றுக் கொண்டு, மாநில அரசுடன் இந்திய வேளாண் காப்பீட்டு

நிறுவனம் மற்றும் இப்கோ-டோக்கியோ பொது காப்பீட்டு நிறுவனம் இணைந்து செயல்படுத்தின.

2021-2022ஆம் ஆண்டு குளிர் பருவ (ரபி) பயிர்களுக்கான தமிழ்நாடு அரசின் காப்பீட்டுக் கட்டண மானியமாக ரூ.276.85 கோடி காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டு, இந்திய வேளாண் காப்பீட்டு நிறுவனம் ரூ.152 கோடியும், இப்கோ-டோக்கியோ பொது காப்பீட்டு நிறுவனம் ரூ.132 கோடியும் என மொத்தம் ரூ.284 கோடி தற்போது இழப்பீட்டுத் தொகையாக சுமார் 2.02 இலட்சம் விவசாயிகளுக்கு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்த கனமழையால், மயிலாடுதுறை மாவட்டத்தில் 80,357 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்ட சம்பா நெற்பயிர் பாதிப்படைந்தது. 2022-2023ஆம் ஆண்டில், பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், அறிவிக்கை செய்யப்பட்ட 277 வருவாய் கிராமங்களுள், 87 வருவாய் கிராமங்களில் 75 சதவீதத்திற்கும் மேற்பட்ட பரப்பளவில், சுமார் ஒரு மாத வயதுடைய சம்பா நெற்பயிர் மழைநீரில் மூழ்கி பாதிப்படைந்தது. பயிர் காப்பீட்டுத் திட்ட விதிமுறைகளின்படி, 75 சதவீதத்திற்கும் மேற்பட்ட பரப்பளவில் பாதிப்பு ஏற்பட்ட 87 வருவாய் கிராமங்கள் விதைப்பு பொய்த்தல் இனத்தின்கீழ் அறிவிக்கை செய்யப்பட்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு காப்பீடு செய்த நடப்பு ஆண்டிலேயே இழப்பீட்டுத் தொகை வழங்கிட ஏதுவாக, 39,142 ஏக்கர் சம்பா நெற்பயிருக்கு ஏக்கருக்கு ரூ.8,762 வீதம் சுமார் 19,282 விவசாயிகளுக்கு ரூ.34.30 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இயற்கை இடர்பாடுகளால் பாதிக்கப்பட்ட சுமார் 2.21 இலட்சம் விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் இழப்பீட்டுத் தொகையாக மொத்தம் ரூ.318.30 கோடி வழங்கப்படுகிறது. இப்பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகைக்கான ஆணைகளை வழங்கித் தொடங்கி வைத்தார். ◆

விருகம்பாக்கம் சம்பவத்தில் தொடர்புடையவர்களை புலன் விசாரணை நடத்தி 72 மணி நேரத்தில் கைது செய்த அரசு

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 11.01.2023 அன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விருகம்பாக்கம் சம்பவம் குறித்து எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருகம்பாக்கத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அவர்கள் குற்றச்சாட்டைத் தெரிவித்துவிட்டு ஓடி, ஒளியாமல் இருந்து என்னுடைய பதிலைக் கேட்டிருக்க வேண்டும். அதுதான், உள்ளபடியே நியாயமாக இருக்கும். அதனால்தான் நான் சொன்னேன்; நான் ஓடி, ஒளிய மாட்டேன், பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கின்றேன் என்று சொன்னேன்.

31.12.2022 அன்று இரவு 10.45 மணிக்கு பெண் காவலர் R-5 விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த உடனே எப்.ஐ.ஆர். போடப்பட்டிருக்கிறது. இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 353, 354 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைச் சட்டப் பிரிவு 4இன்கீழும் பதிவு செய்யப்பட்ட அந்த வழக்கு புலன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சம்பவ இடத்தில் இருந்த காவலர்கள் மற்றும் சாட்சிகளை காவல் ஆய்வாளர் விசாரணை செய்து, சிசிடிவி காட்சிகளும் ஆய்வு செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து அச்சம்பவத்தில் ஈடுபட்ட பிரவின்குமார், ஏகாம்பரம் ஆகியோர் 03.01.2023 இரவு 10 மணிக்கு கைது செய்யப்பட்டு, அடுத்த நாள் 04.01.2023 அன்று காலையே நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். புகார் கொடுத்த அன்றே எப்.ஐ.ஆர். பதிவு செய்து, புலன் விசாரணை நடத்தி, 72 மணி நேரத்தில் அவர்களைக் கைது செய்ததுபோல், எந்த வழக்கிலாவது அ.தி.மு.க. ஆட்சியில் நடவடிக்கை எடுத்ததுண்டா என்ற அந்தக் கேள்வியைத்தான் நான் கேட்கிறேன்.

எஸ்.பி. அந்தஸ்த்தில் இருந்த பெண் போலீஸ் அதிகாரிகள் இருவரை, இதுமாதிரி புகாரில் அலைகழித்த ஆட்சிதானே அ.தி.மு.க. ஆட்சி.

இந்த அரசைப் பொறுத்தவரையில், பெண்களுக்கு எதிராக, பெண் காவலர்களுக்கு எதிராக இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனது உரையின் தொடக்கத்தில், ஒட்டுமொத்தமாக, தினந்தோறும் வழிப்பறி, கொலை, கொள்ளை நடந்து கொண்டிருக்கிறதென்று சொன்னார்.

✸ இராமநாதபுரம், பரமக்குடி இம்மானுவேல் சேகரன் நினைவு விழாவில் துப்பாக்கி சூடு நடத்தியதில் 5 பேர் மரணம், யாருடைய ஆட்சியில்?

✸ தேவர் ஜெயந்தி விழாவில் மதுரையில் வெடிகுண்டு வீச்சு - 4 பேர் மரணம்.

✷ சிவகங்கை, திருப்பாச்சேத்தி உதவி ஆய்வாளர் ஆன்வின் சுதன் படுகொலை 2012இல் செய்யப்பட்டது.

✷ கன்னியாகுமரி உதவி ஆய்வாளர் வில்சன் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டது.

✷ தூத்துக்குடி துப்பாக்கி சூட்டில் 13 அப்பாவிகள் மரணம், யாருடைய ஆட்சியில், அ.தி.மு.க. ஆட்சியில்தானே?

✷ கூடங்குளம் ஆலைக்கு எதிரான போராட்டத்தின்போது மக்கள் மீது காவல்துறை தடியடி நடத்தியது, பொதுமக்கள் ஐ.ஜியை தரையில் இழுத்துச் சென்றது, அவரது கைத்துப்பாக்கி காணாமல் போனது.

✷ அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சி சம்பவம் ஒன்று போதாதா?

✷ வன்னியர் சங்க மாநாட்டைத் தொடர்ந்து எழுந்த சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையில் நூறு வாகனங்கள் எரிப்பு, ஆயிரம் வாகனங்கள் உடைத்ததும் அ.தி.மு.க. ஆட்சியில்தான்.

✷ ஜல்லிக்கட்டு அனுமதிக்கு அமைதிப் போராட்டம் நடத்தியவர்கள் மீது தடியடி நடத்தி, பொதுமக்கள் வாகனங்களை காவல் துறையினரே தீயிட்டு கொளுத்தியதும் அ.தி.மு.க. ஆட்சியில்தான்.

✷ சாத்தான்குளத்தில் லாக்கப் வன்முறை, காவல் நிலையத்தில் தந்தை மகன் அடித்துக் கொலை செய்யப்பட்ட விவகாரம்.

இதுபோன்ற சம்பவங்கள் எல்லாம் இந்த ஆட்சியில் இல்லை, அ.தி.மு.க. ஆட்சியில்தான்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரை, யாராக இருந்தாலும், அரசியல் பார்க்காமல், கட்சி பார்க்காமல் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. எனவே, எதிர்க்கட்சித் தலைவர் சொல்லிய, அவருடைய குற்றச்சாட்டுக்கு இதையே பதிலாகச் சொல்லி நான் அமைகிறேன். ●

படமும்/செய்தியும்

தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை-2023 குறித்த ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 31.01.2023 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில மகளிர் கொள்கை-2023 குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் அவர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. நா.முருகானந்தம், இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை முதன்மைச் செயலாளர் திரு. சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இணைச் செயலாளர் திருமதி ஆர்.சீத்தாலட்சுமி, இ.ஆ.ப., சமூக நலத் துறை இயக்குநர் திருமதி த.ரத்னா, இ.ஆ.ப., சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை கூடுதல் இயக்குநர் திருமதி எஸ்.பி.கார்த்திகா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாணவர்களது அறிவு கலை, கல்வி, பகுத்தறிவு கலையாக வளரவேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
12.01.2023 அன்று சென்னை,
நேரு உள்விளையாட்டு அரங்கில்,
பள்ளிக்கல்வித் துறையின் கலைத் திருவிழாவில்
கலந்து கொண்டு ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசினுடைய பள்ளிக்கல்வித் துறை சார்பில் நடத்தப்பட்டிருக்கக்கூடிய மாநில அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றிவாகை சூடிய ஒவ்வொரு மாணவ, மாணவியர்க்கும் முதலில் என்னுடைய அன்பான வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நீங்கள் பெற்றுள்ள வெற்றி என்பது சாதாரண வெற்றி அல்ல. பல்லாயிரக்கணக்கானவர்களுடன் நீங்கள் போட்டி போட்டு வெற்றி பெற்றிருக்கிறீர்கள்.

இந்த வெற்றிக்கு உங்களுடைய துணிச்சலும், தன்னம்பிக்கையும், அறிவாற்றலும் அடிப்படைக் காரணம். இதை வாழ்நாள் முழுமைக்கும் நீங்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உங்களை நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

ஏடு தூக்கிப் பள்ளியில்
இன்று பயிலும் பையனே
நாடுகாக்கும் தலைவனாய்
நாளை விளங்கப் போகிறாய்"
என்று எழுதினார் குழந்தைக் கவிஞர்
அழ.வள்ளியப்பா அவர்கள்.

அந்த வகையில் நாளைய தமிழ்நாட்டைக் காக்கும் இலட்சியவாதிகளாக நீங்கள் இருக்கப்

போகிறீர்கள். ஆக, அதற்காக நீங்கள் அடைந்திருக்கக்கூடிய இந்த வெற்றியை முதற்கட்ட வெற்றியாக இதனை நீங்கள் கருதிட வேண்டும்.

தமிழ்நாடு அரசின் பள்ளிக்கல்வித் துறையின் சார்பில் இந்த கலைவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பள்ளிக்கூடம், பாடப்புத்தகம், வகுப்பறை ஆகியவற்றைத் தாண்டி இத்துறையானது பல்வேறு வகைகளிலும் மாணவர்களின் அறிவுத் திறனையும், கலைத் திறனையும் ஊக்கப்படுத்தி வருகிறது.

13,210 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 6 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலக்கூடிய 28,53,882 மாணவர்களை, 206 வகையிலான போட்டிகளில் பங்கேற்கச் செய்து, மாபெரும் விழாவாக, இதை உருவாக்கி இருக்கக்கூடிய இந்தத் துறையை பொறுப்பேற்றுக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அமைச்சர் தம்பி அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களை நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். அதேபோல் அவருக்குத் துணை நின்றிருக்கக்கூடிய இந்தத் துறையினுடைய உயர் அதிகாரிகள், அலுவலர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அவர்களுக்கெல்லாம் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பாடம், பாடப்புத்தகம், வகுப்பறை ஆகியவற்றைத் தாண்டி, கற்பித்தல் வழிமுறைகளை பள்ளிக்கல்வித் துறை பயன்படுத்தி வருகிறது. நமது மரபார்ந்த கலைகளை மாணவர்கள் நெஞ்சில் விதைப்பதை நான் பாராட்டுகிறேன்.

பள்ளிகல்வியில் கலை மற்றும் பண்பாட்டை ஒருங்கிணைப்பதால் மாணவர்களின் சிந்தனைத் திறன் அதிகரிக்கும், விரிவடையும். பிற பாடங்களை கற்பதால் முடிவெடுக்கும் திறனும் அதிகரிக்கும். இதனால் தன்னம்பிக்கை பெறுவார்கள்.

6 முதல் 9ஆம் வகுப்பு வரை பயிலக்கூடிய மாணவ, மாணவியருக்கு கலைப் பயிற்சி அளிக்கவும் கல்வியில் கலைகளை கொணரும் வகையில், கால அட்டவணை உருவாக்கி கலை அரங்கமாக செயல்படுத்தி வருகிறது.

கலையில் ஆர்வமுள்ள ஒரு ஆசிரியரால் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பும் மேற்கொள்ளப்படுகிறது. மாநில அளவில்

கருத்தாளர்களின் பங்கெடுப்புடன் அனைத்துக் கலை வடிவங்களுக்கும் கலைத்திட்டம் உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையில், இந்தத் திட்டம் பள்ளிகளில் செயல்படுத்தப்படுகிறது. அந்த வகையில்தான் கலைத் திருவிழா போட்டிகள் நடத்தப்பட்டு, அதில் நீங்கள் பங்கெடுத்து பரிசுகளைப் பெற்றுள்ளீர்கள்.

கலையரசன், கலையரசி பட்டமும் அரசுச் சார்பில் வழங்கப்படுகிறது. முதல் 20 இடங்களைப் பெறக்கூடிய மாணவர்களை வெளிநாட்டிற்கு கல்விச்சுற்றுலா அழைத்துச் செல்கிறோம். வாழ்வின் கடினமான நேரங்களில் நாம் கற்ற கலைகளை மனதிற்கு மாமருந்து என்பதனை உணர்ந்து, மாணவர்களின் கல்வித்திறன்களை, கற்பனைத் திறனை ஊக்கப்படுத்தும் வகையில் கலைத் திருவிழாவினை உருவாக்கியிருக்கும் பள்ளிக்கல்வித் துறைக்கு என்னுடைய பாராட்டுக்களை நான் மீண்டும், மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாணவர்களின் கலை ஆர்வத்தை ஊக்குவிப்பது, கற்பனைத் திறனை மேம்படுத்துவது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டின் பாரம்பரிய கலைவடிவங்கள் மற்றும் பண்பாடு பற்றிய பெருமிதத்தையும் மாணவர்களிடையே சேர்க்கும் வகையில் பள்ளிக்கல்வித் துறை செயல்பட்டு வருகிறது.

கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் பள்ளிக்கல்வித் துறையானது எத்தனையோ மகத்தான முன்னெடுப்புகளைச் செய்திருக்கிறது.

- ❖ முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ரூ.36,895 கோடி நிதியை பள்ளிக் கல்வித்துறைக்கு ஒதுக்கியுள்ளதுடன் அரசுப் பள்ளிகளில் படித்து வரும் மாணவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.
- ❖ இல்லம் தேடிக் கல்வி
- ❖ எனது கனவுத் திட்டமான 'நான் முதல்வன்'
- ❖ பள்ளி மேலாண்மைக் குழுக்கள்
- ❖ எண்ணும் எழுத்தும்

ஆகிய திட்டங்கள் தமிழ்நாடு முழுவதும் அரசுப் பள்ளி மாணவர்களிடையே புது எழுச்சியை உருவாக்கியுள்ளது.

- ❖ மருத்துவம், பொறியியல் போன்ற தொழில் படிப்புகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு உள் ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர்களது கல்வி, விடுதிக் கட்டணத்தையும் அரசே ஏற்றுக்கொண்டுள்ளது.
- ❖ அரசுப் பள்ளிகளில் படித்து உயர்கல்வியில் சேரும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கக்கூடிய புதுமைப் பெண் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதனால் பல்லாயிரம் மாணவிகள் பயன்பெற்று வருகிறார்கள்.
- ❖ சிறப்புக் கவனம் தேவைப்படும் குழந்தைகளை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து ஆயத்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டு, உரிய மருத்துவச் சிகிச்சை, உபகரணங்கள் வழங்கி தக்க வகுப்புகளில் சேர்க்கப்பட்டு, தொடர்ந்து முழுமையான கல்வி பெற ஆலோசனை வழங்கப்படுகிறது.
- ❖ அனைத்து அரசு நடுநிலைப் பள்ளிகளிலும், உயர் தொழில் கல்வி ஆய்வகங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.
- ❖ அரசு மேல்நிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class Rooms) அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- ❖ மாணவர்களுக்குக் கல்வி தொடர்பான தகவல்களையும், வழிகாட்டுதல்களையும் வழங்கக்கூடிய நோக்கத்தோடு 24 மணி நேரமும் செயல்படக் கூடிய கட்டணமில்லா தொலைபேசிச் சேவை 14,417 ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

❖ அரசுப் பள்ளியில் 10ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு 11, 12ஆம் வகுப்புகளில் சிறப்புப் பயிற்சி அளிப்பதற்கான மாதிரிப் பள்ளித் திட்டம் நடைபெற்று வருகிறது.

❖ அரசுப் பள்ளி மாணவர்களிடையே பல்கோண திறன்களை வளர்க்கக்கூடிய நோக்கில், பள்ளிகளில் சிறார் திரைப்படம் திரையிடுதல் சிறப்புமிக்க புதுமை முயற்சி சென்ற ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

❖ அரசுப்பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலக்கூடிய மாணவர்களிடையே அறிவியல் மற்றும் கணித கருத்துக்கள் குறித்து சிந்திக்கும் ஆர்வத்தை உருவாக்க, 13,210 அரசுப் பள்ளிகளில் 'வானவில் மன்றம்' தொடங்கி செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இப்படி ஏராளமான திட்டங்களை நமது அரசு செயல்படுத்தி வருகிறது.

ஒரு போட்டியில் கலந்து கொண்டோம் - வெற்றி பெற்றோம் - பரிசு பெற்றோம் என்று இல்லாமல் தொடர்ச்சியாக நீங்கள் போட்டிகளில் பங்கெடுங்கள்.

படிப்பு முடிந்ததும் வேலைக்குப் போய்விட்டோம், திருமணம் நடந்துவிட்டது, கை நிறைய சம்பாதிக்கிறோம் என்பதில் மட்டும் நிறைவடைந்து விடாமல் கலைத் தொண்டையும் இத்துடன் சேர்த்து அனைவரும் தொடர வேண்டும்.

உங்களது அறிவு கலை அறிவாக, கல்வி அறிவாக, பகுத்தறிவாக வளர வேண்டும், வளர வேண்டும் என்று உங்கள் அத்தனை பேரையும் நான் மனதார மீண்டும் ஒரு முறை வாழ்த்தி விடை பெறுகிறேன்.

படமும்/செய்தியும்

தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சி

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 01.02.2023 அன்று சென்னை, திருவல்லிக்கேணி, விவேகானந்தர் இல்லம் எதிரில், மெரினா கடற்கரை உட்புறச் சாலையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முத்தான திட்டங்கள், தமிழ்நாடு அரசின் சாதனைகளை விளக்கும் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைத்து பார்வையிட்டார்.

நம்மைக் கடலும், கண்டங்களும் பிரித்திருந்தாலும் தமிழ் இணைக்கும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 12.01.2023 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் 2023" விழாவில் கலந்து கொண்டு ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

தமிழர்களாகக் கூடியிருக்கிறோம். தமிழ் உணர்வோடுக் கூடியிருக்கிறோம். தமிழன் என்ற அந்த எண்ணத்தோடுக் குழுமியிருக்கிறோம்.

தமிழைப் பற்றித் தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடிச் சொல்வார்கள், "உளங்கவர் ஓவியமே, உற்சாக காவியமே, ஓடை நறுமலரே, ஒளிரும் புதுநிலவே, அன்பே, அமுதே, அழகே, உயிரே, இன்பமே, இனியத் தென்றலே, பணியே, கனியே, பழரசச் சுவையே, மரகத மணியே, மாணிக்கச் சுடரே, மன்பதை விளக்கே" என்றெல்லாம் தமிழை அழைக்கத் தோன்றுகிறது. இருந்தாலும் தமிழை, தமிழே என்று அழைக்கக்கூடிய சுகம் வேறு எதிலும் இருக்க முடியாது. அப்படிப்பட்டத் தமிழுக்கு பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே நாம் இங்கேக் கூடியிருக்கிறோம்.

இன்றல்ல, நேற்றல்ல, ஈராயிரம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே உலகில் உள்ள பிற நாடுகளுடன் நல்லுறவு கொண்டிருந்த பெருமை தமிழ்நாட்டுக்கு உண்டு. அந்தப் பெருமையின் தொடர்ச்சியாகத்தான், தமிழ் நிலப்பரப்பின் அடையாளமாக அயலகத்தில் வாழும் தமிழர்களான நீங்கள் அனைவரும் இங்கே வந்திருக்கிறீர்கள்.

வரலாற்றுப் பெருமைமிக்க ஏதென்ஸ், ரோம் நகரங்களுக்கு இணையாக பூம்புகார், கொற்கை, தொண்டிப் போன்ற நகரங்களைக் கொண்டது நம்முடைய பழந்தமிழ்நாடு. பெருங்கடல் கடந்து, உலகளாவிய மனித குலத்துடன் நட்புறவுப் பாராட்டி மானுடச் சமுத்திரத்தில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள் தமிழர்கள்.

கடற்படைக் கொண்டிருந்த சோழ மன்னர்கள் மேற்கொண்டப் பயணங்கள் வெறும் போர்க்களங்களாக மட்டுமல்ல, பண்பாட்டு உறவுகளாகவும் மலர்ந்திருக்கின்றன. அதற்கான தடயங்களைத் தென்கிழக்கு ஆசிய நாடுகள் பலவற்றில் காண முடியும்.

பூம்புகார் எனும் காவிரிப்பட்டினத்தில் துறைமுகம் சோழர் காலத்தில் பல்வேறு நாடுகளுடன் ஏற்றுமதி - இறக்குமதி வணிகத்தில் ஈடுபட்டிருந்ததை சங்க இலக்கியமான பட்டினப்பாலைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

கால வளர்ச்சியில் தமிழர்கள், கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காகப் பிற நாடுகளுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டன. மலேயா, ஃபிஜி, இலங்கை, தென்னாப்பிரிக்கா, மடகாஸ்கர் தீவுகள் எனப் பல நாடுகளுக்கும் தொழிலாளர்களாக செல்ல வேண்டிய நிலைமையும் ஏற்பட்டது. எந்த நாட்டிற்குச் சென்றாலும், அங்கே காடு திருத்தி, கழனிச் செழிக்கச் செய்து, உழைப்பால் தன்னை மட்டுமின்றித் தனக்கு வாழ்வளித்த நாட்டையும் உயர்த்திக் காட்டியவர்கள்தான் நீங்கள். தலைமுறைகள் பல கடந்தத் தமிழர்கள். அவர்களின் வழித்தோன்றல்கள் நீங்கள்.

உலக நாடுகளில் குடியேறிய நம் தமிழர்களின் உழைப்பும் தியாகமும் தாய்மொழியாம் தமிழுக்கும் தாய் தமிழ்நாட்டிற்கும் புகழ் சேர்க்கும் வகையில், அந்தந்த நாடுகளில் அரசியல், தொழில், பொருளாதாரம் எனப் பல நிலைகளில் தவிர்க்க முடியாதச் சக்தியாகத் தமிழர்கள் விளங்கி வருகின்றனர். எந்த நாட்டுக்குச் சென்றாலும், சொந்த நாட்டையும் தாய்மொழியையும் தமிழர்கள் தங்கள் நெஞ்சக் கூட்டில் அடைகாத்து வைத்திருப்பது வழக்கம். விதை நெல்லாகத் தமிழை எடுத்துச் சென்றுத் தாங்கள் வாழும் நாடுகளிலும் தமிழ் விளையும் நிலங்களை உருவாக்கியவர்கள் தமிழர்கள். பல தலைமுறைகள் கடந்த அயலகத் தமிழர்களின் ஆற்றலும், ஆராய்ச்சித் திறனும், உழைப்பின் மேன்மையும், உயர்ந்த பொறுப்புகளும் இன்றுத் தனிப்பெரும் வரலாறாக உருவாகியுள்ளன.

நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் என்பார்கள். அதுபோல அயலகத்தில் குடியேறி வரும் தமிழர்கள், அங்கே பணிபுரியும் இடத்திலும் சிரமத்திற்கும் ஏமாற்றத்திற்கும் உள்ளாகக்கூடியச் சில நிகழ்வுகள் நடந்து கொண்டுதான் வருகிறது. அதுமட்டுமின்றி மருத்துவ ரீதியாகவும் இன்னலுக்கு ஆட்படுகின்ற நிலைமையும் உள்ளது.

எனவேதான், உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவரான நம் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாகத் தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது, 2010ஆம் ஆண்டில், அயலகத் தமிழர்களின் நலன் காத்திட, ஒரு துறையை உருவாக்கிட முனைந்தார்கள்.

உலகின் எத்திசையிலும் வாழும் தமிழர்களின் உள்ளத்துடிப்பு எப்படிப்பட்டது என்பதை அறிந்தத் தலைவர் கலைஞர் அவர்கள், அவரது திரைக்காவியமானப் பராசக்தியில், "பிறக்க ஒரு நாடு.. பிழைக்க ஒரு நாடு.." என்று தாய்நிலத்தை விட்டு வேறு நாட்டில் வாழும் தமிழர்களின் நிலையை வசனமாக வடித்திருப்பார்.

கடல் கடந்த தமிழர்களின் வேதனை உணர்வை வெளிப்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞரின் பேனா, அதனைத் துடைப்பதற்கான திட்டத்தையும் வரைந்து காட்டியது. வெளிநாடுவாழ் தமிழர்களுக்காக, மறுவாழ்வுத் துறையில் ஒரு பிரிவு இணைக்கப்பட்டு அயலகத் தமிழர்கள் நலன் காக்கும் பணி தொடங்கப்பட்டது.

2011இல் இதனைத் தனித் துறையாக உருவாக்கிடத் தி.மு.கழகத்தின் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதியாக அளிக்கப்பட்டது. அதனை உடனடியாக நிறைவேற்றிட வாய்ப்பு அமையவில்லை. காரணம், எப்படி உங்களுக்கும் தமிழ்நாட்டிற்கும் இடைவெளி உள்ளதோ, அதுபோல தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு மீண்டும் அமைவதற்கு ஒரு பத்தாண்டுக் கால இடைவெளி ஏற்பட்டு விட்டது.

கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றிப் பெற்று ஆட்சி அமைத்தத் திராவிட மாடல் அரசு, தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, அயலகத் தமிழர்களின் நலனுக்கென தனியே ஓர் அமைச்சகத்தை உருவாக்கி அமைச்சரையும் நியமித்துள்ளது. அதுமட்டுமின்றி அயலக மண்ணில் வசிக்கும் நம் தமிழ் மக்களை ஒருங்கிணைக்கவும், அவர்களுக்குத் தேவை

ஏற்படக்கூடிய நிலைகளில் உதவி புரிந்து வரும் தமிழ்ச் சங்கங்களின் பணிகளை அங்கீகரிக்கவும், அடுத்தத் தலைமுறைக்கு தமிழ்ப் பண்பாடு, தமிழ்மொழி கற்றல், கற்பித்தல் போன்றப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தின் அடிப்படையிலும், ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ஆம் நாள் "அயலகத் தமிழர் நாள்" கொண்டாடப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அது வெறும் அறிவிப்பல்ல என்பதைத்தான் இங்கே திரண்டிருக்கின்ற நீங்களும் உங்களோடு கலந்து நானும் சேர்ந்து இங்கே நிரூபித்துக் கொண்டிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, கடந்த ஆண்டு செப்டம்பர் 24 அன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தேமதுர தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்திட முதற்கட்டமாக ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டோடுத் தமிழ் பரப்புரை கழகத்தைத் தொடங்கி வைத்தேன். இதன் மூலம் அயலகத் தமிழர்கள், தமிழை எளிமையாக கற்பதற்கான தமிழ்ப் பாட நூல்கள் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் கற்றல், கற்பித்தலுக்கான துணைக் கருவிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இணைய வழியில் தமிழைக் கற்பித்தலும் தொடங்கப்பட்டுள்ளது. பல்வேறு நாடுகளுக்குச் சென்று வாழும் தமிழர்களின் நலன் பேணவும் அவர்களுக்கான நலத்திட்டங்களைச் செயல்படுத்தவும், புலம்பெயர் தமிழர் நலவாரியம் உருவாக்கப்பட்டு திரு. கார்த்திகேய சிவசேனாபதி அவர்கள் அதன் தலைவராகவும், வெளிமாநிலங்களில் மற்றும் வெளிநாடுகளில் வசிக்கக்கூடிய தமிழர்கள் அரசுசாரா உறுப்பினர்களாகவும், அரசு உயர் அலுவலர்களை உள்ளடக்கியதாகவும் இந்த வாரியம் செயல்பட உள்ளது.

ஆம்.. சொன்னதைச் செய்வோம். செய்வதைச் சொல்வோம் என்ற முத்தமிழறிஞர் கலைஞரின் வழியிலான அரசு இது.

அயலகத்தில் வாழும் தமிழர் நலன் காக்கும் வகையில் தொடங்கப்பட்ட இத்துறையில், கடந்த ஓராண்டில் மட்டும்,

வெளிநாடுகளில் இறந்துபோன 288 தமிழர்களின் உடல்களைத் தமிழ்நாட்டிற்கு கொண்டு வருதல்,

அங்கே இறந்தவர்களின் ஊதிய நிலுவை மற்றும் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுத் தருதல்,

மருத்துவ இயலாமையால் பாதிக்கப்பட்டவர்களைத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து உரிய சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தல்,

இதுபோன்ற வேலைகளை அங்குள்ள இந்தியத் தூதரகம் மற்றும் தமிழ்ச் சங்கங்களின் உதவியுடன் செயல்படுத்தி வருகின்றது.

அயலகத் தமிழர்களின் நலனுக்கென அமைக்கப்பட்டுள்ள அயலகத் தமிழர் நல வாரியத்தில் பதிவு செய்து, அயல்நாட்டிற்கு செல்லும் தமிழர்களுக்கு அடையாள அட்டை, காப்பீடு, குடும்பத்தில் உள்ளவர்களுக்கு திருமண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை என பல நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன.

ஏற்கெனவே நம் அரசு, வெளிநாடுவாழ் தமிழர்கள் நலனுக்கென பல்வேறு முன்னெடுப்புகளை செய்து வருகிறது. குறிப்பாக, கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில், வெளிநாடுகளிலிருந்து 80 ஆயிரம் தமிழர்கள் பாதுகாப்பாகத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வரப்பட்டனர். அவர்கள் பணி வாய்ப்பை இழந்த காரணத்தால், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் மூலமாக மானியத்துடன் கூடிய கடன் வசதி வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ரஷ்யா - உக்ரைன் இடையே போர் மூண்ட போது, இந்திய ஒன்றிய அரசின் ஒத்துழைப்புடனும், உக்ரைனின் அண்டை நாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்கள் மற்றும்

தன்னார்வலர்கள் உதவியுடனும் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முயற்சியால், உக்ரைனில் மருத்துவம் பயின்று வந்த 1,890 மாணவர்கள் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். இவர்களில் 1,524 மாணவர்கள் தமிழ்நாடு அரசின் செலவில் சொந்த ஊருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆண்டு இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடி மற்றும் உணவுப் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, தமிழ்நாடு அரசின் சார்பிலே உடனடியாக அவர்களுக்குத் தேவையான ரூ.174 கோடி மதிப்பிலான உணவுப் பொருட்கள், பால்பவுடர் மற்றும் உயிர் காக்கும் மருந்துப் பொருட்களை அனுப்பி வைத்து, மனிதநேய அடிப்படையில் அங்குள்ள மக்களின் இன்னலைப் போக்கிட உதவிக்கரம் நீட்டியது.

தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமையும்போதெல்லாம், வெளிநாடுவாழ் தமிழர்களுக்கான பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்தைக் கவனத்தில்கொண்டு, தாயுள்ளத்தோடு திட்டங்கள் தீட்டிச் செயல்படுத்தி வருகிறோம்.

அதன் தொடர்ச்சியாக, அயலகத் தமிழர் நாளான இன்றுச் சில அறிவிப்புகளை மகிழ்ச்சியோடு நான் அறிவிக்க விரும்புகிறேன்.

முதலாவதாக, தமிழ்நாட்டிலிருந்து பல்வேறு காலக்கட்டங்களில், புலம்பெயர்ந்து அயல்நாடுகளில் நிரந்தரமாகவும், தற்காலிகமாகவும் வாழ்ந்து வரும் தமிழர்கள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொண்டு தரவுகள் முழுமையாக ஆவணப்படுத்தப்படும்.

இரண்டாவதாக, புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் குழந்தைகள், இளம் மாணவர்கள் தாய் தமிழ்நாட்டின் மரபின் வேர்களோடு உள்ள தொடர்பைப் புதுப்பிக்கும் வண்ணம், ஆண்டுக்கு 200 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தமிழ்நாடு பண்பாட்டு சுற்றுலாவிற்கு அழைத்துவர ஏற்பாடுச் செய்யப்படும்.

மூன்றாவதாக, அயல்நாடுகளில், வெளிமாநிலங்களில் பணிக்குச் சென்று அங்கு எதிர்பாராதவிதமாக இறந்துவிடும் தமிழர்களின் குடும்பத்திற்கு மாத ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படும்.

நான்காவதாக, அயல்நாடுகளுக்கு செல்வோர் குறித்த தரவுத் தளம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

-என்ற அறிவிப்புகளை வெளியிடுவதோடு, வெளிநாடுகளுக்குச் செல்லும் நம் தமிழ்ச் சொந்தங்களின் நலன் காத்திட பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி, கண்ணை இமை காப்பதைப்போல, உலகெங்கும் வாழும் நம் தமிழ் இனத்தை இந்த அரசு தொடர்ந்து காத்திடும் என்று மீண்டும் உறுதியளிக்கிறேன். தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் என்ற பொறுப்பில் இருக்கக்கூடிய நான், உங்களில் ஒருவனாக, உங்களுடைய ஒரு சகோதரனாக, உங்களில் பலருக்கு அண்ணனாக, சிலருக்குத் தம்பியாக, ஏன், அனைவருக்கும் உடன்பிறப்பாக நான் இருக்கிறேன். உங்களுக்கு உறுதுணையாக இந்த அரசு இருக்கும். உங்களால் உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய உங்களால் ஆன ஒத்துழைப்பினை நீங்கள் வழங்குங்கள், இணைந்து நாம் பயணிப்போம்.

நம்மைக் கடலும் கண்டங்களும் பிரித்திருந்தாலும், தமிழ் இணைக்கும்.

உலகெங்கும் வாழும் தமிழர் வாழ்வு செழிக்கும். தமிழ்நாடு தழைக்கும்.

தமிழால் இணைவோம்!

தமிழை வளர்ப்போம்!

தமிழரையும் வளர்ப்போம்!

அனைவருக்கும் தமிழர் திருநாளாம் இனிய பொங்கல் நல்வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

படமும் / செய்தியும்

வீரபாண்டிய கட்டபொம்மன் அவர்களின் திருவுருவச் சிலை

மருதுபாண்டியர்களின் திருவுருவச் சிலை

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. அவர்களின் மார்பளவு சிலை

செய்தித் துறையின் சார்பில்

தியாகச் சீலர்களுக்கு திருவுருவச் சிலைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 14.02.2023 அன்று தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை சார்பில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுபாண்டியர்களின் திருவுருவச் சிலைகள் மற்றும் வ.உ.சி. அவர்களின் மார்பளவுச் சிலை ஆகியவற்றை திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்கள், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், பெருநகர் சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜெ.எம். ஹசன் மௌலானா, துணை மேயர் திரு. மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், இ,ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. த. மோகன், இ,ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

ரூ.1,500 கோடி முதலீட்டில் 4,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கும்

கனிமங்களை பிரித்தெடுக்கும் தொழிற்சாலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் 09.01.2023 அன்று கடற்கரையோர கனிமவளத்தை வணிக ரீதியில் பிரித்தெடுத்து சந்தைப்படுத்த தமிழ்நாடு கனிம நிறுவனத்திற்கும், ஐ.ஆர்.இ.எல். (இந்தியா) நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் 09.01.2023 அன்று தலைமைச் செயலகத்தில், கடற்கரையோர கனிமவளத்தை வணிக ரீதியில் பிரித்தெடுத்து சந்தைப்படுத்த தமிழ்நாடு கனிம நிறுவனமும், ஐ.ஆர்.இ.எல். (இந்தியா) நிறுவனமும் இணைந்து ஓர் புதிய நிறுவனம் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழகத்தில் கிடைக்கக்கூடிய கனிம வளங்களை விஞ்ஞானரீதியாக சுற்றுச்சூழல் மாசுபடா வண்ணம், சுரங்கப்பணி மேற்கொண்டு, அதன்மூலம் பல்வேறு உபதொழில்கள் தொடங்கி தொழில்வளத்தை பெருக்கவும், கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிட வேண்டும் என்பது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையாகும்.

கடற்கரையோர கனிமங்களின் சுரங்க அனுமதி, அரசு நிறுவனங்களுக்கோ, அரசிற்குச் சொந்தமான அல்லது அரசால் கட்டுப்படுத்தப்படுகிற நிறுவனங்களுக்கு மட்டுமே வழங்கப்பட வேண்டும் என்று அணுசக்தி கனிம அனுமதி விதியின்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒன்றிய அரசின் ஐ.ஆர்.இ.எல். (இந்தியா) நிறுவனமும், தமிழ்நாடு அரசின் தமிழ்நாடு கனிம நிறுவனமும் இணைந்து, தமிழகத்தின் தென் மாவட்டங்களின் கடற்கரையோர கனிம வளங்களை குறிப்பாக, கார்னட் (Garnet), இலுமினைட் (Ilmenite), ஜிர்கான் (Zircon), ரூட்டைல் (Rutile) போன்ற கனிமங்களை பிரித்தெடுத்து சந்தைப்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு கனிம நிறுவனமும், ஐ.ஆர்.இ.எல். (இந்தியா) நிறுவனமும் இணைந்து ஓர் புதிய நிறுவனம் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம், கடலோரக் கனிமங்களை பிரித்தெடுக்கவும், அதனை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக மேம்படுத்தவும், அதன்மூலம் அணுசக்தி துறைக்குத் தேவையான முக்கியமான கனிமங்கள் கிடைக்கச் செய்வதுடன் பிற தொழில்களுக்கு இதர கனிமங்கள் கிடைக்கப்பெற வாய்ப்பும் உண்டாகும்.

இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கண்டறியப்பட்டுள்ள தேரி மணல் இருப்பு சுமார் 52 மில்லியன் டன்னாகும். இதனைக் கொண்டு தூத்துக்குடி மாவட்டத்தில் குதிரைமொழி மற்றும் சாத்தான்குளம் ஆகிய இடங்களில் கனிமங்களை பிரித்தெடுக்கும் இரண்டு தொழிற்சாலைகள் தலா ரூ.1,500 கோடி முதலீட்டில் நிறுவி ஆண்டிற்கு ஒவ்வொரு தொழிற்சாலையிலிருந்தும் ரூ.1,075 கோடி வருவாய் ஈட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம் இப்பகுதிகளில் சிறப்பானப் பொருளாதார வளர்ச்சி ஏற்படுவதுடன், நேரடியாகவும் மறைமுகமாகவும் சுமார் 4,000 பேருக்கு வேலைவாய்ப்பு உண்டாகும். ◆

இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வலுப்பெறச் செய்யும் இன்றியமையாத திட்டம் "சேது சமுத்திரத் திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், சேது சமுத்திரத் திட்டம் குறித்த அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 12.01.2023 அன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

150 ஆண்டு காலக் கனவுத் திட்டமான சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்ற தீர்மானத்தை இம்மாமன்றத்தில் முன்மொழிவதை வரலாற்றுக் கடமை என்று நான் கருதுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவுத் திட்டம் அது. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றப் பாடுபட்ட திட்டம் அது. பாக் நீரினையையும், மன்னார் வளைகுடாவையும் இணைக்கும் ஆடம்ஸ் பாலத்தின் குறுக்கே வெட்டப்பட வேண்டிய கால்வாயின் பெயர்தான் சேது சமுத்திரத் திட்டம்.

இந்தியாவினுடைய முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தலைமையில் 1963ஆம் ஆண்டு நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெற்ற திட்டம் இது. 1967ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், 'தம்பிக்கு' எழுதிய மடலில் இத்திட்டத்தை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள். 'சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றினால், வர்த்தகம் பெருகும். இலங்கையைச் சுற்றிக் கொண்டு கப்பல் போக வேண்டிய நீளம் குறையும். இங்கேயுள்ள மீனவர்களின் வாழ்வு செழிக்கும். தமிழ்நாடு எல்லா வளமும் கொண்ட நாடாக மாறும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதினார்கள். இத்திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு எழுச்சி நாள் கொண்டாடுவது என்றும் அறிவித்தார்கள்.

1972ஆம் ஆண்டு தூத்துக்குடி துறைமுக நுழைவு வாயிலில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் சிலையைத் திறந்து வைக்க பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வந்தபோது, அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதனை வலியுறுத்தினார். தூத்துக்குடி துறைமுகத்தின் பயன் மேலும் வளர வேண்டுமானால், சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் மிகமிக அவசியம் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வலியுறுத்திப் பேசினார்கள்.

1998ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் அவர்கள், இத்திட்டத்துக்கான திட்டப் பணிகளுக்காக நிதியினை ஒதுக்கினார். பா.ஜ.க. ஆட்சியில்தான் சேது சமுத்திரத் திட்டத்துக்கான பாதை எது எனத் தீர்மானிக்கப்பட்டது.

2004ஆம் ஆண்டு ஒன்றிய அளவில் ஆட்சி மாறி, காங்கிரஸ் தலைமையில் தி.மு.க.வை உள்ளடக்கிய கூட்டணி ஆட்சி மலர்ந்த பிறகு ரூ.2,427 கோடி நிதி ஒதுக்கப்பட்டு, திட்டப் பணிகள் பாதியளவு முடிந்த நிலையில், அரசியல் காரணங்களுக்காக பா.ஜ.க. சார்பில் இத்திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது என்பதும், இத்திட்டத்தை ஆரம்பம் முதல் ஆதரித்து வந்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் அம்மையார் அவர்கள் திடீரென நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு இத்திட்டத்துக்கு எதிராக வழக்குப் போட்டார் என்பதையும் இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இந்த அரசியல் முட்டுக்கட்டை போடும் செயல் மட்டும் நடக்காமல் இருந்தால் இத்திட்டம் தொடங்கப்பட்டு பத்தாண்டு காலத்தில் ஏராளமான பயன் கிடைத்திருக்கும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல, நாட்டினுடைய அந்நியச் செலாவணி வருவாய் அதிகரிக்கும்; தமிழ்நாட்டிலே தொழில் வணிகம் பெருகும்; கப்பல்களின் பயண தூரம், நேரம் பெருமளவு குறையும்; தமிழ்நாடு மற்றும் அண்டை மாநில துறைமுகங்களில் சரக்குகளைக் கையாளும் திறன் அதிகரிக்கும்; சிறுசிறு துறைமுகங்களை உருவாக்க முடியும்; சேதுக் கால்வாய் திட்டத்தின்கீழ், மீன்பிடித் துறைமுகங்கள் மேம்படுத்தப்படுவதால், கடல்சார் பொருள் வர்த்தகம் பெருகி, அதன் காரணமாக மீனவர்களுடைய பொருளாதாரம், வாழ்க்கைத் தரம் உயரும்.

மீனவர்களுடைய பாதுகாப்பைக் கணக்கில் கொண்டுதான் இந்தத் திட்டத்தினுடைய காரியங்கள் நடைபெறுகின்றன. மன்னார் வளைகுடாவில் இருந்து பாக் கடல் சென்று வர மீனவர்களுக்கு இந்தக் கால்வாய் வசதி அளிக்கும். இலங்கை உள்ளிட்ட வேறு நாடுகளின் துறைமுகங்களில் இந்திய சரக்குகள் பரிமாற்றம் செய்வது தடுக்கப்படும். நாட்டின் கடலோரப் பாதுகாப்பு வலுப்படுத்தப்படும். இத்திட்டத்தினால் மிக முக்கியமாக, ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு தொடர்ந்து கிடைக்கும். இவை எல்லாம்தான் அப்போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சுட்டிக்காட்டியவை. இவை அனைத்தும் நடந்திருக்கும். நடக்காமல் போனதற்கான அரசியல் காரணங்களை நான் விரிவாகப் பேச விரும்பவில்லை.

தமிழ்நாட்டு மக்களின் நீண்டகால கனவு திட்டமான சேது சமுத்திரத் திட்டம் தொடர்புடைய வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடந்து வருகிறது. சேது சமுத்திரத் திட்டத்தை மாற்றுப்பாதையில் செயல்படுத்துவோம் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு சொல்லி இருக்கிறது. ஆனால் "ராமேஸ்வரம் கடற்பகுதியில் இருந்தது எந்த மாதிரி கட்டுமானம் என்பதை கூறுவது கடினம்" என்று ஒன்றிய அமைச்சர் நாடாளுமன்றத்தில் சொல்லி இருக்கிறார். இத்தகைய நிலைப்பாட்டுக்கு பா.ஜ.க. அரசு வந்துள்ள நிலையில் சேது சமுத்திரத் திட்டத்தைப் போராடியும் வாதாடியும் செயல்படுத்த வைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை இப்பேரவையின் சார்பில் நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்!

சேது சமுத்திரத் திட்டம் தொடர்பான தீர்மானத்தை நான் இப்பொழுது முன்மொழிகிறேன்.

தீர்மானம்

"தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் வலுப்பெறச் செய்வதற்கு மிக இன்றியமையாத திட்டமாக சேது சமுத்திரத் திட்டம் விளங்கி வருகின்றது.

1860ஆம் ஆண்டு ரூ.50 இலட்சத்தில் Commander Taylor என்பவரால் உருவாக்கப்பட்ட மகத்தானத் திட்டம் இது. அதன்பிறகு 1955இல் தமிழ்நாட்டின் சிறந்த நிபுணர் டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் குழு, 1963இல் நடைபெற்ற ஒன்றிய அமைச்சரவைக் கூட்டம், 1964இல் அமைக்கப்பட்ட டாக்டர் நாகேந்திரசிங், ஐ.சி.எஸ் தலைமையிலான உயர்நிலைக் குழு - ஆகிய பொறியியல் வல்லுநர்களால் பல்வேறு ஆண்டு காலம் ஆராய்ந்து வடிவமைக்கப்பட்டதுதான் சேது சமுத்திரத் திட்டமாகும். இதன் வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில் பணிகளை மேற்கொள்ள திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் போது பிரதமராக இருந்த மாண்புமிகு அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் "Feasibility Study"க்கு அனுமதியளித்தார்கள். அப்போதுதான் சேது சமுத்திரத் திட்டத்தின் வழித்தடம் எது என்பதும் இறுதி செய்யப்பட்டது. பின்னர் ஒன்றியத்தில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு பொறுப்பேற்றது.

திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்றிருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் பிரதமரான டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால் 2004ஆம் ஆண்டு ரூ.2,427 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் அனுமதிக்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவராக இருந்த அன்னை சோனியா காந்தி அவர்களும் முன்னிலை வகிக்க இந்தத் திட்டத்தை பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் 02.07.2005 அன்று துவக்கி வைத்தார்கள்.

திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை தலைநிமிர வைக்கும் இத்திட்டத்துக்கு, குறிப்பாக தென் மாவட்டங்களைச் செழிக்க வைக்கக்கூடிய இந்தத் திட்டத்துக்கு, தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய இந்த சேது சமுத்திரத் திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது. எந்தக் காரணத்தைக் கூறி முட்டுக்கட்டை போடப்பட்டதோ, அதையே நிராகரிக்கக்கூடிய வகையிலே, தற்போது "இராமேஸ்வரம் கடற்பகுதியில் இருந்தது எந்த மாதிரி கட்டுமானம் என்பதைக் கூறுவது கடினம்" என்று ஒன்றிய அமைச்சர் மாண்புமிகு ஜிதேந்திர சிங் அவர்கள் நாடாளுமன்றத்தில் சொல்லி இருக்கிறார்.

இப்படி ஒன்றிய அரசு தெரிவித்துள்ள நிலையில், சேது சமுத்திரத் திட்டத்தை இனியும் நிறைவேற்றாமல் இருப்பது தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு - வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் நிகழ்வாகவே கருதி, இந்த மன்றம் கவலை தெரிவிக்கிறது.

இனியும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவிடாமல் சில சக்திகள் முயல்வது நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானது என்று இந்த மாமன்றம் கருதுகிறது. எனவே, மேலும் தாமதமின்றி இந்த முக்கியமான சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றிட, ஒன்றிய அரசு உடனடியாக முன்வர வேண்டும் என்றும், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு அனைத்து ஒத்துழைப்பையும் நல்கும் என்றும் இந்த மாமன்றம் ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.'

இந்த தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று அனைவரையும் கேட்டு அமைகிறேன்.

படமும் / செய்தியும்

நீட் தேர்வு விலக்கு கோருவதற்கான வழக்குகள் குறித்த ஆலோசனைக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில், 18.01.2023 அன்று தலைமைச் செயலகத்தில், நீட் தேர்வு விலக்கு கோருவதற்கான வழக்குகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. என்.ஆர்.இளங்கோ அவர்கள், அரசு தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், இ.ஆ.ப., அரசு தலைமை வழக்கறிஞர் திரு. ஆர்.சண்முகசுந்தரம், சட்டத்துறை செயலாளர் திரு. கோபி ரவிகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

சென்னை மாநகரில் 60க்கும் மேற்பட்ட கலை நிகழ்ச்சிகள், 600க்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்ற "சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழா"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 13.01.2023 அன்று சென்னை, தீவுத்திடலில், தமிழ் மண்ணின் கலைகளைக் களிப்போடு கொண்டாடும் வகையில் சென்னை மாநகரில் 40 வகையான கலைகளுடன் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் நடத்தப்பட்ட "சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா"-வை தொடங்கி வைத்து, கலை நிகழ்ச்சிகளைப் பார்வையிட்டார்.

சென்னை மாநகரில், தீவுத்திடல், கொளத்தூர் – மாநகராட்சி விளையாட்டு மைதானம், பெரம்பூர் (தெற்கு) முரசொலி மாறன் மேம்பாலப் பூங்கா, இராயபுரம் – ராபின்சன் விளையாட்டு மைதானம், மயிலாப்பூர் – நாகேஸ்வர ராவ் பூங்கா, செம்மொழிப் பூங்கா, நுங்கம்பாக்கம் – மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானம், சிந்தாதிரிப்பேட்டை – மாநகராட்சி விளையாட்டு மைதானம், தி.நகர் நடேசன் பூங்கா எதிரிலுள்ள மாநகராட்சி மைதானம், பெசன்ட் நகர் – எலியட்ஸ் கடற்கரை, திருவான்மியூர் கடற்கரை, சைதாப்பேட்டை – மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானம், கே.கே.நகர் – சிவன் பூங்கா, வளசரவாக்கம் – இராமகிருஷ்ணா நகர் விளையாட்டு மைதானம், அண்ணா நகர் – கோபுரப் பூங்கா, கோயம்பேடு – ஜெய்நகர் பூங்கா, அம்பத்தூர் – எஸ்.வி. விளையாட்டு மைதானம், எழும்பூர் – அரசு அருங்காட்சியகம் ஆகிய 18 இடங்களில் சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா 14.01.2023 முதல் 17.01.2023 வரை மாலை 6 மணி முதல் 9 மணி வரை நடைபெற்றது.

"சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா"வில், நையாண்டி மேளம், கரகாட்டம், பறையாட்டம், புரவியாட்டம், காவடியாட்டம், புலியாட்டம், தோடர் நடனம், மயிலாட்டம், சிலம்பாட்டம், வில்லுப்பாட்டு, நாட்டுப்புறப் பாடல்கள் உள்ளிட்ட 40 வகையான கலைகளுடன் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

சென்னை, தீவுத்திடல்

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை

உங்கள் அனைவருக்கும் தமிழக திருநாளாம் பொங்கல் நல்வாழ்த்துகளை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டுடைய கலையும், கலைஞர்களும் தலைநகர் சென்னையிலே சங்கமிக்கக்கூடிய வகையில் இந்த "சென்னை சங்கமம்" நிகழ்ச்சியை தொடங்கி வைக்கக்கூடிய ஒரு வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன். வாய்ப்பினை உருவாக்கித் தந்திருக்கக்கூடிய அனைவருக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு திருவிழாவில் எப்படி எல்லோரும் மகிழ்ச்சியாகவும், குதூகல மனநிலையோடு இருப்பார்களோ அப்படித்தான் நம்முடைய நம்ம ஊரு திருவிழாவிலும் நாம் எல்லோரும் கலந்துகொண்டு இன்றைக்கு மகிழ்ச்சியாக இருந்து கொண்டிருக்கிறோம்.

சட்டமன்றம், அரசு நிகழ்ச்சிகள், ஆய்வுகள், பல்வேறு நிகழ்ச்சிகள் என்று தொடர்ந்து பணிகள் இருந்தாலும், இந்த கலை நிகழ்ச்சியைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலோடு நான் இங்கு வந்து பார்த்து இருக்கிறேன். வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் எப்படி பொழுதுபோனது என்று எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் அப்படித்தான் இருந்திருக்கும்.

"தமிழன் என்றோர் இனமுண்டு! தனியே அவற்கொரு குணமுண்டு!" நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் எழுதிய வரி இது. இது வெறும் ஆரவாரம் காட்டும் வரி மட்டும் அல்ல, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஆவணப்படுத்தப்பட்ட நம்முடைய பண்பாட்டு, இலக்கியப் பெட்டகங்களை முன்னிறுத்தும் ஒரு பெருமித முழக்கம் இது!

நெஞ்சை அள்ளக்கூடிய சிலப்பதிகாரம் 'முத்தமிழ்க் காப்பியம்' என்று போற்றப்படும் அளவுக்கு இயல், இசை, நாடகம் என பழந்தமிழ்நாட்டின் கலை மேன்மையைத் திட்டவட்டமாய் தீட்டிக் காட்டியிருக்கிறது.

நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வரிசைப்படுத்திச் சொல்வார்கள். இதில் நாடகம்தான் முதலில் தோன்றியது. இசை பின்னரும், அதன் பின்னர்தான் இயலும் தோன்றியது என்று. திராவிட இயக்கம்தான் கலைகள் என்பது வசதி படைத்த வர்க்கத்தின் பொழுதுபோக்கு அம்சம் என்று இருந்த நிலையை அடியோடு மாற்றி, அவற்றை அடித்தட்டு மக்களிடத்தில் எடுத்துச் சென்ற இயக்கம் திராவிட இயக்கம்.

திராவிட இயக்கம்தான் ஒரு சமுதாயத்தின் ஒரு தரப்பினருக்கான சாமரவீச்சாய் அல்ல... சாதிகளின் பெயரால், சமயங்களின் பெயரால் சமத்துவத்துக்கு சமாதி கட்ட நினைத்த போக்குக்கு எதிரான சம்மட்டியாய்... மூடப்பழக்கங்களுக்கு எதிரான முரசொலியாய் கலைகளை மாற்றியது.

திராவிட இயக்கம்தான் கலை வடிவங்கள் மூலமாக சாமானிய மக்கள் வாழ்க்கையில் அனுபவித்த வலியைப் பேசியது.

திராவிட இயக்கம்தான் சாமானிய மக்களின் மொழியில் பேசியது.

திராவிட இயக்கம் கலைகளை வளர்த்தது, கலைகளால் வளர்ந்தது.

நாடகம், திரைப்படங்கள், கிராமியக் கலைகள் அனைத்தையும் பயன்படுத்தி, மக்களிடையே பரப்புரை செய்தோம். கலைகளின் வளர்ச்சிக்கும், கலைஞர்கள் வாழ்வில் மலர்ச்சிக்கும் கண்ணும் கருத்துமாய் கணக்கற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு. இது கலைஞர் வழி நடக்கக்கூடிய அரசு. அதனால்தான், இது கலைஞர்களுக்கான அரசாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

அதனால்தான் 2022-2023ஆம் ஆண்டு நிதிநிலைக் கூட்டத்தொடரில் கலை, பண்பாட்டுத் துறையின் வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவுக்கு ரூ.48 கோடிக்கும் மேலான நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. கலைஞர்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், கலைகளைப் போதிக்கும் கல்விக்கூடங்களின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், கற்பித்தலின் தரத்தை உயர்த்த உதவும் நவீனக் கருவிகளை வழங்கிடவும் தாராளமாக நிதி ஒதுக்கீடு நம்முடைய அரசு செய்திருக்கிறது.

கலைகள் வளர வேண்டும் என்றால் கலைஞர்கள் வறுமையின்றி வாழ வேண்டும். அதற்கு அவர்களுக்குக் கலைவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

கொரோனா பெருந்தொற்றின் காரணமாக வாய்ப்புகள் இல்லாமல் வாடிக் கிடந்த கலைஞர்களுக்கு வான் மழையாய் ஏராளமான வாய்ப்புகளும், நலத்திட்ட உதவிகளும் அரசால் வழங்கப்படுகின்றன.

❖ தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் மக்கள் கூடும் இடங்களில் 'கலைச் சங்கமம்' என்ற பெயரில் 160 கலை நிகழ்ச்சிகள் நடத்த ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுக் கலை நிகழ்ச்சிகள் நடக்கிறது.

சென்னை, தீவுத்திடல்

"சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா" குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரை

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

தனித்த அடையாளத்தோடு கலை, பண்பாடு, இலக்கியம் என வாழ்ந்திட்ட தமிழர், பின்னாளில் இனப் பகைவர்களின் சூழ்ச்சிக்கு இரையாகி தங்களது அடையாளங்களை மறந்தனர். மறத்தமிழரின் மான உணர்வை பகுத்தறிவால் மீட்டெடுத்து, இன எழுச்சி பெற வைத்தது திராவிட இயக்கம். தமிழரின் பண்பாட்டை மீட்டெடுக்கும் திராவிட சிந்தனையின் மற்றுமொரு முன்னெடுப்புதான் 'சென்னை சங்கமம்'.

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்றி வைத்த கலை பண்பாட்டுச் சுடரை அணையாது காத்திடும் விதத்தில் தற்போது "சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா" தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையின் பல்வேறு இடங்களில் வரும் ஜனவரி 13ஆம் நாள் தொடங்கி 17ஆம் நாள் வரையில் அரசு சார்பில் நடைபெறவிருக்கிறது.

வரும் ஜனவரி 13, வெள்ளிக்கிழமையன்று, சென்னை, தீவுத்திடலில் "சென்னை சங்கமம்-2023" நிகழ்வை நான் தொடங்கி வைக்கிறேன். 16 இடங்கள், 60க்கும் மேற்பட்ட கலைநிகழ்ச்சிகள், 600-க்கும் மேற்பட்ட மண்ணின் கலைஞர்களை ஒன்றிணைத்து, மீண்டும் வருகிறது "சென்னை சங்கமம்". பறையாட்டம், கரகாட்டம், மலைவாழ் மக்களின் கலைநிகழ்ச்சிகள் உள்ளிட்ட நம் பாரம்பரியக் கலை நிகழ்ச்சிகள் நடக்கவிருக்கின்றன. இதோடு தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தனிச் சிறப்பான உணவு வகைகள் உணவுத் திருவிழாவில் இடம்பெறுகின்றன. இலக்கியத் திருவிழாவும் நடைபெற உள்ளது. நம் தமிழ் மண்ணையும், மக்களையும், மக்களின் கதைகளையும் பேசும் இந்தக் கலைகளை உங்களிடம் கொண்டு வந்து சேர்ப்பதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு பெருமிதம் கொள்கிறது. 'தமிழர் என்று ஓர் இனம் உண்டு, தனியே அவருக்கு ஒரு குணமுண்டு'. 'கலைகள் யாவிலும் வல்லவனாம், கற்றவர் எவர்க்கும் நல்லவனாம்'. இந்த மாபெரும் மக்கள் திருவிழாவிற்கு அனைவரும் வாருங்கள்! வாருங்கள்! நம்ம ஊரு திருவிழாவில் சந்திப்போம்.

- 500 நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு இசைக்கருவிகள், ஆடை ஆபரணங்கள் வழங்குவதற்குத் தலா ரூ.10 ஆயிரம் வீதம் நிதியுதவி வழங்க ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
- கலைமாமணி விருது பெற்ற வறிய நிலையில் வாழும் ஒவ்வொரு மூத்த, சிறந்த கலைஞருக்கும் பொற்கிழியாக வழங்கப்படும் விருதுத் தொகை ரூ.50 ஆயிரத்திலிருந்து ரூ.1 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.
- திறமை மிக்க கலைஞர்களை ஊக்கப்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு மாவட்டத்திலும் வழங்கப்படும் 'மாவட்ட கலைமன்ற விருதுகள்' எண்ணிக்கை ஐந்தில் இருந்து 15ஆக உயர்த்தப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் சார்பாக சென்னை மற்றும் 10 மாவட்டங்களில் 'பொங்கல் கலைவிழாக்கள்' நடத்த ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றத்தின் மூலம் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் மூலம் அதிகமான கலைஞர்கள் பயன்பெறும் வண்ணம், மன்றத்திற்கான நல்கைத் தொகை ரூ.3 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் மகுடம் சூட்டுவதைப் போல 'நம்ம ஊரு திருவிழா' என்ற பெயரில் தமிழ்நாட்டின் தலைநகரமாக இருக்கக்கூடிய சென்னையிலும், கலை பண்பாட்டு மண்டலங்களின் தலைமை இடங்களாக இருக்கக் கூடிய காஞ்சிபுரம், திருச்சி, கோயம்புத்தூர், சேலம்,

"தமிழரின் பண்பாட்டை மீட்டெடுக்கும் திராவிட சிந்தனையின் மற்றுமொரு முன்னெடுப்புத்தான் சென்னை சங்கமம்"

தமிழரின் கலையும் பண்பாடும் தமிழ்நாட்டின் தலைநகரில் சங்கமிக்கும் சென்னை சங்கமம்!

பறையாட்டம் - கரகாட்டம் – மலைவாழ் மக்களின் கலைகள், இலக்கியத் திருவிழா - உணவுத் திருவிழா என உலகமே வியந்து பார்க்கும் நம்ம ஊரு திருவிழாவுக்கு அனைவரும் வாருங்கள்! சந்திப்போம்!

- "சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா" குறித்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
சமூக வலைதளப் பதிவு - 04.01.2023

tndiprnews DIPR TN tndipr TN DIPR www.dipr.tn.gov.in

தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும், அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கலைவிழாக்கள் நடத்த ரூ.9.84 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

'சென்னை சங்கமம் – நம்ம ஊரு திருவிழா' என்ற பெயரில் மிகப்பெரிய கலைக் கொண்டாட்டமாக நடக்கும் இந்தக் கலை விழாக்கள், சென்னை மாநகரில் 18 இடங்களில் நிகழ்த்தப்பட இருக்கிறது.

இந்த நிகழ்ச்சிகளில் நாட்டுப்புறக் கலைஞர்கள், செவ்வியல் கலைஞர்கள், பிறமாநில கலைஞர்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கேற்க உள்ளனர். நாற்பதுக்கும் அதிகமான கலை வடிவங்களை உங்கள் கண்முன்னே நிகழ்த்தி உங்களையெல்லாம் மகிழ்விக்க இருக்கிறார்கள்.

இந்த விழாவில் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் ஒவ்வொரு கலைஞருக்கும் இதுவரை வழங்கப்பட்ட ஒருநாள் மதிப்பூதியத்தை ரூ.2,000த்திலிருந்து ரூ.5,000ஆக உயர்த்தி வழங்க இருக்கிறோம்.

'சென்னை சங்கமம் - நம்ம ஊரு திருவிழாவில்' கண்ணுக்கு விருந்தான கலைவிழாவோடு, சென்னை மக்களின் நாவுக்கு விருந்தளிக்கும் உணவுத் திருவிழாவுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களின் தனிச்சிறப்பான உணவு வகைகள் உங்களுக்காகப் பரிமாறப்படும். விழாவுக்கு வரும் மக்கள் அனைவரும் பங்கேற்று மகிழ வழுக்குமரம், உறியடி போன்ற பல்வேறு கேளிக்கை விளையாட்டுகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. தமிழ் ஆர்வலர்களுக்குச் செந்தமிழ் விருந்து படைக்க கவியரங்கம், கருத்தரங்கம் ஆகிய நிகழ்ச்சிகளோடு ஒரு இலக்கியத் திருவிழாவும் நடக்கவிருக்கிறது.

பொதுவாகவே மக்கள் தனித்தனித் தீவுகளாக தங்களை இப்போது மாற்றிக் கொள்கிறார்கள். இந்த மனநிலை மாற வேண்டும்.

உண்மையான பொழுதுபோக்கு என்பது நம்முடைய கலைகள்தான். அந்தக் கலைகள் பொழுதுபோக்காக மட்டுமல்லாமல், நம் மனதைப் பண்படுத்துவதாகவும் அது அமைந்திருக்கிறது.

தமிழர்களாக நாம் ஒன்று சேருவதற்கு நம்முடைய கலைகள்தான் இணைப்புப் பாலங்களாக அமையும். எனவே,

கலை வளர்ப்போம்!
நம் நிலையை வளர்ப்போம்!

என்று இந்த நேரத்தில் உங்களையெல்லாம் கேட்டுக் கொண்டு, மீண்டும் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய இனிய தமிழ்த் திருநாளாக இருக்கக்கூடிய பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

ரூ.20 கோடி ஒதுக்கீட்டில் "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார். (16.01.2023)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 16.01.2023 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வள்ளலார் அவர்களின் 200ஆவது பிறந்த ஆண்டை முன்னிட்டு, ஆதரவற்ற, கைவிடப்பட்ட காயமடைந்த வளர்ப்பு பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளைப் பராமரிக்கும் அரசுசாரா நிறுவனங்கள், சேவை நிறுவனங்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு ரூ.20 கோடி ஒதுக்கீட்டில் "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" என்னும் புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்து, பிராணிகள் துயர் துடைப்பு சங்கம், பிராணிகள் நலன் தொடர்பான அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் விலங்குகள் நல அமைப்புகளுக்கு முதல் தவணை நிதியுதவியாக ரூ.88.05 இலட்சம் நிதியுதவி வழங்கினார்.

கால்நடைகள் / வளர்ப்புப் பிராணிகள் உயிர் வாழ்வதற்கு அவற்றின் உரிமையாளர்களை சார்ந்துள்ளது. இந்நிலையில் பல்வேறு காரணங்களால் உரிமையாளர்களால் கைவிடப்பட்ட விலங்குகள் தாங்களே தற்காத்துக் கொள்ள வேண்டிய சூழ்நிலையில் உள்ளன. இந்த விலங்குகள் உணவு மற்றும் தங்குமிடம் தேடி அலையும் போது, உடலில் காயங்கள் மற்றும் பாதுகாப்பற்ற / கெட்டுப்போன உணவை உட்கொள்ளும்போது தொற்றுநோய்கள் போன்ற பல்வேறு உடல்நலக் குறைபாடுகளுக்கு உட்படுகின்றன.

இத்தகைய கைவிடப்பட்ட விலங்குகளைக் காக்கும் வகையில், தமிழ்நாடு அரசின் 2022-2023ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்று பல்லுயிர் ஓம்பிய வள்ளலார் அவர்களின் 200ஆவது பிறந்த ஆண்டை முன்னிட்டு, ஆதரவற்ற, கைவிடப்பட்ட, காயமடைந்த வளர்ப்புப் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளைப் பராமரிக்கும் அரசுசாரா நிறுவனங்கள், சேவை நிறுவனங்களுக்கு உதவியளிப்பதற்கு "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" என்னும் புதிய திட்டம் வரும் நிதியாண்டில் தொடங்கப்படும். இத்திட்டத்திற்காக ரூ.20 கோடி ஒதுக்கப்படும் என்று அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் கைவிடப்பட்ட விலங்குகளைக் காக்கும் வகையில் "வள்ளலார் பல்லுயிர் காப்பகங்கள்" எனும் புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தில், ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட காயமடைந்து தெருவில் சுற்றித் திரியும் பிராணிகள் உள்ளிட்ட பல்வேறு விலங்குகளுக்கு உணவு மற்றும் மருத்துவ சிகிச்சை அளித்தல், காயமடைந்த மற்றும் நோய்வாய்ப்பட்ட விலங்குகளுக்கு அவசர சிகிச்சை அளிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக பிராணிகள் துயர் துடைப்பு சங்கம் (SPCA), விலங்குகள் நல அமைப்புகள் (AWOs) பிராணிகள் நலன் தொடர்பான அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு (NGOs) மருத்துவ அவசர சிகிச்சை ஊர்தி (ஆம்புலன்ஸ்) கொள்முதல் செய்வதற்கு நிதியுதவி அளித்தல், ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட, காயமடைந்து தெருவில் சுற்றித் திரியும் விலங்குகளுக்கு உறைவிடம் கட்டுவதற்கு நிதியுதவி அளித்தல், தெரு நாய்கள் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்த கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறிநோய் தடுப்பூசி செலுத்துவதற்கு நிதியுதவி அளித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும்.

விலங்குகளுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதி வழங்கிடவும், உறைவிடம் மற்றும் அவசர ஊர்தி சேவைக்காகவும், நீலகிரி - India Project for Animal Fund Nature, சென்னை - Animal Care Trust, சென்னை - Madras Animal Rescue Society, சென்னை - Prithvi Animal Welfare Society மற்றும் சென்னை - பைரவா பவுண்டேஷன் ஆகிய தொண்டு நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.2.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, முதல் தவணையாக ரூ.88.05 இலட்சத்திற்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். ❖

தமிழ் மொழி, இலக்கிய வளர்ச்சி மற்றும் சமுதாய உயர்வுக்கு தொண்டாற்றிய தமிழறிஞர்களுக்கு தமிழ்நாடு அரசின் விருதுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழறிஞர்களுக்கு விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார். (16.01.2023)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 16.01.2023 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் நடைபெற்ற தமிழ்நாடு அரசின் விருதுகள் வழங்கும் விழாவில், தமிழ் மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த 10 தமிழறிஞர்களுக்கு விருதுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

தமிழ்ப் புலவர்களையும், தமிழறிஞர்களையும் பெருமைப்படுத்தும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தைத்திங்கள் இரண்டாம் நாளை திருவள்ளுவர் திருநாள் எனக் கடைப்பிடிக்க ஆணையிட்டார். மேலும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் சென்னையில் வள்ளுவர் கோட்டம் உருவாக்கப்பட்டதோடு, கன்னியாகுமரியில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலை நிறுவப்பட்டு, திறந்தும் வைக்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் தொன்மையும், இலக்கிய வளமும் நிறைந்த தமிழ் மொழியானது 2004ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசும், தமிழறிஞர்களையும், தமிழ்ச் சான்றோர்களையும் சிறப்பிக்கும் விதமாக, மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாள், அரசின் சார்பில் ஆண்டுதோறும் 'மகாகவி நாளாகக்' கடைப்பிடிக்கப்படும் என்று அறிவித்து செயல்படுத்தியது, தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில், "இலக்கிய மாமணி விருது" என்ற புதிய விருது தோற்றுவிப்பு, ஞானபீடம், சாகித்ய அகாடமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள் பெற்ற எழுத்தாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு மூலமாக கனவு இல்லம் வழங்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து, செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் 2023ஆம் ஆண்டிற்கான திருவள்ளுவர் விருதினை திரு. இரணியன் நா.கு. பொன்னுசாமி அவர்களுக்கும், 2022ஆம் ஆண்டிற்கான

பேரறிஞர் அண்ணா விருதினை திரு. சி.நா.மீ. உபயதுல்லா அவர்களுக்கும், பெருந்தலைவர் காமராசர் விருதினை திரு. ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் அவர்களுக்கும், மகாகவி பாரதியார் விருதினை முனைவர் ஆ.இரா.வேங்கடாசலபதி அவர்களுக்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருதினை திரு. வாலாஜா வல்லவன் அவர்களுக்கும், திரு.வி.க. விருதினை நாமக்கல் திரு. பொ. வேல்சாமி அவர்களுக்கும், கி.ஆ.பெ. விசுவநாதம் விருதினை கவிஞர் மு.மேத்தா அவர்களுக்கும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககத்தின் சார்பில் தேவநேயப்பாவாணர் விருதினை முனைவர் இரா. மதிவாணன் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி சிறப்பித்தார். இவ்விருதுகளைப் பெறும் விருதாளர்களுக்கு விருதுத்தொகையாக தலா ரூ.2 இலட்சத்திற்கான காசோலை, தங்கப் பதக்கம், தகுதியுரை வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்புச் செய்யப்பட்டது.

மேலும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 2022ஆம் ஆண்டிற்கான தந்தை பெரியார் விருதினை கவிஞர் கலி. பூங்குன்றன் அவர்களுக்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 2022ஆம் ஆண்டிற்கான டாக்டர் அம்பேத்கர் விருதினை திரு.எஸ்.வி. ராஜதுரை அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார். இவ்விருதுடன் விருதாளர்களுக்கு விருதுத் தொகையாக தலா ரூ.5 இலட்சம், தங்கப் பதக்கம் மற்றும் தகுதியுரை வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்புச் செய்யப்பட்டது.

படமும் செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அய்யன் திருவள்ளுவர் அவர்களின் சிலைக்கு மரியாதை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், 16.01.2023 அன்று அய்யன் திருவள்ளுவர் திருநாளை முன்னிட்டு சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள்,மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு. நா.எழிலன், திரு. த.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டி

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார் - 17.01.2023

மதுரை மாவட்டத்தில் 17.01.2023 அன்று அலங்காநல்லூரில் நடைபெற்ற உலகப்புகழ் பெற்ற "அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா"வில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். காலை 7.45 மணியளவில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்ற மாடுபிடி வீரர்கள் 'பாதுகாப்பான ஜல்லிக்கட்டு' உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து காலை 8.00 மணிக்கு மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியைக் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். மேலும், பல்வேறு சுற்றுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்களுக்கும், காளைகளுக்கும் தங்க மோதிரம் மற்றும் தங்க நாணயங்களைப் பரிசாக வழங்கினார்கள். இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் மொத்தம் 10 சுற்றுகள் நடத்தப்பட்டு வாடிவாசலிலிருந்து 825 காளைகள் அவிழ்த்து விடப்பட்டன. மேலும், 465 மாடுபிடி வீரர்களும் பங்கேற்றனர். 2,500க்கும் மேற்பட்ட காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சார்பாக சிறந்த மாடுபிடி வீரராக வெற்றி பெற்ற பூந்தி கிராமத்தைச் சேர்ந்த திரு. அபி சித்தர்-க்கு (26 காளைகள்) பரிசாக கார் மற்றும் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சார்பில் சிறந்த காளையாக வெற்றி பெற்ற புதுக்கோட்டை கைக்குறிச்சி காளையின் உரிமையாளர் திரு. தமிழ்செல்வன் அவர்களுக்குப் பரிசாக கார் வழங்கப்பட்டது. அதேபோல, இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசு பெறும் வீரர்கள், காளைகளுக்கு முறையே பைக்குகள் பரிசாக வழங்கப்பட்டது.

"அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு விழா"வில் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தபோது...

நில ஆவணங்கள் தொடர்பான புதிய சேவைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 18.01.2023 அன்று தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் கீழ் செயல்படும் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்ககத்தின் தமிழ்நிலம் வலைதளத்தில் (https://tamilnilam.tn.gov.in) நிறுவப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைகளுக்கான உட்பிரிவுகளை ஒட்டுமொத்தமாக உருவாக்குதல் மற்றும் அதற்கு உண்டான பட்டா மாறுதல் செய்யும் வகையில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள் மற்றும் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் வருவாய் பின்தொடர் பணிக்காக உருவாக்கப்பட்டுள்ள புதிய மென்பொருள் ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.

அங்கீகரிக்கப்பட்ட வீட்டுமனைப் பிரிவில் பொதுமக்கள் மனைகள் கிரையம் பெறும்போது ஒவ்வொரு மனுதாரருக்கும் உட்பிரிவு செய்ய, தனித்தனியாக மனுக்கள் பெறப்படும் சூழலிருந்து வருகிறது. இவ்வாறு ஒரே மனைப்பிரிவில் (layout) உள்ள வீட்டுமனைகளை நிலஅளவை செய்து உட்பிரிவு செய்வதற்காக நில அளவர் பல்வேறு தினங்களில் தனித்தனியே செல்லவேண்டிய சூழலும் இருக்கிறது.

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாதமும் 1.50 இலட்சம் உட்பிரிவு மனுக்கள் பெறப்படுகிறது. அதில் பெரும்பாலான மனுக்கள் மனைப்பிரிவைச் சார்ந்தவை. இதனால், உட்பிரிவுப் பட்டா மாறுதல் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டுள்ள இப்புதிய மென்பொருள் மூலமாக மனைப்பிரிவுகளை

ஒட்டுமொத்தமாக உட்பிரிவு செய்து மனைப்பிரிவின் உரிமையாளர்களின் பெயரில் பதிவு செய்யப்படுவதால், பின்னாளில் மனைகளை உட்பிரிவு செய்யக்கோரி தனித்தனியாக மனுக்கள் வரப்பெறுவது தவிர்க்கப்பட்டு, மனைப்பிரிவுகள் சார்ந்த உட்பிரிவு மனுக்களின் எண்ணிக்கை குறைந்து மக்களுக்கு விரைவில் பட்டா வழங்கும் சூழல் ஏற்படும்.

இப்புதிய மென்பொருள் மூலமாக, அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவில் உள்ள அனைத்து மனைகளும் உட்பிரிவு செய்யப்பட்டு, மனைப்பிரிவின் உரிமையாளர் பெயரிலேயே பட்டா வழங்கப்படும். மேலும், தனித்தனியே பொதுமக்கள் அம்மனைப் பிரிவில் ஒரு மனையை வாங்கும்போது பதிவு செய்யப்பட்ட சில நிமிடங்களிலேயே தானியங்கி பட்டா மாறுதல் முறையில் கிரையம் பெற்ற பொதுமக்களின் பெயரில் மாற்றம் செய்யப்படும். பட்டா மாற்றத்திற்காக பொதுமக்கள் மீண்டும் தனியே விண்ணப்பிக்கவோ அல்லது வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமின்றி அவர்களது இன்னல்கள் தவிர்க்கப்படும்.

மனைப்பிரிவில் உள்ள பொதுப்பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்ட நிலங்களான சாலைகள், பூங்கா போன்ற நிலங்கள் தனியே உட்பிரிவு செய்யப்பட்டு அந்த இடம் சார்ந்த உள்ளாட்சி அமைப்புகளின் பெயரில் உடனுக்குடன் நில ஆவணங்களில் பதிவு செய்யப்படும். இதனால், அரசு நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வதிலிருந்து தடுக்க இயலும். மேலும், இதுபோன்ற பொதுப்பயன்பாட்டிற்கான நிலங்களை மோசடியாக விற்பனை செய்யும் நிகழ்வுகளும் தவிர்க்கப்படும்.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் வருவாய் பின்தொடர் பணிக்காக உருவாக்கப்பட்டுள்ள புதிய மென்பொருள்

வருவாய் கிராமங்கள் நகரமயமாதலுக்குப் பின்னர் நகர்ப்புற தன்மையை அடைவதைத் தொடர்ந்து நகரளவைப் பணி மேற்கொள்ளப்படும். நகரளவைப் பணியின்போது வருவாய் ஆவணங்கள் நகர நிலஅளவை பதிவேடுகளாக மாற்றம் செய்யப்பட்டு, புல எண்கள் வார்டு மற்றும் பிளாக்குகளாக பிரிக்கப்பட்டு, புதிய நகர நிலஅளவை எண்கள் உருவாக்கப்படுகின்றன. அதே நேரத்தில், மேற்படி புலங்களின் உடைமைதாரர்களின் உரிமை ஆவணங்கள் மற்றும் பயன்பாட்டின் அடிப்படையில் புலங்களின் உரிமை குறித்த நில ஆவணங்கள் மேம்படுத்தப்படுகின்றன. இப்பணியானது 2007இல் துவக்கப்பட்டு மாநிலத்திலுள்ள பல்வேறு நகராட்சிகள், மாநகராட்சிகளில் 15 வருடங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி மிகுந்த காலதாமதம் ஆவதன் காரணமாக குடிமக்களுக்கு மேம்படுத்தப்பட்ட நில ஆவணங்களை பெறுவதில் சிரமத்தை அளித்து வந்த நிலையில், மேற்படி வருவாய் பின்தொடர் பணி, நகரநிலவரித்திட்ட பணியினை குறைந்த காலத்திற்குள் முடித்திட ஏதுவாக தேசிய தகவலியல் மையம் (National Informatics Centre) வாயிலாக தயாரிக்கப்பட்ட புதிய மென்பொருளை (New Software Application) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இப்புதிய மென்பொருளின் பயனாக, வருவாய் பின்தொடர் பணியில் கைமுறை செயலாக்கம் (Manual processing) மூலம் செயல்படுத்தப்பட்டு வந்த விசாரணை அறிவிப்பு தயார் செய்வதிலிருந்து இறுதி அசல் ஆவணங்கள் தயாரித்தல் வரையிலான பணிகள் மற்றும் சிட்டா நகல் தயாரித்தல் ஆகிய படி நிலைகள் கணினிமயமாக்கப்பட்டு பணிகளை விரைவில் முடித்திட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், படி நிலைகள் கணினிமயமாக்கப்படுவதால் நிலவரித்திட்ட பணியாளர்களின் பணி சுமைகள் குறைக்கப்படுவதோடு, இந்த மென்பொருள் மூலம் தயார் செய்யப்படும் இறுதி ஆவணங்கள் வெளிப்படைத்தன்மை மற்றும் துல்லியம் கொண்டதாக அமைவதுடன், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநரகத்திலிருந்தே இப்பணிகளை நேரடியாக கண்காணிக்க வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தற்போது வருவாய் பின்தொடர் பணி நடைபெற்று கொண்டிருக்கும் 9 மாநகராட்சிகள் மற்றும் 36 நகராட்சிகளின் நகர நிலவரித்திட்ட அலகுகளில் மேற்படி மென்பொருள் நிறுவப்படும். இதன்மூலம் நகரப்பகுதிகளில் வசிக்கும் குடிமக்களுக்கு நிலம் தொடர்பான பரிவர்த்தனைகளை மேற்கொள்ள மேம்படுத்தப்பட்ட நில ஆவணங்கள் இணையதளம் மூலமாக விரைவில் கிடைத்திட பெரிய அளவில் ஒரு நல்வாய்ப்பாக அமைகிறது.

தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளுக்கு கொண்டு சேர்ப்போம்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்**
அவர்கள் 18.01.2023 அன்று
சென்னை, நந்தனம்,
ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில்
நடைபெற்ற சென்னை
பன்னாட்டு புத்தகக் கண்காட்சி
நிறைவு விழாவில்
ஆற்றிய உரை.

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை, நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழில் வளர்ச்சியில் உலகளாவிய கவனத்தை ஈர்த்தது தமிழ்நாடு. அடுத்ததாக, செஸ் ஒலிம்பியாட் போட்டி மூலமாக உலகளாவிய புகழைப் பெற்றது நம்முடைய தமிழ்நாடு. பல ஆண்டுகளுக்குப் பிறகு ஏ.டி.பி டென்னிஸ் தொடரை நடத்திக் காட்டியது தமிழ்நாடு. இதோ இப்போது அறிவுலகத்திலும் - அதாவது புத்தகப் பதிப்பிலும் உலகளவில் தனது சிறகை விரித்திருக்கிறது நம்முடைய தமிழ்நாடு. இதை நினைக்கும்போது உள்ளபடியே பெருமையாகவும், பூரிப்பாகவும் இருக்கிறது.

கடந்த 6ஆம் தேதி இதே மைதானத்திற்கு வந்து புத்தகக் கண்காட்சியை நான் திறந்து வைத்தேன். ஆயிரத்துக்கும் மேற்பட்ட விற்பனைக் கடைகள் இங்கு இடம்பெற்று, ஒரு வார காலமாகப் புத்தக விற்பனையைச் செய்து வருகின்றன. இது 46ஆவது சென்னை புத்தகக் கண்காட்சி. இந்த 46 ஆண்டுகளில் இல்லாத ஒன்று இந்த ஆண்டு தொடங்கி இருக்கிறது. அதுதான் பன்னாட்டு புத்தகக் காட்சி.

"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்.

இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்!"

என்ற கவிதை வரிகளை மகாகவி பாரதியார் எழுதி 120 ஆண்டுகள் ஆகிவிட்டன. மகாகவியின் கனவை நிறைவேற்றும் வகையில் இந்தப் பன்னாட்டு புத்தகக் காட்சியானது நடைபெற்று வருகிறது.

பதிப்புத்துறை பெரிதும் வளராத காலத்திலேயே கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையையும், எங்கெல்ஸ், லெனின், அண்ணல் அம்பேத்கார் உள்ளிட்ட பல அறிஞர்களுடைய நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டவர் தந்தை பெரியார் அவர்கள். உலக அறிவையும், விரிவையும் தமிழர்களுக்குத் தமிழிலே அளிக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட அத்தகைய முன்னோடிகளின் கனவை நிறைவேற்றும் காட்சிதான் இந்தப் பன்னாட்டு புத்தகக் காட்சி.

தமிழ்நாட்டில் தமிழாட்சி நடக்கும்போது, இது போன்ற பன்னாட்டுப் புத்தகக் காட்சிகள் நடத்துவது ஒன்றும் வியப்பல்ல. இலக்கியச் செழுமை மிக்க நமது தமிழ்ப் படைப்புகளை உலகமெல்லாம் கொண்டு சேர்க்கவும், உலகெங்கிலும் உள்ள சிறந்த அறிஞர்களின் அறிவு செறிந்த படைப்புகளைத் தமிழில் கொண்டு வரவும் தமிழ்நாடு அரசு திட்டமிட்டு செயல்படுத்தி வருகிறது.

அண்மையில் நடந்த சென்னை இலக்கிய விழாவில் 108 புத்தகங்களை அந்த நிகழ்வில் நான் வெளியிட்டேன்.

- திசைதோறும் திராவிடம் திட்டத்தின்கீழ் 25 நூல்களும்,
- முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின்கீழ் 46 நூல்களும்,
- இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின்கீழ் 59 நூல்களும்,
- சங்க இலக்கிய வரிசையில் பத்துப்பாட்டு நூல்களும்,
- முன்பு வெளியான கலைக்களஞ்சியத்தின் ஆவணப்பதிப்பும்,
- நூற்றாண்டு காணும் ஆளுமைகளின் படைப்புகளாக 2 நூல்களும்,
- வ.உ.சி.யின் நூல் திரட்டுகளாக இரண்டு நூல்களும்,
- நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல் வரிசையில் 17 நூல்களும்

என 173 நூல்களை கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் அரசின் சார்பில் நாம் வெளியிட்டுள்ளோம். தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் மருத்துவப் பாடநூல்கள் தமிழிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தந்தை பெரியார் ஓர் உலகத் தலைவர். அவரது சிந்தனைகள் உலகம் முழுவதும் பொருந்தக் கூடியவை. உலகம் முழுமைக்கும் பொதுவானவை. அத்தகைய பெரியாரின் சிந்தனைகளை உலக மொழிகளையும், இந்திய மொழிகளையும் உள்ளடக்கி 21 மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிட இருக்கிறோம். அதற்கான அடிப்படைப் பணிகள் தொடங்கி இருக்கின்றன.

தமிழ் நூல்களை ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளிலும் வெளியிட்டுள்ளோம். பல்வேறு மொழிகளிலும் உள்ள நூல்களை தமிழில் கொண்டு வரவும் திட்டமிட்டுள்ளோம். இந்தப் பணிகள் கடந்த ஒன்றரை ஆண்டுகளாக வேகமாக நடைபெற்று வருகின்றன. இவற்றுக்கெல்லாம் மகுடம் சூட்டக்கூடிய வகையில் இந்த பன்னாட்டு புத்தகக் காட்சியை சென்னையில் தொடங்கி இருக்கிறோம்.

உலகளாவிய அளவில் ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, சீனா ஆகிய நாடுகளில் நடைபெறும் இது போன்ற புத்தகக் காட்சியானது, இப்போது

சென்னையில் தொடங்கி இருக்கிறது. இதனை ஆண்டுதோறும் நடத்தி, மிகப்பெரிய அளவில் வளர்த்தெடுக்க வேண்டும் என்பதைப் பள்ளிக்கல்வித் துறைக்கு என்னுடைய வேண்டுகோளாக எடுத்து வைக்க நான் விரும்புகிறேன்.

எப்போது தரமான நூல்கள் மொழிபெயர்க்கப்பட்டு வருகிறதோ அப்போது நம்முடைய மொழியும் வளம் பெறும். சொற்களும் வலிமை பெறும்.

புதிய இலக்கியங்கள் மட்டுமல்ல, புதிய சிந்தனைகளும் புதிய சொற்களும் கிடைக்கும். காலம்தோறும் புதிய புதிய சொற்கள் உருவானால்தான் மொழியின் காலமும் நீடிக்கும்.

தமிழின் மிகச் சிறந்த எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான க.நா.சுப்பிரமணியம் அவர்கள், 'ஆங்கிலத்தின் இலக்கிய வளமே மொழிபெயர்ப்பாளர்களால் தான் ஏற்பட்டது' என்று சொல்லி இருக்கிறார். அந்த வகையில் தமிழுக்கும் பிறமொழிகளில் இருந்து நூல்கள் வர வேண்டும். தமிழ் நூல்களும் பிறமொழிக்கு செல்ல வேண்டும்.

சில நாட்களுக்கு முன்னால் எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள், 'இந்து தமிழ் திசை' நாளிதழில் இந்திய இலக்கியம் குறித்து எழுதி இருந்தார்.

இந்திய இலக்கியங்களோடு போட்டி போடும் படைப்புகள் தமிழில் ஏராளமாக வெளியே வந்து கொண்டிருந்தாலும், அது இந்திய அளவில் கவனம் பெறாமல் போனதற்கு என்ன காரணம் என்பது குறித்து அவர் விளக்கி இருந்தார். உண்மையான காரணம் - நமது தமிழ் இலக்கியங்கள் இந்திய மொழிகளிலும், உலக மொழிகளிலும் தரமான முறையில் மொழிபெயர்க்கப்படாமல் இருப்பதுதான். நம்முடைய தமிழ் இலக்கியங்கள் உலகளாவிய இலக்கியங்களாக மாற வேண்டுமானால், உலக மொழிகளில் அவை மொழிபெயர்க்கப்பட

வேண்டும். படைப்பிலக்கியத்துக்கு இணையான மதிப்பு மொழிபெயர்ப்பு இலக்கியத்திற்கும் இருக்கிறது. அதற்கு இது போன்ற பன்னாட்டு புத்தகக் காட்சிகள் மிகமிகப் பயன்படும். உலகளாவிய அறிவுப் பரிமாற்றமே சென்னை பன்னாட்டு புத்தகக் காட்சியின் நோக்கமாக அமைந்திருக்கிறது. இக்கண்காட்சியில் பங்கேற்கும் வெளிநாட்டு பதிப்பாளர்கள் மற்றும் தமிழக பதிப்பாளர்கள் தமிழ் இலக்கியத்தை மையமாகக் கொண்டு காப்புரிமைகளைப் பரிமாறிக் கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இதனால் உலகளாவிய பதிப்புத்துறையினருடன் ஒரு சிறந்த தொடர்பை ஏற்படுத்த இயலும்.

இந்த பன்னாட்டுப் புத்தகக் காட்சியில் பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், சுவீடன், தென் கொரியா, சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து, வங்கதேசம், அஜர்பைஜான், இஸ்ரேல், உகாண்டா, அர்மேனியா, அர்ஜென்டினா, கனடா, துருக்கி, கென்யா, ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட பல நாடுகளைச் சேர்ந்த பதிப்பாளர்கள், விற்பனையாளர்கள் வருகை தந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் தமிழ்நாட்டு முதலமைச்சர் என்ற முறையில் அவர்கள் அத்தனை பேரையும் வருக! வருக! வருக! என வரவேற்கிறேன். இங்கு வந்துள்ள பன்னாட்டு பதிப்பாளர்கள் தமிழ்ப் பதிப்பாளர்களுடன் நம்பகமான வணிகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

இங்குள்ள பதிப்புரிமை பரிமாற்று மையத்தில் (Rights table) பங்கேற்கும் நாடுகள், பிற புத்தக வெளியீட்டாளர்கள், இலக்கிய முகவர்கள், புத்தக வெளியீட்டு அமைப்புகள், எழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள் ஆகியோருடன் பதிப்புரிமையினை விற்கவும் வாங்கவும் வசதி செய்யப்பட்டுள்ளது. தினந்தோறும் எழுத்தாளர்களுடன் சந்திப்பு, தமிழ் மற்றும் பிற மொழிகளில் மொழிபெயர்ப்பு, உலக புத்தகச் சந்தையில் பதிப்புத்துறையின் எதிர்காலம், மொழிபெயர்ப்புத் தொழில்நுட்பம் போன்ற பல தலைப்புகளில் அறிஞர்களின் உரை நிகழ்த்தப்பட்டிருந்தது. இது அறிவுலகச் செயல்பாட்டுக்கு மிக மிக முக்கியம்.

தமிழ் மொழியை உலகெங்கும் எடுத்துச் செல்லும் வகையில் தமிழ் மொழியின் சிறந்த படைப்புகளை உலக மொழிகளிலும் இந்திய மொழிகளிலும் மொழியாக்கம் செய்ய தமிழ்நாடு அரசால் மொழிபெயர்ப்பு மானியமாக ரூ.3 கோடி Translation grant வழங்கப்படும் என்பதையும் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக நான் அறிவிக்க விரும்புகிறேன்.

முதன்முறையாக நடந்து முடிந்த இந்த பன்னாட்டு புத்தகக் காட்சி மூலம் தமிழ் மொழியிலிருந்து பிற இந்திய மற்றும் உலக மொழிகளுக்கும், பிற மொழிகளில் இருந்து தமிழுக்கும் மொழிபெயர்க்கும் வகையில் பல்வேறு பதிப்பகங்களுக்கு இடையே 365 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளது என்பதையும் பெருமிதத்துடன் அறிவிக்க நான் விரும்புகிறேன்.

உலகளாவிய அறிவு பரிமாற்றத்திற்கான தளமாக சென்னை பன்னாட்டு புத்தகக் காட்சியை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும். எழுத்தாளர்களுக்கு - பதிப்பாளர்களுக்கு - மொழிபெயர்ப்பாளர்களுக்கு இது மிகப்பெரிய வாய்ப்பு. இதனை நீங்கள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

கடந்த 16ஆம் தேதி தொடங்கி, மூன்று நாட்கள் இந்தச் சந்தை நடந்துள்ளது. அடுத்தடுத்த ஆண்டுகளில் இன்னும் பல நாட்கள் நடத்துவதற்கான ஏற்பாடுகளை நிச்சயமாக தமிழ்நாடு அரசு செய்யும். இந்த ஆண்டு நடைபெறும் இந்த காட்சிக்காக ரூ.6 கோடியை அரசு ஒதுக்கீடு செய்தது.

பள்ளிக்கல்வித்துறையின் பொது நூலக இயக்ககமும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் கழகமும், தென்னிந்திய பதிப்பாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் சங்கமும் (BAPASI) இணைந்து நடத்தும் இந்த சென்னை பன்னாட்டுப் புத்தகக் காட்சி, தமிழ் மொழியையும் தமிழ் இலக்கியத்தையும் உலக அரங்கில் உயர்ந்த நிலையில் நிலைநிறுத்தும் என்ற நம்பிக்கையோடுதான் அரசு இந்த நிதி ஒதுக்கீட்டைச் செய்தது. அறிவுச் சக்தியை உருவாக்குவது என்பதை ஆக்கப்பூர்வமான முதலீடாகவே நாங்கள் நினைக்கிறோம். இதனை அறிவுலகத் தொண்டாகக் கருதி நாங்கள் செய்து வருகிறோம். இதனை தமிழ்நாடு அரசு தனது கடமையாகக் கருதுகிறது. யாரும் கோரிக்கை வைத்து இதை நாங்கள் செய்யவில்லை.

இப்படிச் செய்வதுதான் எங்களது வாடிக்கை! தமிழ்நாட்டு எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள் இதனை நன்கு அறிவார்கள். இந்த அறிவுலகப் பணிக்கு அனைவரும் ஒத்துழைப்பை நல்க வேண்டும். இது தொடர்பான ஆலோசனைகள் இருந்தால் அதனை ஏற்றுக் கொள்ளவும், திறந்த மனதுடன் தமிழ்நாடு அரசு தயாராகவும் இருக்கிறது.

இலக்கியம் படிப்போம்!

இலக்கியம் படைப்போம்!

உலக இலக்கியங்களை தமிழுக்குக் கொண்டு வருவோம்!

தமிழ் இலக்கியங்களை உலக மொழிகளுக்குக் கொண்டு சேர்ப்போம்!

உலக அறிவுலகத்தை நாம் அறிவோம்!

உலக அறிவுலகத்துக்குத் தமிழை அறிமுகம் செய்வோம்!

என்று சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

கால் நூற்றாண்டிற்கு பின் புதிய தோற்றத்துடன் தமிழரசு இதழின் "இலக்கிய மலர் 2023" வெளியீடு

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
04.02.2023 அன்று
தலைமைச் செயலகத்தில்,
செய்தி மக்கள் தொடர்புத்துறையின்
தமிழரசு இதழின் சார்பில்
தயாரிக்கப்பட்டுள்ள
"இலக்கிய மலர் 2023" என்ற
சிறப்பு மலரினை வெளியிட, அதன்
முதல் பிரதியை தலைமைச் செயலாளர்
முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப.,
அவர்களும், இரண்டாம் மற்றும்
மூன்றாம் பிரிதிகளை
சாகித்ய அகாதமி விருது பெற்ற
எழுத்தாளர் திரு. எஸ். ராமகிருஷ்ணன்
மற்றும் புகழ்பெற்ற ஓவியர்
திரு. டிராட்ஸ்கி மருது ஆகியோர்
பெற்றுக்கொண்டனர்.

சென்னை, கிண்டியில் நடைபெற்றுவரும் பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனைக்கான கட்டுமானப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு...

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, 03.06.2021 அன்று கிண்டி கிங் நோய் தடுப்பு ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் ரூ.230 கோடி மதிப்பில், 1,000 படுக்கை வசதிகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை அமைக்கப்படும் என அறிவித்தார்.

இம்மருத்துவமனையில் நடைபெற்றுவரும் கட்டுமானப் பணிகளை 22.01.2023 அன்று நேரடியாகச் சென்று ஆய்வு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பணிகளை விரைவில் முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். சுற்றுச்சூழலை பாதுகாக்கும் வகையில், பசுமைக் கட்டடக் கட்டமைப்பாக இம்மருத்துவமனையை உருவாக்க வேண்டும் என்றும் அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சி அடையாறு மண்டலத்திற்குட்பட்ட ஐந்து பர்லாங் சாலை, பிள்ளையார் கோயில் தெரு, செங்கேணி அம்மன் கோயில் தெரு, சிட்டி லிங்க் சாலை, நேதாஜி ரோடு மற்றும் வேளச்சேரி பிரதான சாலை ஆகிய 6 சாலைகளில் ரூ.16.44 கோடி மதிப்பில் 3,047 மீட்டர் நீளத்திற்கு மழை நீர் வடிகால் பணிகள் நடைபெற்று வருவதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்.

இந்த 6 சாலைகளில் ஐந்து பர்லாங் சாலை, பிள்ளையார் கோயில் தெரு மற்றும் செங்கேணி அம்மன் கோயில் தெரு ஆகிய 3 சாலைகளில் பணிகள் முழுவதும் முடிவுற்றுள்ளன. சிட்டி லிங்க் சாலை, நேதாஜி சாலை ஆகிய சாலைகளில் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. வேளச்சேரி பிரதான சாலையில் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன. இந்த 6 சாலைகளில் இதுவரை 2,398 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் பணிகள் முடிவுற்றுள்ளன. முடிவுறாத பணிகளை விரைந்து முடிக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களைக் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து, ஆலந்தூர் மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு 157இல் உள்ள ஆற்காடு சாலையில்

ரூ.27.40 இலட்சம் மதிப்பில் 475 மீட்டர் நீளம், 7 மீட்டர் அகலத்தில் தார் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மனப்பாக்கம் கெருகம்பாக்கம் நெடுஞ்சாலையை இணைக்கும் முக்கிய உட்புறச் சாலையாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இச்சாலை அமைக்கும் பணிகளை ஆய்வு செய்தார்.

சாலைப் பணிகள் மேற்கொள்ளும் பொழுது பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படாத வகையிலும், பாதுகாப்பான முறையில் தடுப்புகளை அமைத்துப் பணிகளை மேற்கொள்ளவும், சாலைகள் அமைக்கப்படும் பொழுது தரக்கட்டுப்பாட்டு வழிமுறைகளை முறையாகப் பின்பற்றவும், அலுவலர்கள் அவ்வப்போது ஆய்வு செய்து சாலையின் தரத்தை உறுதி செய்யவேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

போட்டித் தேர்வுகள் குறித்து இளைஞர்களுக்கான விழிப்புணர்வுக் கூட்டம்

படமும்/செய்தியும்

சென்னை, தலைமைச் செயலகத்தில், 27.01.2023 அன்று, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், போட்டித் தேர்வுகள் குறித்து இளைஞர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், குறிப்பாக ஒன்றிய அரசின் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்படும் போட்டித் தேர்வுகளில் பங்கேற்பது தொடர்பான அண்ணா நிருவாக கல்லூரி பணியாளர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், 27.01.2023 அன்று தலைமைச் செயலகத்தில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டத்தினைத் தொடங்கி வைத்து, 5 புத்தொழில் நிறுவனங்களில் ரூ.7.50 கோடி பங்கு முதலீடு செய்வதற்கான ஆணைகளை வழங்கினார்.

புதுயுக தொழில்முனைவில் அனைத்து சமூகத்தினரையும் உள்ளடக்கிய வளர்ச்சியினை அடைவதற்காக "தமிழ்நாடு பட்டியலினத்தவர் / பழங்குடியினர் புத்தொழில் நிதித்திட்டம்" என்ற புதிய திட்டம் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டுள்ளது. இதன்மூலம், பட்டியலின மற்றும் பழங்குடியினப் பிரிவுகளைச் சார்ந்த தொழில் முனைவோர்களால் தொடங்கி, நடத்தப்பட்டு வரும் புத்தொழில் நிறுவனங்களுக்கு பங்கு முதலீடாக அல்லது பிணையில்லாக் கடனாக நிதி வழங்கப்படும். இந்நிதியத்திற்கு முதற்கட்டமாக ரூ.30 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின் வாயிலாகச் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற கடந்த மே 2022லிருந்து தொழில்முனைவோர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டு, இதுவரை 330 நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள்

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
> திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
> தொடக்கி வைத்து, பயனாளர்களுக்கு
> முதலீட்டு ஆணைகள் வழங்கினார் - 27.01.2023

பெறப்பட்டுள்ளன. விண்ணப்பித்தவர்களில் இருந்து, தொழில்முனைவு வழிகாட்டுநர்கள், அரசு அலுவலர்கள், முதலீட்டாளர்கள் உள்ளடக்கிய தகுதியான நடுவர் குழு அமைக்கப்பட்டு முதற்கட்டமாகத் தகுதியான 5 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ.7.50 கோடி பங்கு முதலீடு செய்வதற்கான ஆணைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார். இப்புத்தொழில் நிறுவனங்களில் அரசே முதலீடு செய்வதன் வாயிலாக இந்நிறுவனங்களுக்கு புதிய சந்தை வாய்ப்புகள் பெருகும்.

பயனடைந்த நிறுவனங்களின் விபரங்கள்:

பேக் என் பேக் (Pack N Back) நிறுவனம்

தொழிற்சாலைகளுக்குத் தேவையான பொருட்களை இடம் மாற்றுவதற்கு ஏற்றவாறு பேக்கேஜிங் செய்யும் சேவையினை வழங்கி வருகின்ற பேக் என் பேக் நிறுவனத்திற்கு ரூ.2 கோடி பங்கு முதலீடாக வழங்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின்

மூலம் மேம்பட்ட சேவையினை வழங்க இந்த நிதியினை பயன்படுத்த உள்ளது.

யூனிபோஸ் (Unibose) நிறுவனம்

கழிவுகள் அகற்றும் பணியில் மனிதர்களை ஈடுபடுத்துவதை தவிர்க்க உதவும் வகையில் கழிவு மேலாண்மைக்கான ரோபோடிக்ஸ் தொழில்நுட்பத்தினை வடிவமைத்துள்ள யூனிபோஸ் நிறுவனத்திற்கு சந்தைக்கு தேவையான வகையில் ரோபோடிக்ஸ் (Robotics) இயந்திரத்தினைத் தயாரித்து விற்பனையில் ஈடுபடுவதற்காக ரூ.2.50 கோடி பங்கு முதலீடாக வழங்கப்பட்டுள்ளது.

டவ் மேன் (Tow Man) நிறுவனம்

சாலைகளில் திடீரென பழுதடைந்து நின்றுவிட்ட வாகனங்களை விரைவாக பழுது நீக்கவும், அந்த வாகனங்களில் பயணம் செய்தவர்களை உரிய இடத்தில் சேர்க்கவும் உதவும் தொழில்நுட்பச் சேவையினை நாடெங்கும் வழங்கும் திட்டத்துடன் இயங்கிக் கொண்டிருக்கும் டவ் மேன் நிறுவனத்திற்கு ரூ.1 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியினை பயன்படுத்தி பல பெரிய நிறுவனங்களுக்கு சேவைகளை வழங்கும் அளவிற்கு நிறுவனத்தினை விரிவுபடுத்த இருக்கின்றது.

எக்கோ சாப்ட் சொல்யூசன்ஸ் (Eco Soft Solutions) நிறுவனம்:

வாகன தொழில் துறையில் பல்வேறு நிறுவனங்களுக்கிடையிலான பரிவர்த்தனைகளை இலகுவாக்க உதவும் மென்பொருள் செயலியினை வடிவமைத்து பல பெரிய நிறுவனங்களை வாடிக்கையாளர்களாகக் கொண்டுள்ள எக்கோ சாப்ட் சொல்யூசன்ஸ் நிறுவனத்திற்கு ரூ.1 கோடி பங்கு முதலீடாக வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியினைப் பயன்படுத்தி இந்நிறுவனம் இத்துறைக்குத் தேவையான நிதித் தொழில்நுட்பம் சார்ந்த செயலியினை வடிவமைக்கவும், தற்போதைய செயல்பாடுகளை அதிகரிக்கவும் இருக்கிறது.

பீஸ் ஆட்டோமேசன் (Peas Automation) நிறுவனம்

பல்வேறு இடங்களுக்கு எடுத்து செல்லக்கூடிய உணவு தானியங்களைப் பதப்படுத்தும் இயந்திரக் கருவியினை ஐ.ஓ.டி தொழில்நுட்பத்தினை வடிவமைத்து வரும் பீஸ் ஆட்டோமேசன் நிறுவனத்திற்கு ரூ.1 கோடி பங்கு முதலீடாக வழங்கப்பட்டுள்ளது. இக்கருவியினை விற்பனைக்குக் கொண்டுவரும் வகையில் செயல்பாடுகளை மேம்படுத்த இந்த முதலீடு வழங்கப்பட்டுள்ளது.

படமும் செய்தியும்

பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 106ஆவது பிறந்த நாள்

பாரத ரத்னா, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் 106ஆவது பிறந்த நாளை முன்னிட்டு 17.01.2023 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, கிண்டி, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு. சா.மு.நாசர் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் மரு. ஆர்.செல்வராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மக்கள் மகிழ்ச்சியே நமது இலக்கு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டடத்தில் நடைபெற்ற, மழை வெள்ளக் காலங்களில் சிறப்பாகப் பணியாற்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கானப் பாராட்டு விழாவில் ஆற்றிய உரை - 31.01.2023

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

மழை வெள்ளக் காலங்களில் தடுப்புப் பணிகளில் மிகச் சிறப்பாகப் பணியாற்றிய ஊழியர்களுக்குப் பாராட்டு விழா என்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடிய இந்த மகத்தான விழாவில் நானும் பங்கேற்பதில் உள்ளபடியே பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன். மிகமிக மகிழ்ச்சியான நிலையில் இந்த விழாவில் நான் பங்கேற்க வந்திருக்கிறேன்.

எனக்கு எத்தனையோ பாராட்டு விழாக்கள் நடைபெற்றிருக்கின்றன. ஆனால் அந்த விழாக்களையெல்லாம்விட, உங்களைப் பாராட்டக்கூடிய இந்த விழாவைத்தான் நான் பெருமையாகக் கருதுகிறேன்.

அதற்கு என்ன காரணம் என்று கேட்டால், நம்முடைய அரசு பொறுப்பேற்று 20 மாதங்கள் ஆகியிருக்கிறது. இதில் மிகமிக முக்கியமான இரண்டு சாதனைகளை நாம்

படைத்திருக்கிறோம். அந்த இரண்டு சாதனைகளைப் படைத்த காரணத்தால், மக்களிடத்திலே நமக்கு மிகப் பெரிய பாராட்டு கிடைத்திருக்கிறது.

ஒன்று – கொரோனா என்ற கொடிய நோயை எதிர்த்து அதை வென்றோம். அது ஒரு பாராட்டு.

இரண்டாவது - மழை, வெள்ளத்தில் இருந்து மக்களைக் காத்தோம், அது இரண்டாவது பாராட்டு.

கொரோனாவை கட்டுப்படுத்தியதற்குப் பிறகு உடனடியாக ஒரு மிகப்பெரிய மழையை நாம் சந்தித்தோம்.

ஏற்கெனவே இருந்த ஆட்சியாளர்கள் அதிலும் குறிப்பாகப் பத்தாண்டு காலமாக ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் எதுவும் செய்யாமல் இருந்துவிட்ட காரணத்தால், அந்த முதல்முறை மழை எந்த அளவிற்குப் பெய்தது என்பது உங்களுக்குத் தெரியும். அந்த மழையை, அந்த வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதில் நமக்கு பல்வேறு நெருக்கடிகள் ஏற்பட்டன. ஆனால், அந்த நெருக்கடிகளை நாம் ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு வரக்கூடிய காலக்கட்டங்களில் எப்படி நாம் செயல்பட வேண்டும் என்று திட்டமிட்டோம்.

அடுத்த மழை வருவதற்கு முன்னால் அல்லது ஒரு வெள்ளம் ஏற்படுவதற்கு முன்னால், என்ன மழை பெய்தாலும் அந்த மழையின் காரணமாக தண்ணீர் எங்கும் தேங்கவில்லை என்ற ஒரு சூழலை உருவாக்குவதற்காக நாம் உறுதி எடுத்துக் கொண்டோம். உறுதி எடுத்துக்கொண்டது மட்டுமல்ல, அந்த உறுதியை எந்த அளவிற்கு நிறைவேற்றிக் காட்டினோம் என்பது நாட்டிற்கும் தெரியும், உங்களுக்கும் நன்றாகத் தெரியும். அதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன், மிகப் பெரிய இரண்டு சாதனைகளை நாம் செய்து முடித்திருக்கிறோம்.

சமூக வலைத்தளங்களில், இது கடந்த முறை இங்கு தண்ணீர் தேங்கி இருந்தது என்று அந்தப் படத்தையும் போட்டு, இந்த முறை அந்தப் பகுதியில் தேங்கவில்லை என்ற அந்தப் படத்தையும் போட்டு மக்களிடத்தில் எடுத்துக் காட்டினார்கள். பொதுமக்களும் அதை வாட்ஸ்ஆப்-ல் பகிர்ந்த அந்த செய்திகளையெல்லாம் நாம் தொடர்ந்து பார்த்தோம். நான் அந்த செய்திகளையெல்லாம் பார்த்தபோது, நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லாமல் இருந்தது. அந்த அளவிற்கு மக்கள் நம்மை மனதாரப் பாராட்டினார்கள். அதேபோல், ஊடகங்களும் பாராட்டின. நேரில் பார்க்கக்கூடிய பொதுமக்களும் நம்மை சந்திக்கிற நேரத்தில் தங்களுடைய பாராட்டுக்களையெல்லாம் வெளிப்படையாகத் தெரிவித்தார்கள். இப்படிப்பட்டப் பாராட்டு மழையில் நனைவதற்குக் காரணம் யார் என்று கேட்டீர்களென்றால், நீங்கள்தான். அதனால் தான், உங்களைப் பாராட்ட நாங்கள் இங்கே வந்திருக்கிறோம்.

- பெருநகர சென்னை மாநகராட்சி
- சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
- நீர்வளத்துறை
- நெடுஞ்சாலைத்துறை
- தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
- காவல்துறை

ஆகிய துறைகளைச் சார்ந்திருக்கக்கூடிய அலுவலர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் அத்தனைபேரும் பாராட்டுக்கு உரியவர்களாக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

இவர்களையெல்லாம் ஒருங்கிணைத்து பணியாற்றியிருக்கக்கூடிய மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்களையும் நான் மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் அடிக்கடி அவரைப் பற்றிச் சொல்கிறபோது, நேருவுக்கு நிகர் நேருதான் என்று நான் அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்வதுண்டு. கட்சி நிகழ்ச்சிகளில், பல்வேறு பொது நிகழ்ச்சிகளில் நான் பேசியதுண்டு. அவர் எப்போதுமே நான்கு கால் பாய்ச்சல்தான் பாய்வார். அந்த அளவிற்கு வேலைகளை சுறுசுறுப்பாக முடுக்கி விடுவார். அவரிடத்தில் ஒரு குணாதிசயம் உண்டு, அன்பும் இருக்கும், கோபமும் இருக்கும். இரண்டு அஸ்திரங்களையும் அவர் ஏவி அந்தக் காரியங்களை நிறைவேற்றுவதில் ஒரு சிறப்புக்குரியவராக விளங்கிக் கொண்டிருக்கிறார்.

அதேபோல் சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அமைச்சர்களான மாண்புமிகு திரு. மா.சுப்பிரமணியன் அவர்களும், மாண்புமிகு திரு. சேகர் பாபு அவர்களும் இரவு பகல் பார்க்காமல் அவர்கள் எந்த அளவிற்கு பணியாற்றினார்கள் என்பதை நீங்களெல்லாம் நன்கு அறிவீர்கள்.

அதேபோல் சென்னை மாநகரத்தின் மேயராகப் பொறுப்பேற்று இன்றைக்கு சிறப்பாக பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய சகோதரி மேயர் பிரியா அவர்களும், துணை மேயர் மகேஷ்குமார் அவர்களும் 24 மணிநேரமும் இந்த மாநகருக்குள் சுற்றிச்சுழன்றுப் பணிகளையெல்லாம் எந்த அளவிற்கு முடுக்கி விட்டார்கள் என்பதை நேரடியாக நாமும் பார்த்தோம்.

அதேபோல் சென்னை மாநகராட்சி ஆணையராக பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு. ககன் தீப் சிங் பேடி அவர்கள் ஆற்றிய பணி என்பது மிகமிக மகத்தான ஒன்று. அனைத்துத் துறைகளையும் மிக சாமர்த்தியமாக ஒருங்கிணைத்து செயலாற்றி அதிலே வெற்றியும் கண்டிருக்கிறார் நம்முடைய ஆணையர் அவர்கள்.

அதேபோலவே, ஐந்து விரலும் ஒருங்கிணைந்து செயல்பட்டால்தான் ஒரு கையின் பலத்தை நாம் தெரிந்துகொள்ள முடியும். அப்படித்தான், தண்ணீர் நின்றால், ஒரு மணி நேரத்தில் மோட்டார் வைத்து அதை அகற்றியது மாநகராட்சி!

நீர் நிலைகளைத் தூர் வாரி வைத்திருந்தது நம்முடைய நீர்வளத்துறை!

சாலைகளை உடனடியாக சரி செய்து கொடுத்தது நெடுஞ்சாலைத் துறை!

சீரான மின்சாரத்தை வழங்கியது மின்சாரத் துறை!

பொதுமக்களுக்கு எந்தவித இடைஞ்சலும் இல்லாமல் பார்த்துக் கொண்டது நம்முடைய காவல்துறை!

இதைத்தான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி என்று நாம் சொல்கிறோம். எல்லார்க்கும் எல்லாம் சொல்கிறோம் அல்லவா அதுதான் திராவிட மாடல் ஆட்சி. எல்லோரும் சேர்ந்து ஒருங்கிணைந்து செயல்பட்ட காரணத்தால்தான் இந்த வெற்றியை நம்மால் பெற முடிந்திருக்கிறது.

மழை வெள்ளக் காலத்தில் மக்களிடத்தில் நல்ல பெயர் எடுப்பது மிகமிக சிரமம். அதில் எனக்கு நிறைய அனுபவம் உண்டு. காரணம், நானும் இந்த மாநகராட்சியின் மேயராக இருந்தவன், ஒரு முறையல்ல, இரண்டு முறை, கிட்டத்தட்ட ஏழாண்டு காலம் இருந்தவன். சென்னையில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வார்டும் எனக்குத் தெரியும், ஏன் ஒவ்வொரு தெருவும் எனக்குத் தெரியும்.

மழை நின்ற பிறகு மட்டுமல்ல, மழை பெய்துகொண்டு இருக்கும்போதே ரெயின்கோட் போட்டுக் கொண்டு, நம்முடைய கமிஷனரை, நம்முடைய அலுவலரை அழைத்துக்கொண்டு, அந்தப் பணிகளையெல்லாம் நேரடியாகப் பார்த்தவன் நான். இப்போதும் அப்படித்தான். எனக்கு முன்னால் அதிகாரிகளும், அலுவலர்களும், தூய்மைப் பணியாளர்களும் இருப்பார்கள். நான் மட்டுமல்ல, அவர்களும் மழையில் நனைந்தபடியே பணியாற்றியவர்கள்தான்.

இதுதான் மக்கள் பணி. சுருக்கமாக ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால், இதுதான் கலைஞருடைய பணி, கலைஞருடைய பாணி. ஒரு சம்பவம் நடந்தவுடனே, அந்த இடத்திற்குப் போய்விட வேண்டும், பாதிக்கப்பட்ட மக்களைச் சென்று பார்க்க வேண்டும், அவர்களுக்கு நாம் ஆறுதல் சொல்ல வேண்டும் என்று என் மனம் துடிக்கிறது என்றால், அதற்குக் காரணம் தலைவர் கலைஞர் ஊட்டிய அந்த உணர்வுதான். அப்படி மக்களோடு மக்களாக நின்று கடமையாற்றிய உங்கள் அனைவரையும் இந்த நேரத்தில் நான் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

அரசாங்கத்தில் வேலை பார்க்கிறோம், சம்பளம் வருகிறது என்று இல்லாமல், மக்களுக்காக பணியாற்றுகிறோம் என்கிற அந்த சேவை மனப்பான்மை உள்ளத்தோடு இருக்கக்கூடிய நிலையில் நீங்கள் பணியாற்றிய காரணத்தில்தான் இந்தப் பாராட்டும், இந்தப் பெருமையும், இந்தப் புகழும் இன்றைக்கு இந்த அரசாங்கத்திற்கு, இந்த மாநகராட்சிக்கு, நமக்கெல்லாம் வந்து சேர்ந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக, தூய்மைப் பணியாளர்களின் பணி என்பது மிகமிக மகத்தான ஒன்று என்பதை நான் இங்கே பெருமையோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

துப்புரவுப் பணியாளர்கள் என்ற அந்த சொல்லையே, தூய்மைப் பணியாளர் என்று மாற்றியது தலைவர் கலைஞர் அவர்கள்தான். அந்தப் பணியின் கடினமான தன்மையை ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய நீங்கள் சிறப்பாகப் பணியாற்றியிருக்கிறீர்கள். அதனால்தான் இந்த முகமலர்ச்சியோடு நம்முடைய அரசாங்கத்தை மக்கள் பார்க்கிறார்கள்.

2021ஆம் ஆண்டு நமது அரசு பொறுப்பேற்றதும் பருவமழையின்போது மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும், வெள்ள மீட்பு மற்றும்

நிவாரணப் பணிகளையும் பல முறை முதலமைச்சர் என்ற முறையில் நேரடியாகப் பார்வையிட்டு, ஆய்வு செய்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி, அந்த இடங்களில் உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தினேன்.

அதேபோல, அமைச்சர் அவர்களும் எந்த அளவிற்கு பணியாற்றினார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். இதையெல்லாம் பார்த்த காரணத்தினால், இனி வரக்கூடிய காலக்கட்டங்களில் மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து சென்னை மாநகருக்கு நிரந்தர தீர்வினை உருவாக்க வேண்டும் என்று ஒரு முடிவு எடுத்தோம். அப்படி முடிவெடுத்த காரணத்தினால்தான் ஒரு ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி திருப்புகழ் அவர்கள் தலைமையில் ஒரு வல்லுநர் குழுவை நாம் நியமித்து, ஒரு மேலாண்மைக்குழுவாக அதை உருவாக்கி, அந்தக் குழு சென்னையில் பாதிக்கப்பட்ட அந்தப் பகுதிகளை எல்லாம் பார்வையிட்டு, வெள்ளம் பாதித்த இடங்களையெல்லாம் ஆய்வு செய்து, அந்தப் பகுதிகளில் இருக்கக்கூடிய மக்களிடத்திலும் ஆய்வு செய்து, அதற்கு பிறகு அவர்கள் அறிக்கையை கிட்டத்தட்ட மூன்று கட்டங்களாக நம்முடைய அரசிடம் வழங்கினார்கள்.

ஆக, இந்தக் குழுவின் ஆலோசனைப்படி, நம்முடைய மாநகரில் பல்வேறு பகுதிகளில் மழைநீர் வடிகால்கள் அமைக்க பல்வேறு திட்டங்களை நாம் உருவாக்கினோம், அதற்காக நிதி ஒதுக்கீடு செய்தோம். பருவமழை துவங்குவதற்கு முன்பே இந்தப் பணிகளை முடிக்க உத்தரவு வழங்கினோம். அதன்படி, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.254.67 கோடி மதிப்பீட்டில், 57 கிலோ மீட்டர் நீளத்திற்கும்;

வெள்ள நிவாரண நிதியின் கீழ், ரூ.291.06 கோடி மதிப்பீட்டில், 107.57 கிலோ மீட்டர் நீளத்திற்கும்;

உட்கட்டமைப்புகள் மற்றும் வசதிகள் நிதியின் கீழ், ரூ.26.28 கோடி மதிப்பீட்டில், 10 கீலோ மீட்டர் நீளத்திற்கும்;

மூலதன நிதியின் கீழ், ரூ.7.41 கோடி மதிப்பீட்டில், 1 கீலோ மீட்டர் நீளத்திற்கும் மாநகரின் பிரதான பகுதிகளில் புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்றது.

ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியோடு கொசஸ்தலையாறு வடிநிலப் பகுதிகளில் ரூ.3,220 கோடி மதிப்பில், 769 கிலோ மீட்டர் நீளத்திற்கும்;

ஜெர்மன் பன்னாட்டு வங்கி நிதி உதவியின்கீழ் கோவளம் வடிநிலம் பகுதிகளில் ரூ.1,714 கோடி மதிப்பீட்டில், 360 கீலோ மீட்டர் நீளத்திற்கும்;

உலக வங்கி நிதி உதவியோடு விடுபட்ட இடங்களில் ரூ.120 கோடி மதிப்பீட்டில், 44.88 கிலோ மீட்டர் நீளத்திற்கும், புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்கக்கூடிய பணிகள் நடைபெற்று வருகின்றது.

2021ஆம் ஆண்டு பருவமழையின்போது பெற்ற அனுபவத்தைக் கொண்டு, உடனடியாக நாம் எல்லா வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் குறுகிய காலத்தில் செய்து முடித்தோம். அதன் பயனை 2022ஆம் ஆண்டு பருவமழையின்போது கண்கூடாகப் பார்த்தோம். இனிவரும் ஆண்டுகளில், மழைநீர் தேக்கம் இல்லாத பருவமழைக் காலங்களை சென்னை வாழ் மக்கள் நிச்சயமாக பார்க்க இருக்கிறார்கள். இந்த அரசு மேலும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்கள் மகிழ்ச்சியே நமது இலக்கு.

அந்த இலக்கை நோக்கியே நாம் செயல்பட்டு வருகிறோம்.

நான் பலமுறை சொன்னதுண்டு. நம்பர் ஒன் முதலமைச்சர் -

நம்பர் ஒன் தமிழ்நாடு

ஆகிய உயர்வும் பாராட்டும் என்பது ஒரு பக்கம் என்று சொன்னால், அந்தப் பாராட்டு தனிப்பட்ட ஸ்டாலினுக்கு கிடைத்த பாராட்டாக நான் கருதவில்லை. ஒரு நாளும் அப்படி நினைக்கமாட்டேன். உங்களுடைய ஒவ்வொருவருடைய உழைப்பால்தான் அந்த பாராட்டும், அந்த பெருமையும் நமக்கு கிடைத்திருக்கிறது. அதை ஊருக்கு உணர்த்துவதற்காகத்தான் இந்தப் பாராட்டு விழாவை இன்றைக்கு நாம் வெளிப்படையாக நடத்திக் கொண்டிருக்கிறோம்.

இப்படி பாராட்டும் உள்ளம் அனைவருக்கும் வந்தாக வேண்டும். பாராட்டுவதை வெளிப்படையாகப் பாராட்ட வேண்டும்.

வெளிப்படையாகப் பாராட்டினால்தான், அறிவுறுத்தவும், கேள்வி கேட்கவும் நாம் உரிமை பெற்றிட முடியும். அந்த வகையில்,

- பெருநகர சென்னை மாநகராட்சி
- சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம்
- நீர்வளத்துறை
- நெடுஞ்சாலைத்துறை
- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்
- காவல்துறை

ஆகிய துறைகளின் அலுவலர்கள், பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள் ஆகிய அனைவரையும் நான் இந்த நேரத்தில் மனதாரப் பாராட்டுகிறேன்.

திரு. நேரு அவர்கள் ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்கிறார் என்றால் பிரமாண்டமாக இருக்கும். ஏன் இதை சொல்கிறேன் என்று சொன்னால், அறுசுவை உணவு எப்போதும் இருக்கும் அவருடைய நிகழ்ச்சியைப் பொறுத்தவரைக்கும். அந்த வகையில் அனைவரும் உணவு உண்டு, நிறைவோடு செல்லுமாறு சென்னை மாநகராட்சி நிருவாகத்தின் சார்பில் உரிமையோடு நான் உங்களை எல்லாம் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடன் சேர்ந்து, உங்களில் ஒருவனாக நானும் உங்களோடு இந்த பந்தியில் அமர்ந்து உணவருந்திச் செல்ல இருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, மீண்டும் அத்தனை பேருக்கும், என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி வணக்கம்!

அன்று...

அரசு ஏழை, எளிய மக்களை நாடிச்சென்று அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும், எல்லோருடைய வியாதிகளைப் பற்றியும் முன்கூட்டியே அறிந்து பரிசோதனை செய்து சிகிச்சை உடனடியாக அளிக்கத் தேவைப்பட்டால் அளித்து, தொடர்ந்து அளிக்கப்பட வேண்டுமேயானால் அதற்கான வழிவகைகளையும் காண்பித்து செயல்படக்கூடிய **"அரசு நல வாழ்வு - வருமுன் காப்போம்"** திட்டத்தை மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் **மு.கருணாநிதி** அவர்கள் 29.11.1999 அன்று திருவள்ளூர் மாவட்டம், பாடியநல்லூரில் தொடங்கி வைத்தார்.

இன்று...



பொதுமக்களின் வீட்டிற்கே நேரடியாகச் சென்று தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகளை செய்தல், தேவைப்படும் மருந்துகள் வழங்குதல், இயன்முறை சிகிச்சை, இயலா நோயாளிகளுக்கு வழங்கக்கூடிய வலி நிவாரணம், ஆதரவு சிகிச்சை ஆகியவற்றை உள்ளடக்கிய மருத்துவச் சேவைகள் அளிக்கப்படும் **"மக்களைத்தேடி மருத்துவம்"** திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.08.2021 அன்று கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி ஊராட்சி ஒன்றியம், சாமனப்பள்ளி கிராமத்தில் தொடங்கி வைத்தார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 127ஆவது பிறந்தநாள்

படமும் செய்தியும்

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் அவர்களின் 127ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, 23.01.2023 அன்று சென்னை காமராசர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலையின் கீழ் வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. பரந்தாமன், திரு. த.வேலு, மாநகராட்சி துணை மேயர் திரு. மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. ஆர்.செல்வராஜ், இ.ஆ.ப., தேனாம்பேட்டை மண்டல குழுத் தலைவர் திரு. எஸ்.மதன் மோகன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் (செய்தி) திரு. சிவ.சு.சரவணன் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

தியாகச் சீலர்களின் நினைவு மண்டபங்களை மேம்படுத்தும் பணிகள் குறித்து ஆய்வு

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் 24.01.2023 அன்று சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் கட்டப்பட்டுவரும் அயோத்திதாசப் பண்டிதர் நினைவு மண்டபம், வ.உ.சிதம்பரனார், மருது சகோதரர்கள், வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகியோரது சிலைகள் அமைக்கும் பணிகள் மற்றும் தியாகச் சீலர்களின் நினைவு மண்டபங்களை மேம்படுத்தும் பணிகள் ஆகியவற்றினை ஆய்வு செய்தார்கள்.



வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்ட 48,593 விவசாயிகளுக்கு ரூ.50.89 கோடி இடுபொருள் நிவாரணம்

- கடந்த 01.10.2022 முதல் 04.12.2022 வரையிலான வடகிழக்குப் பருவமழைக் காலத்தில் கனமழையினால் தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் அதிகமான பயிர்சேதங்கள் ஏற்பட்டன. குறிப்பாக, மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி, கொள்ளிடம் மற்றும் செம்பனார்கோவில் ஆகிய பகுதிகள் 03.11.2022 மற்றும் 11.11.2022 ஆகிய தினங்களில் பெய்த மிக பலத்த மழையினால் பயிர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.
- வரலாறு காணாத மழையால் பாதிக்கப்பட்ட மயிலாடுதுறை மற்றும் கடலூர் மாவட்டங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14.11.2022 அன்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். மேலும், நெற்பயிர்கள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதையடுத்து, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணத் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டிருந்தார்.
- இந்நிலையில், மழையால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் ஏற்பட்ட பயிர்சேத விவரங்களின் அடிப்படையில், மிக அதிகமாக பாதிக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்தில் 32,533.4630 ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டதன் அடிப்படையில் 40,031 விவசாயிகளுக்கு இடுபொருள் நிவாரணமாக ரூ.43.92 கோடி வழங்கிடவும், மேலும், கடலூர், திருவாரூர், அரியலூர் உள்ளிட்ட 26 மாவட்டங்களில் 5,222.192 ஹெக்டேர் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டதன் அடிப்படையில் 8,562 விவசாயிகளுக்கு இடுபொருள் நிவாரணமாக ரூ.6.96 கோடி வழங்கிடவும், என மொத்தம் ரூ.50.89 கோடியினை 48,593 விவசாயிகளுக்கு இடுபொருள் நிவாரணம் வழங்கிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் உத்தரவிடப்பட்டு, அதற்கான அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையம்

தமிழ்நாடு அரசால் சென்னையில் நடத்தப்பட்டு வரும் அகில இந்திய குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையத்தில், மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் அகில இந்திய குடிமைப் பணிகளில் அடங்கிய முதல்நிலை, முதன்மைத் தேர்வுகளை எதிர்கொள்ளும் தேர்வர்களுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, கிராமப்புரங்களில் உள்ள சமூக, பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஏழை, எளிய தேர்வர்களுக்கு பயனளிக்கும் வகையில் இப்பயிற்சி மையம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

இப்பயிற்சி மையத்தில் 2022ஆம் ஆண்டில் முதன்மைத் தேர்வுக்குப் பயின்ற மொத்தம் 76 தேர்வர்களில், 18 தேர்வர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்களில், இரண்டு தேர்வர்கள் தமிழை விருப்பப் பாடமாக தேர்வு செய்து தேர்ச்சி பெற்றுள்ளனர். மேலும், அதிகபட்ச ஆர்வலர்கள் புவியியல் பாடத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனர். மொத்த தேர்ச்சி பெற்றுள்ளவர்களில் ஐந்து மகளிர், 13 ஆண்கள் ஆவர். இதில் ஒருவர், மாற்றுத்திறனாளி பெண் ஆர்வலர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கு, 2022 ஜூன் 29 முதல் செப்டம்பர் 25 வரை உண்டு உறைவிடத்துடன் கூடிய தனி அறை வழங்கப்பட்டு, பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. தேர்வினை சிறந்த முறையில் எழுதுவதற்கு, பயிற்சி மையத்திலிருந்து தேர்வு மையத்திற்குச் சென்றுவர சிறப்புப் பேருந்து வசதி செய்து தரப்பட்டது. மேற்குறித்த காலத்திற்கு ஊக்கத்தொகையாக மாதம் ஒன்றுக்கு, தேர்வர் ஒருவருக்கு ரூ.3,000 வீதம் வழங்கப்பட்டது.

தற்போது, இம்மையத்தில் தேர்ச்சி பெற்றுள்ள மேற்குறித்த தேர்வர்களுக்கு, இப்பயிற்சி மையத்தின் மூலம் மாதிரி ஆளுமைத் தேர்வு பணியில் உள்ள மற்றும் ஓய்வு பெற்ற அகில இந்திய குடிமைப் பணி அலுவலர்களாலும், தலை சிறந்த வல்லுநர்களாலும் நடத்தப்பட உள்ளது. இது, தேர்ச்சி பெற்றுள்ள தேர்வர்கள், தங்களது ஆளுமைத் தேர்வை மிகச் சிறப்பான முறையில் எதிர்கொள்ள ஏதுவாக அமையும்.

தேர்ச்சி பெற்றுள்ள மேற்குறித்த தேர்வர்கள் தவிர, முதன்மைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள பிற தேர்வர்களும், இம்மையத்தால் நடத்தப்பட உள்ள மாதிரி ஆளுமைத் தேர்வில் பங்குபெற அனுமதிக்கப்படுவர். இதற்கென கட்டணம் ஏதும் செலுத்தத் தேவையில்லை. அவ்வாறு பங்கு பெற விரும்பும் தேர்வர்கள், தங்களது விருப்பத்தினை, aicscc.gov@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது 9444286657 என்ற புலன எண்ணிற்கோ (வாட்ஸ்-அப்) அல்லது 044 - 24621909 என்ற தொலைபேசி எண்ணிற்கோ தொடர்பு கொண்டு விவரங்களைத் தெரிவிக்கலாம். மாதிரி ஆளுமைத் தேர்விற்கான தேதி குறித்த விவரங்கள் இம்மையத்தின் www.civilservice coaching.com என்ற இணையதளத்தில் விரைவில் அறிவிக்கப்படும்.

இம்மையத்தின் மூலம் டெல்லியில் நடைபெறும் ஆளுமைத் தேர்விற்கு செல்லும் தேர்வர்களுக்கு, பயணச் செலவுத் தொகையாக ஆண்டுதோறும் ரூ.5,000 வழங்கப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு இலவச மின் இணைப்பு வழங்கும் திட்டத்தால் பயனடைந்த விவசாயிகளின் நெஞ்சம் நிறைந்த பாராட்டுகள்...

- ஓர் பார்வை...



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மாநிலத்தின் விவசாய உற்பத்தியினைப் பெருக்கிட விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் தமிழ்நாடு மின்சார வாரியம் - மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம் - மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் சார்பாக ஒரு இலட்சம் மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தைத் கடந்த 23.09.2021 அன்று சென்னையில் துவக்கி வைத்து விவசாயிகளுக்கு மின் இணைப்புகளைப் பெறுவதற்கான ஆணைகளை வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு அரசு எரிசக்தித்துறை மானிய கோரிக்கை எண்.14இன்படி 2021-2022ஆம் வருடத்திற்கு ஒரு இலட்சம் புதிய இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி, ஓசூர் மற்றும் போச்சம்பள்ளி ஆகிய கோட்டங்களில் சாதாரண வரிசை திட்டத்தில் 01.04.2004 முதல் 31.03.2006 வரை விண்ணப்பம் பதிவு செய்துள்ள 2,619 நபர்களுக்கும், ரூ.25,000 சுயநிதி திட்டத்தில் 31.03.2012 வரை முன் தொகை செலுத்தியுள்ள 3,265 நபர்களுக்கும், ரூ.50,000 சுயநிதி திட்டத்தில் 31.03.2012 வரை முன் தொகை செலுத்தியுள்ள 575 நபர்களுக்கும், ரூ.10,000 சுயநிதி திட்டத்தில் 01.04.2006 முதல் 31.03.2007 வரை விண்ணப்பம் பதிவு செய்துள்ள 62 நபர்களுக்கும், தட்கல் சுயநிதித் திட்டத்தில் 1,789 நபர்களுக்கும், ஏனைய அரசு திட்டங்களில் 76 நபர்களுக்கும் ஆக மொத்தம் 8,386 நபர்களுக்கு நடப்பாண்டில் மின் இணைப்பு வழங்க ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ், பயன்பெற்ற பயனாளி பர்கூர் ஊராட்சி ஒன்றியம், மருதேப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திருமதி பூங்கொடி,

திருமதி பூங்கொடி

க/பெ.கோவிந்தன் அவர்கள் (மின் இணைப்பு எண்: 190–051–1539, கைபேசி எண்: 9994079265) தெரிவிக்கும் போது,

எங்கள் குடும்பத்திற்குச் சொந்தமாக 3 ஏக்கர் நிலம் உள்ளது. எனக்கு ஒரு மகன் மற்றும் மூன்று பெண் குழந்தைகள் உள்ளனர். அனைவருக்கும் திருமணம் முடிந்த நிலையில் நான் எனது கணவர் எங்களுக்குச் சொந்தமான விவசாய நிலத்தில் நிலக்கடலை, பருத்தி, துவரை பயிர் செய்து வருகிறோம். எங்கள் விவசாய நிலத்தில் கிணறு உள்ள நிலையில் டீசல் மோட்டார் வைத்து வீட்டிற்குத் தேவையான நெல் பயிர் செய்து வந்தோம். தற்பொழுது டீசல் விலை அதிகரித்துக் கொண்டே செல்வதால் எங்களால் டீசல் வாங்கி விவசாயம் செய்ய இயலவில்லை. நாங்கள் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு இலவச மின்சாரம் வேண்டி போச்சம்பள்ளி செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்தோம். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்று குறைந்த மாதத்திலேயே எங்களைப் போன்ற விவசாயிகளின் நிலை அறிந்து வருடத்திற்கு ஒரு இலட்சம் மின் இணைப்பு வழங்கப்படும் என உத்தரவிட்டிருந்தார்கள். அதனடிப்படையில், ஒரு இலட்சம் புதிய இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின்கீழ் எனக்கு இலவச விவசாய மின் இணைப்பு வழங்கியுள்ளார்கள். முதலமைச்சராக பொறுப்பேற்ற 6 மாத காலத்தில் எங்களைப் போன்ற விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்க உத்தரவிட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்கள் குடும்பத்தின் சார்பாக மனதார நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனி வருங்காலத்தில் நெல், வாழை, மஞ்சள் போன்றவற்றை பயிர் செய்ய விருப்பமாக உள்ளது எனத் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்கீழ், பயன்பெற்ற பயனாளி பர்கூர் ஊராட்சி ஒன்றியம், ஒரப்பம் ஊராட்சி, சூரன்குட்டை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி திரு. ஆர்.எல்லப்பன் அவர்கள் (மின் இணைப்பு எண்: 190–002–2800, கைபேசி எண்: 9843886108) தெரிவிக்கும் போது,

எங்கள் குடும்பத்திற்கு பாரம்பரிய மேட்டு நிலமாக 4.50 ஏக்கர் நிலம் உள்ளது. எனக்கு மனைவி மற்றும் ஒரு மகன் உள்ளார். மகன் தற்போது எம்.எஸ்.சி.அக்ரி படித்து வருகிறார். எங்களுக்குச் சொந்தமான நிலத்தில் துவரை, சோளம், அவரை, நிலக்கடலை பயிர் செய்து வந்தோம். இலவச மின்சாரம் வேண்டி நீண்ட வருடங்களுக்கு முன்பு போச்சம்பள்ளி மின்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்திருந்தோம். வீட்டு செலவு மற்றும் விவசாய செலவுகளுக்கு நிலத்தில் விளையும் பொருட்களையே நம்பி விவசாயம் செய்து வந்தோம். தற்போது அதற்கு முத்தாய்பாய் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அய்யா அவர்கள் விவசாயிகளின் நலன் கருதி எங்களைப் போன்ற விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான இலவச மின்சாரம் விரைந்து கிடைக்க நடவடிக்கை எடுத்துள்ளார்கள். எனக்கு கடந்த ஆண்டு இலவச மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது 950 அடி ஆழ்துளைக் கிணறு அமைத்துள்ளேன். மின் இணைப்பு பெற்ற எங்கள் குடும்பத்திற்கு மிக்க மகிழ்சியாக உள்ளது. வருங்காலத்தில் எங்கள் நிலத்தில் நெல், மஞ்சள், காய்கறி வகைகள் பயிர் செய்ய உள்ளேன். அதற்காக நிலங்களை சமன்படுத்தும் பணிகள் செய்து வருகிறேன். தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்று 6 மாத காலத்திற்குள்ளே விவசாயிகளின் நலன் கருதி இலவச மின் இணைப்பு வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எனது குடும்பத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர்.எல்லப்பன்

இத்திட்டத்தின்கீழ், பயன்பெற்ற பயனாளி ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், சந்திரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி திருமதி சித்ரா, க/பெ.வரதன் அவர்கள் (மின் இணைப்பு எண் : 136–014–433) நம்மிடம் கூறும்போது,

நான் எனது குடும்பத்துடன் சந்திரபட்டி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் எனது கணவருடன் எங்களுக்குச் சொந்தமான 2.25 ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறோம். எனக்கு ஒரு பெண் குழந்தை இருந்த நிலையில் அவருக்கும் திருமணம் செய்துவிட்டோம். இரு கறவை மாடுகள் வைத்துக்கொண்டு எங்கள் நிலத்தில் நிலக்கடலை,

திருமதி சித்ரா

கால்நடைகளுக்குத் தேவையான சோளபயிர், துவரை, அவரை ஆகியவை பயிர் செய்து வந்தோம். எங்கள் நிலத்தில் கிணறு உள்ள நிலையில் மின் இணைப்பு இல்லாமல் இருந்தது. இலவச மின்சாரம் வேண்டி நீண்ட வருடங்களுக்கு முன்பு ஊத்தங்கரை மின் பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பம் செய்திருந்தோம். தற்போது எங்களுக்கு ஒரு இலட்சம் புதிய இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின்கீழ் இலவச மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. கிணற்றில் போதுமான தண்ணீர் உள்ள நிலையில் நெல் பயிர், மக்காச் சோளம் மற்றும் குச்சிகிழங்கு பயிர் செய்ய உள்ளோம். இலவச மின்சாரம் கிடைக்க வழிவகை செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அய்யா அவர்களுக்கு எங்கள் குடும்பத்தின் சார்பாக நெஞ்சம் நிறைந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வெங்கடேசன்

இத்திட்டத்தின்கீழ், பயன்பெற்ற பயனாளி ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியம், சந்திரப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி திரு.வெங்கடேசன் த/பெ. பைரகவுண்டர் அவர்கள் (மின் இணைப்பு எண் :136–014–432) நம்மிடம் தெரிவிக்கும்போது,

நான் சந்திரப்பட்டி கிராமத்தில் எனது விவசாய நிலத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். எனக்கு சொந்தமாக 3.50 ஏக்கர் நிலம் உள்ளது. எனது நிலத்தில் சோளம், நிலக்கடலை மற்றும் 20க்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் உள்ளது. மழையை நம்பி தான் இதுவரை விவசாயம் செய்து வந்தோம். எங்கள் நிலத்தில் கிணறு உள்ளது. ஆனால் மின் இணைப்பு இல்லாமல் இருந்தது. இலவச மின்சாரம் வேண்டி நீண்ட வருடங்களுக்கு முன்பாக விண்ணப்பம் செய்திருந்தேன். தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்று குறைந்த காலத்திலேயே விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையான இலவச மின்சாரம் இணைப்பு விரைந்து வழங்க ஆணையிட்டு தற்போது தமிழகம் முழுவதும் இலவச மின் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி, ஒரு இலட்சம் புதிய இலவச விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தின்கீழ் எனக்கு இலவச விவசாய மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இனி வருங்காலங்களில் நெல், பருத்தி, காய்கறிகள் பயிர் செய்ய உள்ளேன். இலவச மின் இணைப்பு எப்போழுது கிடைக்கும் என்று ஏங்கி இருந்த எனக்கும் என்னைப் போன்ற விவசாயிகளுக்கு இலவச விவசாய மின் இணைப்பு வழங்கி விவசாயிகளின் வயிற்றில் பால் வார்த்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு விவசாயிகள் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தொகுப்பு :
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களைக் காக்கும் பயனுள்ள திட்டம் இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48 திட்டம்

மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், சிறுவயதிலேயே இருதய பாதிப்பு ஏற்பட்ட மாணவ, மாணவியர்களில் கட்டாய இருதய அறுவை சிசிக்சை தேவைப்படுபவர்களுக்காக 2008ஆம் ஆண்டில் தொடங்கி வைத்த இளம் சிறார் இருதய பாதுகாப்புத் திட்டத்தின்படி, பள்ளிகளில் முகாம்கள் நடத்தப்பட்டு இருதய கோளாறுகள் இருந்த மாணவ, மாணவியர்களுக்குத் தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு உயிர் காக்கப்பட்டார்கள்.

இதுபோன்ற சிகிச்சை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பொதுமக்களுக்கும் கிடைக்க ஏற்படுத்தப்பட்ட திட்டம்தான் உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் ஆகும்.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் ஆரோக்கியத்தைப் பாதுகாத்திடும் வகையில் மக்களைத்தேடி மருத்துவம் திட்டத்தைச் செயல்படுத்தினார். இத்திட்டத்தின்கீழ், நாமக்கல் மாவட்டத்தில் இதுவரை 1,18,000க்கும் மேற்பட்டோர் சிகிச்சை மற்றும் மருந்து, மாத்திரைகள் பெற்று வருகின்றனர்.

எதிர்பாராத வகையில் சாலைகளில் ஏற்படும் விபத்துகளில் பாதிக்கப்பட்ட நபர்களின் இன்னுயிரைப் பாதுகாத்திடும் விதமாக "இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48" திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2021 அன்று துவக்கி வைத்துள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் "இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் - 48 திட்டத்தின்கீழ் நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, அரவிந்த மருத்துவமனை, நாமக்கல் சிஎம் மருத்துவமனை, நாமக்கல் மகாராஜா சிறப்பு மருத்துவமனை, நாமக்கல் மாணிக்கம் மருத்துவமனை, நாமக்கல் மாருதி மருத்துவமனை, நாமக்கல் ஸ்ரீ அக்ஷயா மருத்துவமனை, நாமக்கல் தங்கம் மருத்துவமனை, நாமக்கல் வேலவன் மருத்துவமனை, ராசிபுரம் அரசு மருத்துவமனை, ராசிபுரம் சுகம் மருத்துவமனை, திருச்செங்கோடு அரசு மருத்துவமனை, திருச்செங்கோடு விவேகானந்தா மெடிக்கல் கேர் மருத்துவமனை, பரமத்திவேலூர் அரசு மருத்துவமனை, குமாரபாளையம் அரசு மருத்துவமனை, சேந்தமங்கலம் அரசு மருத்துவமனை, கொல்லிமலை அரசு மருத்துவமனை ஆகிய 17 மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் 'இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48" திட்டத்தின்கீழ் இத்திட்டம் தொடங்கிய நாள் முதல் சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்ட 46 நபர்களுக்கு ரூ.5,45,300 மதிப்பில் மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர் காக்கப்பட்டுள்ளார்கள்.

இத்திட்டத்தில் பயனடைந்த பயனாளிகளின் உறவினர்கள் கூறியதாவது,

நாமக்கல் - திருச்சி சாலையில் பாரதிபுரம் பஸ் நிறுத்த பகுதியில் இருசக்கர வாகனத்தில் சென்றபோது, கார் மோதி விபத்துக்குள்ளான திரு.காளிமுத்து என்பவர் உறவினர்களால் 108 அவசர சிகிச்சை ஊர்தியில் கொண்டுவரப்பட்டு, நாமக்கல் நகரில் இன்னுயிர் காப்போம் திட்ட தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இவருக்கு தலைக்காயம், முதுகுப்பகுதி, வலது கால் பாதம் மற்றும் தாடையில் ஏற்பட்ட காயங்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர் காக்கப்பட்டுள்ளது.



பாதிப்புகள் குறித்து அறிந்துகொள்ள முதுகு தண்டுவடம், வயிறு, இடுப்பு பகுதிகளில் எஸ்கேன் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மார்பு பகுதியில் எக்ஸ்-ரே பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு.காளிமுத்துவுடன் இருந்த அவரது மகள் திருமதி தாமரை அவர்கள் தெரிவித்ததாவது,

"எனது அப்பா, எனது அக்காவின் வீட்டிற்குச் செல்லும்போது ஆம்னி கார் மோதி கீழே விழுந்து மயக்கமடைந்துவிட்டார். அருகில் இருந்தவர்கள் மற்றும் எனது உறவினர்கள் 108இல் கொண்டுவந்து இந்த

திரு.காளிமுத்து

மருத்துவமனையில் சேர்த்தார்கள். இங்கு சிகிச்சை அளித்து, இப்போ எங்க அப்பா நல்லாயிருக்காங்க செலவு எவ்வளவு வருமோ, காசுக்கு என்ன பண்ணறதுன்னு பயந்துகிட்டு இருந்தோம். கட்டணமில்லா 5 சிகிச்சைன்னு சொன்னாங்க, விபத்துல பாதிச்சவங்களுக்கு கட்டணமில்லா சிகிச்சை வழங்க உத்தரவிட்ட ஸ்டாலின் ஐயாவுக்கு ரொம்ப நன்றி என்று தெரிவித்தார்.

பேத்தி பிறந்ததைப் பார்க்க இரு சக்கர வாகனத்தில் வந்தபோது கார் மோதியதில் விபத்திற்குள்ளான திருமதி.சுப்பம்மாள் அவர்கள், 108 அவசர சிகிச்சை ஊர்தியில் கொண்டுவரப்பட்டு நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இன்னுயிர் காப்போம் திட்டத்தின்கீழ் சிகிச்சை பெற்று வருகிறார். இவருக்குத் தலையில் காயம், நெஞ்சு வலி, வயிறு வலி இருந்ததால் தலை, நெஞ்சு, வயிற்றுப் பகுதிகளில் சி.டி. ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர்காக்கப்பட்டுள்ளார். மேலும், காயங்களுக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அவரது மகள் தெரிவிக்கையில், "எனது ஊர் புதுக்கோட்டை, பேரு மகேஸ்வரி எங்க பொண்ணுக்கு குழந்தை பிறந்ததை எங்கம்மா பார்க்க வந்தாங்க மேய்க்கல்நாயக்கன்பட்டி செக்போஸ்ட் பக்கத்துல கார்காரங்க இடிச்சுட்டு போயிட்டாங்க. எங்க அம்மா அடிபட்டு ரோட்டுல கிடந்தாங்க. 108இல் கூட்டிட்டு வந்து ஆஸ்ப்பிட்டல்ல வச்சிருக்காங்க. இப்ப எங்கம்மா உயிர காப்பாத்திட்டாங்க", என்று தெரிவித்தார்.

நாமக்கல், மோகனூர் சாலையில் லிட்டில் ஏஞ்சல் பள்ளி அருகில் சாலையில் சென்று கொண்டிருந்தபோது இரண்டு சக்கர வாகனம் மோதி விபத்துக்குள்ளான திருமதி முத்தம்மாள் அவர்கள் அவசர சிகிச்சை ஊர்தியில் கொண்டு வரப்பட்டு, நாமக்கல் நகரில் இன்னுயிர் காப்போம் திட்ட தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். இவருக்குத் தலைக்காயம், இடது முழங்கை முறிவு, இடது மூட்டு முறிவு, மார்பகத்தில் காயம் ஆகியவற்றிற்காக சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர் காக்கப்பட்டுள்ளது. தலை மற்றும் மூட்டு பகுதிகளில் சிடி ஸ்கேன் பரிசோதனையும், மார்பகம் மற்றும் முழங்கை பகுதிகளில் எக்ஸ்ரே பரிசோதனையும் செய்யப்பட்டுள்ளது.

திருமதி முத்தம்மாள் அவர்களுடன் இருந்த அவரது பேத்தி தீபனா அவர்கள் தெரிவித்ததாவது.

"நான் வேளாண்மைக் கல்லூரியில் படித்து வருகிறேன். எனது பாட்டி முத்தம்மாள், அணியாபுரம் - மோகனூர் ரோட்டில் போகும்போது ஆக்சிடெண்ட் ஆயிடுச்சு. எதிரில் வந்த ஒரு பெண் டூவீலரில் ஹிட் பண்ணிட்டாங்க. நாங்க நாமக்கல் சி.எம். ஹாஸ்பிட்டல்ல சேர்த்தோம். நர்ஸ், டாக்டர் எல்லாம் அக்கறையோடு பார்த்துக்கிட்டாங்க. அப்போ டாக்டர் கட்டணமின்றி 48 மணி நேரம் சிகிச்சை வழங்கப்படுவது சொன்னாங்க. 48 மணிநேரத்திற்கு எந்த ஒரு கட்டணமும் கிடையாதுன்னு சொன்னங்க. இப்போ எங்க பாட்டி

திருமதி முத்தம்மாள்

நல்லாயிருக்காங்க. சாலை விபத்துல பாதிக்கப்பட்ட காசு இல்லாதவங்களுக்கு இந்தத் திட்டம் பயனுள்ளதாக உள்ளது. விபத்துல பாதிக்கப்பட்டவங்களுக்கு கோல்டன் பீரியட்ல உடனடி சிகிச்சை வழங்க வேண்டியபோது, பணமில்லாமல் சிகிச்சை அளிப்பது ரொம்பவும் உதவிகரமானது. இத்திட்டத்தைக் கொண்டுவந்த முதலமைச்சர் ஸ்டாலின் ஐயாவிற்கு நன்றி," என்று தெரிவித்தார்.

தொகுப்பு :
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
நாமக்கல் மாவட்டம்.

புதுதில்லியில் 26.01.2023 அன்று நடைபெற்ற குடியரசு தினவிழாவில் தமிழ்நாடு அரசின் சார்பில்,
பெண்களின் முன்னேற்றம், கலாச்சாரத்தை எடுத்துரைக்கும் வகையில் பங்கேற்ற அலங்கார ஊர்தி.

தமிழரசு
Tamilarasu

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 10.01.2023 அன்று, 2022ஆம் ஆண்டு நியூசிலாந்து நாட்டின், ஆக்லாந்தில் நடைபெற்ற காமன்வெல்த் வலுதூக்கும் பதக்கங்களை வென்ற 13 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளார்.

Published by D.MOHAN, I.A.S., on behalf of Information and Public Relations Department Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS, Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor : D.MOHAN, I.A.S.,